கறொல் வொய்திவா

# நகையகம்



தமிழாக்கம் நீ.மரிய சேவியர் அடிகள்

திருமறைக் கலாமன்றம்

கறொல் வொய்திவா

# நகையகம்

தமிழாக்கம்:

நீ. மரிய சேவியர் அடிகள்

திருமறைக் கலாமன்றம்

கறொல் வொயதிவா இயற்றிய

இந் நூலை

போலிஷ் மொழியிலிருந்து

ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்தவர்

பொ.தபொர்ஸ்கி [Boleslaw Taborski]

நூற் பெயர்

The Jeweler's Shop

ஆண்டு

1980

அச்சகம்

Libreria Editrice Vaticana, Vatican City

தமிழில்

நீ. மரிய சேவியர் அடிகள்

முதற் பதிப்பு

2007 இயேசு உயிர்ப்பு விழா

அட்டைப்படம்

ஓவியர் அ. இராசையா

வெளியீடு

திருமறைக் கலாமன்றம்

அச்சகம்

லங்கா பப்ளிஷிங் ஹவுஸ், கொழும்பு-13

ISBN : 955-9262-31-9

இந்நூலை அச்சேற்றுவதற்கு உதவிய
அருள்திரு. கமில்லஸ் நிமலன், செல்வி அ. குயின் ஜான்சி,
செல்வி பி. ஸ்ரெலா, திருமதி நி. ஞானமணி, திருமதி. அ. ஜெனோவா,
திரு. அ. யூட்சன், திரு. அருள் மா. இராஜேந்திரம், திரு. பி. எஸ். அல்பிரட்,
திரு. ரா. ஆறுமுகம், திரு. ரா. ரஜனிகாந்த், திரு. செ. சக்திதரன்,
திரு. கி. செல்மர் எமில், ஓவியர் அ. இராசையா அனைவர்க்கும்
நன்றி

# என்னுரை

நகையகம் என்னும் இந்நூல் ஏட்டு ஆண்டுகளுக்கு முன் என்னால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அச்சேற்றுவதற்குரிய அனுமதியும் வத்திக்கானிலிருந்து பெறப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உயிருடன் இருந்தபோது வெளியிடவேண்டும் என்ற எனது கனவு பல்வேறு வேலைப் பளுக்களுக்கிடையில் நனவாக மாறவில்லை என்பது வருத்தத்துக்குரியது. 2004இல் திருமறைக் கலாமன்ற நடிக நடிகையர் குழு ஒன்று திருத்தந்தையை வத்திக்கான் புனித இராயப்பர் ஆலய முன்றலில் தனித் தனியே சந்தித்தபொழுது முதலாக இத்தமிழ் மொழிபெயர்ப்பை கையளிக்கவேண்டும் என்ற கனவு நிறைவேறவில்லை. இப்போது, திருமறைக் கலாமன்றத்தின் நாற்பத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்து ஒரு சில திங்களின் பின்பாவது அச்சேறிவிட்டதே என்பது மகிழ்ச்சிக்குரியது.

மூலநூல் கவிதை வடிவில் உள்ளமையின், அதன் முழு உயிர்த்துடிப்பையும் வசன நூலாக மொழிபெயர்க்கப்பட்ட இத் தமிழாக்கத்தில் காணமுடியாது என்பது சுட்டிக் காட்டப்படவேண்டும். பல பகுதிகள் சுதந்திரமான முறையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பொழுதும், மூலத்திலிருந்து விலகக்கூடாது என்பதால், பல இடங்களில் தமிழ் மணத்தை ஊட்டுவது கடினமாக இருந்தது.

இன்னும் ஒன்று: தமிழ் மொழிபெயர்ப்பில் மூல நூலில் உள்ள பெயர்கள் அப்படியே கையாளப்படுவது இன்று பொதுவான வழக்காகி உள்ளது. இருந்தும், இங்கு மூலப் பெயர்கள் மாற்றப்பட்டு தமிழ்ப் பெயர்கள் நாடக மாந்தர்களுக்கு இடப்பட்டுள்ளது.

இத்தமிழாக்கத்தை தமிழ்க்கூறும் நல்லுலகம் வரவேற்கும் என நம்புகின்றேன்.

நீ. மரிய சேவியர்

நீ . மரிய சேவியர் அடிகள்

சந்திப்பு



நூல் ஆசிரியருடன் திருமறைக் கலாமன்ற இயக்குநரும் கலைஞரும்

# உட்புகுமுன்

இரண்டாவது உலகப் போர் நடந்த காலம் ஐரோப்பிய நாடுகள் பல தமது சுதந்திரத்தை இழந்து, அடொல்வ் ஹிட்லரின் நாசி ஆட்சியின்கீழ் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தன. அத்தகைய ஆக்கிரமிப்பை அனுபவித்த நாடுகளில் ஒன்றுதான் போலந்து.

தன்மானம் நிறைந்த அந்நாட்டு மக்கள் நாசி அதிகாரத்துக்கு தமது எதிர்ப்பைப் பல வழிகளில் வெளிப்படுத்தினர். படையினர் ஒருசிலர் பிரித்தானிய நாட்டுடன் இணைந்து போரிட்டனர். வேறுசிலர் மறைமுக ஆயுதத் தாக்குதல்களில் ஈடுபட்டனர். கறொல் வொய்திவா போன்ற இளைஞர் சிலர் கலையைக் கருவியாகக் கொண்டு கருத்தியல் வகையான எதிர்ப்பைக் காட்டினர். இவர்கள், போலந்து வரலாற்றின் இலக்கியச் சுரங்கத்திலிருந்து கவிஞரின் படைப்புக்கள் பலவற்றை அகழ்ந்து எடுத்து நாடக நிகழ்ச்சிகளாக மாற்றி, அரங்குகளில் மேடையேற்றத் தடைப்பட்ட சூழ்நிலையில் வீடுகளில் இரகசியமாய் நடித்தனர். அந்நிகழ்ச்சிகளில் இருபதுக்கும் உட்பட்ட பார்வையாளர்களே கலந்து கொள்ள முடிந்தது. யூலியஸ் ஸ்வொவக்கியின் (1841–44) *பெனுஸ்க்கி*, ஆதாம் மிக்கிவிக்ஸ் உடைய (1834) *பான் தடேயுஸ்* போன்ற நீண்ட கவிதைகளும் நாடகங்களும் சுருக்கப்பட்டு அவைகளின் பிழிவு சிந்தனைக்கு விருந்தாக அளிக்கப்பட்டது. இச்செயற்பாடு அந்நியர்களின் அடக்கு முறைக்குள் அமுக்கப்பட்டிருந்த மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டும் செயற்பாடாக ஒரு புறமும், ஆட்சியாளரை மறை முகமாகத் தாக்கும் முயற்சியாக மறுபுறமும் இருந்தது.

இத்தகைய அரங்க வினைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழுக்களுள் முன்னணியில் திகழ்ந்தது "இறப்சொடிக் தியேட்டர்". இவ்வரங்கக் குழுவை 1941 இல் இருவர் உருவாக்கினர்: கறொல் வொய்திவா, மீச்சிஸ்வவ் கொட்லாசிக். அதில் மொத்தமாக ஐந்துபேர்தான் உறுப்பினராக இருந்தனர்.

மேற்கூறப்பட்ட இருவருள் கறொல் வொய்திவாவின் துடிப்பும் வேகமும் விவேகமும் இளைஞர் பலரின் கவனத்தை ஈர்த்தது. நடிப்பில் சிறுவயதிலிருந்தே ஆர்வம் கொண்ட இவர், வடவிசே என்னும் தமது பிறப்பிடத்தின் கல்விக்

கூடத்தில் நடைபெற்ற பல நாடகங்களில் நடித்தும் அவைகளிற் சிலவற்றை நெறிப்படுத்தியும் இத்துறையில் தமக்கெனத் தனி இடத்தைப் பிடித்திருந்தார். க்றக்குவ என்னும் நகரில், கல்லூரி மாணவனாக இருந்த காலகட்டத்திலும் நாடகமே கறொல் வொய்திவாவின் உயிர்த் துடிப்பாக விளங்கியது. அவர் மூன்று நாடகக் குழுக்களில் உறுப்பினராக இணைந்து செயற்பட்டார்.

இளம் வயதிலேயே பெற்றோரையும் உடன் பிறப்புக்களையும் இழந்து துன்புற்றபோது வாழ்வின் நம்பிக்கையையும் இறைபக்தியையும் தெப்பங்களாகக் கொண்டு வாழ்க்கை என்னும் கடலில் நீந்த உறுதிபூண்டார்.

1939இல் தமது பத்தொன்பதாவது வயதில் திருமறைநூல் சார்ந்த நாடகங்களை எழுதத் தொடங்கினார். *டாவிட்* (தாவீது) அவரது முதலாவது படைப்பு. 1940இல் *இயோப்* (யோபு) எழுதப்பட்டது. அதே காலகட்டத்தில், கிரேக்க நாடகவியலாளர் சொவ்வொக்கிளஸ் எழுதிய *ஈடிப்புஸ்* நாடகத்தை போலிஷ் மொழியில் மொழிபெயர்த்தார். அதே ஆண்டில், *ஜெறெமியா* (எரேமியாஸ்) என்னும் நாடகத்தையும் எழுதி முடித்தார்.

1940இன் இறுதியில் *எமது இறைவனின் உடன்பிறப்பு* என்னும் மேடை நாடகத்தை எழுதினார். கலை உலகிற்குப் பிரியாவிடை கொடுத்துவிட்டு ஏழை எளியவர்களுக்கு உதவும் பொருட்டு ஒரு துறவறச் சபையை நிறுவிய ஆதாம் கிமெவொஸ்க்கி என்னும் தலைசிறந்த ஓவியர் ஒருவரின் வரலாறைக் கூறுவது *எமது இறைவனின் உடன்பிறப்பு*. இதில் பல்வேறு கவிதை வடிவங்களும் நாடக வகைகளும் தேர்வு வகையில் கையாளப்பட்டிருந்தன.

நாடகக் கலையிலும் சொற்களை அழகுறப் பயன்படுத்துவதிலும் இத்தகைய ஈடுபாடு கறொல் வொய்திவாவுக்கு இருந்தது என்பதால் அந்தத் துறையையே தமது வாழ்க்கைப்பாதையாகத் தெரிந்தெடுப்பார் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆயின், அவரது பணித்தளம் வேறு திசையை நோக்கித் திரும்பியது. கத்தோலிக்க திருமறையின் அருட் பணியாளனாகத் தம்மை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். திருநிலைப்படுத்தப்பட்ட கணத்திலிருந்து வரலாறு அவரின் பெயரைப் பொன் எழுத்துக்களாற் பொறிக்கக் காத்திருந்தது. 1978 ஆம் ஆண்டில் கத்தோலிக்க

திருமறையின் மிக உயர்ந்த பணிச் சுமையை திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் என்ற பெயருடன் ஏற்று, 2005இல் இறந்தபோது, உலக வரலாறு என்றும் காணாத அரசியல் தலைமைகளினதும் பொதுமக்கள் திரளினதும் வருகையும், அஞ்சலிகளும் இவரது நல்லடக்கத்தை அணிசெய்த நிகழ்வை வரலாற்று அறிஞர்கள் பெருமையுடன் பதிவுசெய்து கொண்டனர்.

இளம் குருவாகத் தமது நாட்டில் மறைப்பணி செய்த பங்குத்தளங்களில் பல நாடகங்களை மேடையேற்றினார். ஒரு சில வேளைகளில் தாமும் அவைகளில் நடித்தார். மீச்சிஸ்லவ் கொட்லாச்சிக்குடன் இணைந்து தாம் நிறுவிய இறப்சொடிக் தியேட்டர் குழுவினருடன் இறுக்கமான உறவுகளைப் பேணி வளர்த்துக் கொண்டார்.

ஆயராகவும் பேராயராகவும் இருந்த காலப் பொழுதிலும் தமது நாடக நண்பர்களுடன் கட்டிவளர்த்து வந்த நெருக்கத்தை இழக்கவில்லை, இறப்சொடிக் தியேட்டர் உடைய நிகழ்ச்சிகளைப்பற்றிய விமர்சனத்தை புனை பெயரில் வார இதழ்களில் எழுதிவந்தார். *நகையகம், தந்தையாய் ஒளிவீசும் தன்மை – ஒரு மறைபொருள்* என்னும் இரு நாடகங்களையும் ஆயராக இருக்கும் பொழுதே அந்ரெஜ் ஜாவின் என்ற பெயரில் எழுதினார். க்றக்குவ நகரில் வெளிவந்த “ஸ்னக்” (அடையாளம்) என்னும் மாத இதழில் *நகையகம்* 1960இல் மார்கழியில் வெளியிடப்பட்டது. இதன் உபதலைப்பு: *திருமணம் என்னும் திருவருட்சாதனம் பற்றிய தியானம். ஒரு சில கட்டங்களில் நாடகப் பண்பும் கலந்தது.*

*நகையகம்* கவிதை நடையில் அமைந்த நாடகத்தியானம்; தியான நாடகம். அதில் ஒரு சில இடங்களில் வசனங்களும், கடிதங்களிலிருந்து சில பந்திகளும் விரவிக்காணப்படுகின்றன.

இந்நாடகத்தின் மூல நூலில் பெரும்பாலாகத் தென்படும் பண்புகள்:

- ❋ நீண்ட கவிதை வரிகள்
- ❋ பல்வகைக் கவிதைகள்
- ❋ மாறிவரும் சீரடிகள்

பல இடங்களிலும் ஆங்கிலக் கவிஞர் ரி. எஸ் எலியற் உடைய சுலப பேச்சு நடைக் கவிதைப் போக்குக் காணப்படுகிறது. இருந்தும் இலேசான அம் மொழிநடைக்குள் மெய்யியல், ஒழுக்கவியல், குறியீட்டியல் போன்றவை உள்ளீடாக அமைந்து நிற்கின்றன. எடுத்துக்காட்டுகளாக, திருமண ஒப்பந்தத்தின் அடையாளங்கள், மனிதனுடைய இயல்பு பற்றிய ஆசிரியரின் கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

நாடகப் பண்புகள் பற்றிய குறிப்புக்கள்

✡ அரங்க அளிக்கை செய்யும் நோக்குடன் இது எழுதப்படவில்லை.

✡ ஒரு சில உரையாடல்கள் தவிர, மற்றவை அனைத்தும் நாடக மாந்தர் பேசும் தனி மொழிகளாக அமைந்துள்ளன.

✡ இருவர் அல்லது அதற்குமேலான நாடக மாந்தர் ஒரு காட்சியில் தோன்றினாலும், தனி மொழியே பயன்படுத்தப்படுகின்றது. நவவேட்கை வாதிகளின் படைப்புகளில் தொங்கிநிற்கும் அடிப்படைக் கொள்கையான எண்ணங்களை எடுத்துரைக்க ஆற்றலற்ற தன்மையும் சமூகத் தொடர்பற்ற தன்மையுமன்று ஆசிரியரின் கொள்கை. ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொண்டவராகவே, தனது சொல்லாடல் மூலம் வினைப்பாடுக்குத் தூண்டுபவராக இங்கு காணப்படுவர்.

✡ உரையாடல்கள் புறச்செயல்கள் பற்றியனவாக இல்லாது, ஒழுக்கம் சார்ந்த மனப்பக்குவங்கள் பற்றியனவாக அமைந்துள்ளன.

✡ மத்திய கால சமய நாடகங்கள், பறொக் காலக் குறியீடுகளும், உவமானங்களும், இறப்சொடிக் தியேட்டரின் அளிக்கை முறைகள் என்ற மூவகை மூலங்களின் சாயல்கள், பண்புகள் படிந்துள்ளன. வீடுகளிலே நாடகங்களை அரங்கேற்ற வேண்டிய சூழ்நிலையில், குரல், முகம்

போன்றவைகளால் மட்டும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. காட்சிப் பொருட்கள் இன்றி, இடம் பெயர்ந்து மாறி மாறி நடக்கும் அசைவுகளுக்கு இடமளிக்க முடியாத வகையில், வலம், இடம், முன், பின் நிற்கும் வகையால் மட்டும் ஒரு சில வெளிசார்ந்த கருத்துக்களைப் புலப்படுத்த முடிந்தது.

✡ ஒருவகையில் இது மத்திய கால அரங்க அமைப்பின் ''வீடுகள்'' போன்றவற்றுக்கு ஒத்ததாக அமைந்தது. மேலும், நடிப்புக்கு அன்றி சொல்லுக்கு முதன்மை கொடுத்து பேச்சுமூலம் கருத்துக்களை உணர்ச்சியுடன் வழங்கும் பாங்கை இறப்சொடிக் தியேட்டர் குழுவினர் கையாண்டனர். இது பற்றி கறொல் வொய்திவா 1958இல் ''அகில உலக வார இதழு''க்கு எழுதிய விமர்சனம்:

> அதிகளவில் சொல்லும், மிகக் குறைந்த நடிப்பும் இறப்சொடிக் அரங்கில் இளம் நடிகர்களை தனித்தியங்கும் சுயநல அழிவுத் தன்மையிலிருந்து காக்கின்றது. காரணம், தாம் விரும்பும் எதையும் (கருத்துக்களை) தாம் பேசும் வசனங்களுக்குள் செலுத்த அது அனுமதிக்கமாட்டாது. நடிகர்களுக்கு அது அகக் கட்டுப்பாட்டினைக் கொடுக்கின்றது. ஒரு குழுவினர், ஒரு மனப்பட்டும் ஒன்றிணைந்தும் மாபெரும் கவிதைச் சொல்லுக்கு அடிபணிந்து இயங்குவது, ஒழுக்கவியல்சார் சிக்கல்கள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

✡ நேரான கோடொத்த காலம், ஒத்த வெளி போன்றவைகளிலிருந்து காட்சித் தொடர்கள் அமையவில்லை. நாடகமாந்தரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் சில குரல்கள் பெரும்பாலும் எங்கிருந்தோ ஒலிக்கும்; அவை எங்கோ மறைந்து விடும். சில உரையாடல்கள் நாடகமாந்தரின் நினைவு வெள்ளத்திலிருந்து புறப்படும். உண்மையில், இந்நாடகத்தில் நிகழ்காலமும், இறந்த காலமும் இணைந்து, நித்தியத்தின் நிழலைச் சுட்டி நிற்கும். இறைவனுக்குக் காலங்கள் இல்லை என்கின்றது மெய்யியல்.

காலங்களைக் கடந்து நிற்கும் ஒரு நிலையிலும், மானிட வாழ்வின் கண்ணோட்டம் கைநெகிழப்படவில்லை: நகையகமும் நகையக வினைஞனும் பின்னணியில் எப்போதும் நிற்கின்றனர்.

✡ கிரேக்க நாடக மரபில் வரும் பாடகர் குழாம் நகையகத்திலும் இரண்டறக் கலந்து நின்று, திருமணத்தின் சாட்சிகளாய் திருமண வாழ்வில் நிகழக் கூடிய ஆபத்துக்களை எடுத்துரைப்பதாக செயற்படுகின்றது.

இந்நாடகத்தில் மூன்று பெருங்காட்சிகள் உள்ளன. முதல் இரு காட்சிகளும் இரு குடும்பங்களின் தலைவன், தலைவி பற்றியது. அன்பினால் இணைந்து முன்பு ஒருவரை ஒருவர் காதலித்தவர்கள் அல்லது இப்போதும் காதலிப்பவர்கள், திருமணம் செய்தவர்கள் அல்லது செய்யப் போகின்றவர்கள் நாடகமாந்தர்களாக மையப்படுத்தப்பட்டுள்ளனர். மூன்றாவது காட்சியில் சிறப்பு நிலை வகிப்பவர்கள்: முதல் இரண்டு காட்சியில் வருபவர்களுடைய பிள்ளைகள்.

நகையக வினைஞன் கணையாழிகளை விற்பவர் மட்டுமல்ல. திருமணம் முறிவடைந்த பின்னும் அவைகளைத் திரும்பப் பெற மறுப்பவர். திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின் நிரந்தரத் தன்மைக்குச் சான்று பகர்பவர். நாடகமாந்தர்கள் அனைவரையும் சந்திக்கும் ஆதாம் ஒவ்வொருவரது வாழ்விலும் இறைவழிகாட்டல் எப்படி நடக்கின்றது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு: பத்துக் கன்னியரின் நிகழ்ச்சியில் மணமகனை வரவேற்ற ஐந்து விவேகிகளினதும், அவரை வரவேற்கத் தவறி அரியதோர் வாய்ப்பை இழந்த ஐந்து மூடக் கன்னியரினதும் அனுபவத்தை, ஆதாம், எழிலரசிக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

நாடக ஆசிரியர் மனித அன்பின் ஆழத்தையும் அகலத்தையும் அழகுச் சொற்களால் ஓவியம் தீட்டுகிறார். அன்பழகன் மலர்விழியின் குடும்பத்தில் நிலவும் அன்பு, கல்லறையையும் தாண்டி நிற்கின்றது. இரண்டாம் குடும்பத்தில் மணிவண்ணன் எழிலரசியின் அன்பு அதன் நிறைவை அடையாது செத்துப் போகிறது. தாமரைச் செல்வி அருட்செல்வன் உடைய மூன்றாம் குடும்பத்தில் சிக்கல்கள், கேள்விகள், ஐயங்கள் ஊடாக அன்பு மலர்கின்றது.

அன்பு செய்வது சுலபம் அன்று; கடினமாயினும், சுயநலம் மறந்து, அடைக்கும் தாழ் கடந்து அன்பு செய்யப்படுபவருக்குத் திறந்த பக்குவத்துடன் தன்னை அர்ப்பணித்தால் அன்பு மயமான இறைவன் அருளுடன் வாழ்வின் நிறைவை அடையலாம் என்ற செய்தியைக் கூறுவது நகையகம்.

ஈற்றில், கவிதைத் தன்மையும் அரங்கியற் தன்மையும் ஒன்றை ஒன்று அரவணைத்தும் ஊடுருவியும் நிற்கும் பண்பைக் கொண்டுள்ள நகையகம் இல்லறத்தின் நற்பண்புகளை நயமுடன் உரைக்கும் நீதிநூற் பாங்கினைக் கொண்டு, நாடக நகர்வுகளுடன் கவிதைப் பிம்பங்களை இணைத்து, "இப்படியான நாடகங்களும் உள்ளன" என்பதைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

ஆக,

இது ஒரு தியான நூல்;

கவிதை நூல்;

அறநூல்;


நீதி நூல்;

அன்புபற்றிய ஆழமான

உளவியல் நூல்.

# நகையகம்

நூலாசிரியர்



## வாழ்க்கைக் குறிப்புக்கள்

- இவரது முழுப்பெயர்: கறொல் ஜோசேவ் வொய்திவா
- பிறப்பு : 18 மே 1920
- பிறப்பிடம் : போலந்து நாட்டைச் சேர்ந்த வடவிசே என்னும் சிறுநகரம். க்றக்குவ என்னும் பெருநகரிலிருந்து 50 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது.
- பெற்றோர் பெயர் : தந்தை கறொல் வொய்திவா

  தாய் எமிலியா கக்சோறொவ்ஸ்கா
- உடன் பிறப்புக்கள் : இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும்.
- இவர் பிறப்பதற்கு முன்பதாகவே ஒல்கா என்னும் சகோதரி இறந்து விட்டாள்.

- மூத்த சகோதரன் எட்மன் ஒரு மருத்துவர். 1932இல் இறந்தார்.
- தாயார் 1929லும், தந்தை, ஒரு படையதிகாரி, 1941லும் இறந்தனர்.
- இவர் ஞானத்தீட்சை பெற்றது வடவிசேயின் பங்குக் கோவிலில். 20 யூன் 1920.
- முதல் நன்மை பெற்றது இவரது ஒன்பதாவது வயதில்.
- உறுதிப்பூசுதல் பெற்றது பதினெட்டாவது வயதில்.
- 1938 க்றக்குவ நகரின் யாகில்லோனியன் பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் நாடகம் பயில்வதற்காகச் சேர்ந்தார்.
- போலந்து நாடு நாசிகளினால் 1939 ஆக்கிரமிக்கப்பட்டபொழுது அப்பல்கலைக்கழகம் மூடப்பட்டது.
- நாசிகளினால் நாடு கடத்தப்படுதலை தவிர்ப்பதற்கு (1940-1944) தொழிற்சாலை ஒன்றில் தொழிலாளியாகப் பணிபுரிந்தார்.
- 1942 குருவாக அழைக்கப்படுதலை உணர்ந்து, க்றக்குவ பேராயர் ஸ்ரெவான் சப்பிகா இரகசியமாக நடத்திய குருமடத்தில் இறையியல் பயில சேர்ந்தார்.
- இரண்டாவது உலகப் போர் முடிந்த பின் க்றக்குவவின் பெரிய குருமடத்திலும், யாகில்லோனியன் பல்கலைக்கழகத்திலும் இறையியல் துறையில் தமது படிப்பைத் தொடர்ந்தார்.
- 1 நவம்பர் 1946 க்றக்குவ நகரில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- அதனைத் தொடர்ந்து உயர்கல்விக்காக உரோமை சென்று 1948 கலாநிதிப்பட்டம் பெற்றார்.

- அதன்பின் சொந்த நாட்டுக்குத் திரும்பி உதவிப் பங்குத்தந்தையாக க்றக்குவவின் பல பங்குகளில் பணியாற்றினார்.

- 1951-1953 வரையும் லப்ளின் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடத்திப் பட்டம் பெற்றார்.

- அதனைத் தொடர்ந்து லப்ளின் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் மறையியல் துறையில் ஒழுக்கவியல் பேராசிரியராகக் கடமை புரிந்தார்.

- 1958 ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

- 1964 பேராயராக திருநிலைப்படுத்தப்பட்டு, 26 யூன் 1967 கருதினால் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

- 16 ஒக்ரோபர் 1978 திருந்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார்.


- 22 ஒக்ரோபர் 1978 இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் என்னும் பெயரைத்தாங்கி தமது அகில உலகப் பணியை ஆரம்பித்தார்.


- தனிப்பட்ட முறையில் சொந்தத்தில் அவர் எழுதிய ஐந்து நூல்கள் :

  - *நம்பிக்கையின் எல்லையைக் கடப்பது* (1994)
  - *கொடையும் மறைபொருளும்* (1996)
  - *உரோமானிய தியானங்கள்* (2003)
  - *எழுங்கள்! நாம் செல்வோம்* (2004)
  - *நினைவும் அடையாளமும்* (2005)

- 2 ஏப்ரல் 2005 பி. ப. 9.37 மணிக்கு இறைவனடி சேர்ந்தார். அன்றிலிருந்து ஏப்ரல் எட்டாம் திகதி வரையும் அவரின் பூதவுடலைப் பார்ப்பதற்கு மூன்று

மில்லியனுக்கு மேற்பட்ட பல்லின, பல்நாட்டு, பல்சமய மக்கள் வத்திக்கானுக்கு வருகை தந்து அஞ்சலியை செலுத்தினர். அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் இருபத்து நான்கு மணி நேரம் வரிசையில் நின்றதும், வரலாறு காணாத நூற்றுக்கணக்கான பல்நாட்டுத் தலைவர்களும் பெரியவர்களும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டதும் சமகாலப் பதிவு.







# நாடக மாந்தர்

| ஆங்கில மொழி பெயர்ப்பில் | | தமிழ் மொழி பெயர்ப்பில் |
|---|---|---|
| Teresa | ... | மலர்விழி |
| Andrew | ... | அன்பழகன் |
| Anna | ... | எழிலரசி |
| Stefan | ... | மணிவண்ணன் |
| Adam | ... | மதிவாணன் |
| Monica | ... | தாமரைச் செல்வி |
| Christopher | ... | அருட்செல்வன் |


நகையக வினைஞர்

பாடகர் குழாம்

வழிப்போக்கர்



# நகையகம்



## காட்சி ஒன்று

# **சமிக்கைகள்**

## மலர்விழியும் அன்பழகனும்

## மலர்விழி

அன்பழகன் என்னைத் தேர்ந்தெடுத்து
தன்னைத் திருமணம் செய்யும்படி கேட்டார்.
இன்று மாலை
ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடையில்
அது நடந்தது;
எனக்கு அதைப்பற்றிச் சரியாக நினைவில்லை;
கைக்கடிகாரத்தைப் பார்க்க
எனக்கு நேரம் இருக்கவில்லை.
இத்தகைய வேளைகளில்
நேரம் என்னவென்று எவரும் பார்ப்பதில்லை.
இப்படியான வினாடிகள்
நேரகாலத்துக்கு அப்பால்

ஒருவரில் வளர்கின்றன.
பழைய நகர மண்டபக் கோபுர மணிக்கூட்டில்
கணப்பொழுதுப் பார்வையைக்கூட
செலுத்த முடியவில்லை.

அம் மணிக்கூட்டைப் பார்ப்பதற்கு
நினைத்திருந்தாலும் கூட,
நான் அதைச் செய்திருக்க முடியாது.
ஏனெனில்,
அப்படிச் செய்வதற்கு
அன்பழகனின் தலைக்கு மேலே
எட்டிப் பார்க்க வேண்டியிருந்திருக்கும்.

நாம் இருவரும்
சந்தைச் சதுக்கத்தின் வலது புறத்தில்
நடந்து கொண்டிருந்தோம்.
அப்போது அன்பழகன் திரும்பிப் பார்த்து
என்னைக் கேட்டார்:
"நீ எனது வாழ்க்கைத் துணைவியாக
இருக்க விரும்புகிறாயா?".
அதுவே அவரது கேள்வி!
நீ எனது மனைவியாக இருக்க விரும்புகிறாயா
என்று கேட்கவில்லை.
அப்படியில்லாது,
எனது வாழ்க்கைத் துணைவியாக
இருக்க விரும்புகிறாயா,
என்றுதான் கேட்டார்.

அவர் சொல்ல எண்ணியதை
ஏற்கெனவே பல தடவை
எண்ணிப் பார்த்திருக்கவேண்டும்.
எனது கண்களில்
என்ன பதில் உள்ளது என்பதைக் கண்டறிய
அச்சம் கொண்டவர் போலவும்,
அதே வேளை,
நான் அவரது கேள்விக்கு
ஆம் என்று பதிலளித்தால்,
எமது கண்களுக்குப் புலனாகாத
முடிவைக் கொண்ட பாதை ஒன்று
உண்டென்றோ
அல்லது குறைந்தது அப்படி ஒன்று
இருக்க முடியும் என்றோ
சுட்டிக் காட்டுவதைப் போலவும்,
என்னை நேரடியாகப் பாராது
எனக்கு அப்பாலே
பார்த்துக் கொண்டு கேட்டார்.

நான்,
ஆம் என்று பதில் உரைத்தேன்;
உடனடியாக அல்ல,
ஒரு சில மணித்துளிகளின் பின்.
ஆயின்,
அச்சில சொற்ப மணித்துளிகளுக்குள்
சிந்திப்பதற்கோ,

செயல் நோக்கங்கள் பற்றி
ஆராய்ந்து குழப்பமுறுவதற்கோ
தேவை இருக்கவில்லை.
பெரும்பாலும் பதில்
ஏற்கெனவே
முடிவு செய்யப்பட்டிருந்தது.
கடந்த காலத்தை
ஆழமாகத் தொட்டதாகவும்,
எதிர்காலத்தை
எவ்வளவோ தூரம்
முன்னோக்கிப் பார்ப்பதாகவும்,
ஒரு நெசவுத் துணியின் அமைப்பைத் தீர்மானிக்கும்
குறுக்கு இழையைத் தேடும்
நெசவாளனின் நெசவுத்தறி நாடா போல்
எமது வாழ்வின் இருப்பை ஊடுருவி நின்றது
அப் பதில் என்பதையும்
நாம் இருவரும் அறிந்திருந்தோம்.
என்னை உடனடியாக
அன்பழகன் பார்க்கவில்லை;
எமக்கு முன்னால் உள்ள பாதையை
கருத்தூன்றி உற்று நோக்குவது போல்
சற்று நேரம்
எனக்கு அப்பாலே
பார்த்துக் கொண்டிருந்தார் என்பதும்
எனக்கு நினைவுக்கு வருகின்றது.

# அன்பழகன்

மலர்விழி!

அவளை நான்

எடுத்த எடுப்பிலேயே

தேடிப்பிடிக்கவில்லை.

அவளை அடையுமுன்

நீண்ட தூரம் சென்றேன்.

எமது முதற் சந்திப்பு

பின்னிகழ்வு பற்றிய ஒருவகை

முன்னுணர்வுடையதாக

இருந்ததோ என்பதும்

எனக்கு நினைவில்லை.

'கண்டதும் காதல்' என்பதன் பொருள்

எதுவென்று நான் அறிவேனோ

என்பது முதலாக எனக்குத் தெரியவில்லை.

அவள் எனது கவனத்தின்

குவிமையத்திற்குள் வந்துவிட்டாள் என்று

ஒரு சில காலத்தின் பின் உணர்ந்தேன்.

அதாவது,

அவளில் நான் அக்கறை கொள்ள வேண்டிய

கட்டாயம் இருந்தது.

அதேவேளை,

அவளில் நான்

இப்படிக் கருத்துக் கொள்ள வேண்டிய
தேவையின் உண்மையையும்
ஏற்றுக் கொண்டேன்.

நான் இப்படித்தான்
கண்டிப்பாக நடக்க வேண்டுமென்று
உணர்ந்திருந்த அந்நிலையை விட்டு
வேறுவிதமாகவும் செயற்பட்டிருக்க முடியும்.
ஆனால், அப்படிச் செய்வதனால்
பயனில்லை என்று எண்ணினேன்.
எனது ஆளுமைக்குப் பொருத்தமானது
எதுவோ ஒன்று
மலர்விழியிடம் காணப்பட்டது.
அக்காலத்தில்
"மறுசுயம்" என்பதைப்பற்றி
அதிகம் சிந்தித்தேன்.
மற்ற எந்த ஒரு ஆணைப்போலவும்,
எந்த ஒரு பெண்ணைப்போலவும்
மலர்விழியும்
வெகு தூரத்தில் நிற்கும்
ஒரு முழு உலகமாய் இருந்தாள்.
அப்படியிருந்தும்,
அவளுக்கு ஒரு பாலம் அமைக்க முடியும் என
எண்ணவைக்கும் அளவிற்கு
அவளிடத்தில் எதுவோ ஒன்று இருந்தது.

இவ்வெண்ணத்தை நான் வளரவிட்டேன்;
படிப்படியாக என்னில் அது
விரிவடையவும் இடமளித்தேன்.
அது சுயவிருப்பின் செயலில்
தங்கியிருக்காத உடன்பாடு அன்று.
புலனுணர்விற்கும்
ஐம்புலன்களின் கவர்ச்சிக்கும்
நான் அடிபணிய மறுத்தேன்.
இல்லையெனில்,
“நான்” என்னும் முனைப்பிலிருந்து அகன்று
மற்றவருடன் உறவு கொள்ள முடியாது என்பது
எனக்குத் தெரியும்.
ஆயின் அதற்கு முயற்சி வேண்டும்.
ஏனெனில் நான் சந்தித்த பெண்களின் கவர்ச்சியில்
எனது புலன்கள்
ஒவ்வொரு கட்டத்திலும் திளைத்திருந்தன.
ஓரிரு தடவைகள்
நான் அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல
முனைந்தபோது
தனித் தனித் தீவுகளையே சந்தித்தேன்.

இது,
புலன்களை எட்டும் அழகு
கடினமான கொடையாகவோ
அல்லது ஆபத்தானதொன்றாகவோ
இருக்கலாமென
என்னை எண்ண வைத்தது.

இவ்வழியைப் பின்பற்றி
மற்றவர்களை வருத்தியவர்களை
நான் சந்தித்தேன்.
ஆகவே,
சிந்தைக்கு எட்டும் அழகை,
அதாவது மெய்ம்மையை,
மதிக்க
படிப்படியாக
கற்றுக் கொண்டேன்.
அதன் பின்
எனது உண்மையான "மறு சுயமாக"
இருக்கக்கூடிய ஒரு பெண்ணைத்
தேடத் தீர்மானித்தேன்.
அதன்மூலம் நமக்கு இடையில் அமையும் பாலம்,
நீரில் தோன்றும் அல்லி மலர்கள்,
கோரைப் புற்கள்
முதலியவை மத்தியில் காணப்படும்
வலுவற்ற நடைப் பாலம்
போலல்லாததொன்றாக இருக்கும்.

எனது கற்பனையை,
ஏன், எனது எண்ணங்களையும் கூட
முழுதாகக் கவர்ந்த
சில இளம் பெண்களைச் சந்தித்தேன்.
இவர்கள் பற்றி
அதிக அக்கறை கொண்டுள்ளேன்

என்று எனக்குத் தென்பட்ட வேளைகளில்,
சடுதியாக
மலர்விழிதான் எனது உணர்வு நிலையிலும்,
நினைவிலும் உள்ளாள் என்பதை
திடீரென்று உணர்ந்தேன்.
சிந்திக்காமலேயே
அவர்கள் ஒவ்வொருவரையும்
மலர்விழியுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்.
இருந்தும்,
அவர்கள் அவளை
எனது உணர்வு நிலையிலிருந்து
அகற்ற வேண்டும் என்று முதலாக
உள்ளூர விழைந்தேன்.
ஒரு வகையில்
அப்படி நடக்குமெனவும் நம்பியிருந்தேன்.
புலனுணர்வை–
உறுதியான, ஆற்றல்மிக்க புலனுணர்வை –
பின்தொடர
நான் ஆயத்தமாய் இருந்தேன்.

காதல் உணர்ச்சிமயமானது;
அது அனைத்தையும் கடந்த
மனக்கிளர்ச்சி என
கருத விரும்பினேன்.
மனக் கிளர்ச்சியின் எல்லையற்ற தன்மையை
நம்பினேன்.
அதனாலேதான்,

விசித்திரமான நிலையில்
மலர்விழி என்னுள் தொடர்ந்து
இடம்பிடித்து இருக்கும் அடிப்படையை,
அத்தகைய இருப்பின் காரணியை,
எனது "சுயத்துள்"
அவள் பெற்றிருந்த உறுதியை,
அல்லது அவளைச் சுற்றி எழும்பும்
இனமறியா இசையலைகளை உருவாக்கும்
ஏதுவை,
அவள் மட்டில் கடப்பாடு உண்டு என்ற
உள்ளுணர்வை
–இவைகளை என்னால்
புரிந்துகொள்ள முடியவில்லை.
ஆகவே அவளின் நினைவை
நான் விழிப்புடன் தவிர்த்தேன்;
அத்தகைய ஊகத்தின் நிழலை
எழுப்பக் கூடிய அனைத்தையும்
திட்ட நோக்குடன் விலக்கினேன்.
என்னை
வேதனைப்படுத்துபவளாகக் கருதி
சில வேளைகளில்
எனது எண்ணங்களில்
அவளை வதைத்தேன்.
தனது அன்புடன்
என்னைத் தொடர்ந்து வருவது போன்ற
அவளது உறவிலிருந்து

திட்டவட்டமாக என்னைத்
துண்டித்துவிட வேண்டும்போல்
தென்பட்டது.
இவ்வகையில்தான்
மலர்விழி மேல்
எனது அக்கறை வளர்ந்தது.
ஒருவிதத்தில்,
எதிர்ப்பிலிருந்து அன்பு வளர்ந்தது.
வேறு வகையாகக் கூறின்,
இசைவான
மனப்பாங்குகளோ,
புலனுணர்வுகளோ
இருவரிடமும் இல்லாவிடினும்,
ஒருவர் மற்றவர்க்கே
உரித்தாக வேண்டும் என்பதை
இரு சுயங்கள்
ஆழமாக உணரும் நிலையில்
முட்டிமோதுவதே அன்பு.
பிரிந்ததனை இணைத்தும்,
வரையறை செய்யப்பட்டு
ஒடுங்கியதை விரிவுபடுத்தியும்,
செழுமைப்படுத்தியும்,
இணைப்பாக்கத்தை உருவாக்கும்
அண்ட கோளத்தின் செயற்பாடுகளில்
இதுவும் ஒன்று.

## மலர்விழி

அன்பழகனின் திருமணக்கோரிக்கை

எதிர்பார்க்காதவொன்று என்பதை

நான் ஏற்றாகவேண்டும்.

அப்படித்தான் நடக்குமென்று நம்பியிருக்க

எனக்கு எக்காரணமும் இருக்கவில்லை.

அன்பழகன் தனக்கு

என்னைப் பயனற்றவளாக்க

அனைத்தையும்

மேற்கொண்டார் என்றும்

அதுவே

உண்மையான நிலைமை என

என்னை நம்ப வைக்கவும்

முயன்றார் என்றும்

எனக்கு எப்போதும் தென்பட்டது.

அவரது திருமணக் கோரிக்கைக்கு

முற்றிலும் தயாரின்மையாக

நான் இருக்கவில்லையென்றால்,

அதற்குக் காரணம் இல்லாமலில்லை:

அவருக்கு நானே

ஏதோ ஒரு வகையில்

பொருத்தமானவள் என்று

எனக்குப்பட்டது.
அத்தோடு அவரை
அன்பு செய்ய முடியும்
என்று கருதினேன்.
இதை உணர்ந்திருந்த பின்னணியில்
நான் அவரை ஏற்கெனவே
அன்பு செய்திருக்க வேண்டும்.
ஆனால் அது அவ்வளவுடன்
முற்றுப்புள்ளி பெற்றிருந்தது.
அவரிடத்திலிருந்து
எதிரொலி எதனையும் எழுப்பாத
உணர்ச்சி ஒன்றினை
என்னில் பேணி வளர்க்க
நான் இடமளிக்கவில்லை.
இருந்தும்,
எனக்கு அப்போக்கு
இலகுவாக இருக்கவில்லை என்பதை
இன்று நான் ஏற்றுக்கொள்கிறேன்.
குறிப்பாக,
ஒரு திங்களை
நினைவுபடுத்திக் கொள்கிறேன்.
அத்திங்களில் ஒரு மாலைவேளை!
மலைகளில் நாம் நடந்து திரிந்து
பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தோம்.
அந்நிகழ்ச்சியில்
பெரிய கூட்டமாய்
ஒவ்வொருவரும்

பத்தோடு பதினொன்றாக
கலந்துகொண்டிருப்பினும்
நமக்குள் நெருக்கமான உறவு
ஒன்று இருந்தது.
நமது நட்பும்
மிக உறுதியானதாக இருந்தது.
நாம் ஒவ்வொருவரும்
ஒருவர் மற்றவரை
முற்று முழுதாக
புரிந்து வைத்திருந்தோம்.
அக்கால கட்டத்தில்
அன்பழகன்,
தேன்மொழி என்ற பெண்ணில்
வெளிப்படையாகவே
நாட்டம் கொண்டிருந்தார்.

எனினும்,
இவ்வெண்ணம்
நான் அன்று நடந்துசுற்றித்திரிந்து
பெற்ற இன்பத்தை
குழப்பவில்லை.
ஏனெனில்,
தள்ளாடி விழுவதிலும் பார்க்க
உக்கிப் போகும் மரத்தைப் போல்,
நான் எப்போதும் வைரமாக இருந்தேன்.
எனக்காக நான் அழுதேனேயாகில்,
அது ஏமாந்த காதலுக்காக அன்று.

இருப்பினும்,
அந்நிலை கடினமாக இருந்தது.
அம்மாலை வேளையில்,
குறிப்பாக
நாம் மலையிலிருந்து கிழேயிறங்கும்போது,
இரவாகி விட்டது.
வழியில், எம்மை வியப்பில் ஆழ்த்திய
சிறிய ஏரிகளை
நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்.
அவை, ஆழமறிய முடியா
உறக்கத்திலுள்ள
இரு நீர்த் தேக்கங்கள் போல் இருந்தன.
அங்கு,
ஒளி நிறைந்த ஆவணி இரவின்
உருநிழற்படிவுடன்
இயற்பாறை
கலந்து உறங்கிக் கொண்டிருந்தது.
இருந்தும்,
அங்கு விண்மதி இருக்கவில்லை.
சடுதியாக,
நாம் நிமிர்ந்து நின்று
உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தவேளை,
எங்கோ எமது தலைகளுக்கு மேலே
யாரோ கூப்பிடும் ஒலி
தெளிவாகக் கேட்டது.
உயிருடன் உள்ளவரையும்
அதை நான் மறக்க மாட்டேன்.

அவ்வொலி
புலம்பல் போல் இருந்தது!
தேம்புதல் போலும் இருந்தது!
ஏன்,
சிணுங்கி உளறுவது போலவும்
இருந்தது!
ஒவ்வொருவரும்
மூச்சற்ற நிலையில் நின்றனர்.
அது ஒரு மனிதன் கூப்பிடும் ஒலியா,
அல்லது,
இரவு வேளை உலவும்
பறவையின் ஓலமா
என்பது தெரியவில்லை.
அதே ஒலி மீண்டும்
ஒரு முறை கேட்டது.
நம்முடன் நின்ற இளைஞர்கள்
அவ்வொலிக்குப் பதில் ஒலியாக
குரல் கொடுக்கத் தீர்மானித்தனர்.
அமைதியாக உறங்கும்
அடர்கானகங்களின் ஒருபக்கம் இருந்து
மறு பக்கம் அளாவி,
அம் மலைத்தொடரைச் சூழ்ந்திருந்த
இரவின் ஊடாகவும்,
சமிக்கை ஒன்று சென்றது.
நாம் கேட்ட ஒலியை
மனிதன் ஒருவன் எழுப்பி இருப்பின்

அவன் நாம் கொடுத்த
சமிக்கையைக் கேட்டிருப்பான்.
இருந்தும், முதற் கேட்ட குரல்
பிற்பாடு கேட்கவில்லை.
அப்போது
அக் குரல் மீண்டும் ஒலிக்கலாம்
என்ற எதிர்பார்ப்புடன்
அதைக் கேட்க எல்லோரும்
அமைதியாக நின்றவேளை
சடுதியாக ஒரு எண்ணம்
மின்னல் போல் எனக்குத் தோன்றியது.
அதுவும் சமிக்கைகளைப் பற்றியதே!
அதே எண்ணந்தான் இன்று மீண்டும்
எனக்கு உதித்தது.
அன்பழகனின் பக்கவாட்டு
தோற்றத்திற்கும்
நமது மாநகரத்தின்
பழையநகர் மண்டப
கோபுரத்துக்கும் இடையில்
இன்று மாலை ஐந்துமணிக்கும்
ஆறுமணிக்கும் இடையில்
தன்னைத் திருமணஞ் செய்ய
அன்பழகன் என்னைக் கேட்டபோது
அவ்வெண்ணம் மீண்டும்
என்னில் எழுந்தது.

அப்பொழுது,
தொடர்பு படுத்திக் கொள்ள முடியா
சமிக்கைகள் பற்றி
நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.
அன்பழகனையும்
என்னையும் பற்றிய
எண்ணம் அது.
வாழ்வது எவ்வளவு கடினம் என்பதை
உணர்ந்து கொண்டேன்.
இயற்கையின்
இரகசியங்கள் நிறைந்ததும்
உண்மையில் பேருவப்பு
தருகின்றதுமான
மலைப்புறத்து இரவு என்றாலும்,
என்னைப் பொறுத்த அளவில்,
அவ்விரவு
மிகவும் சுமையானதாக இருந்தது.
எம்மைச் சுற்றியுள்ளவை அனைத்தும்
மிகத் தேவையானவை போலவும்,
அதனால்
அவை உலகின் முழுமையுடன்
ஒத்திசைவாக இருப்பன போலவும்
தென்பட்டது.
மனிதன் மட்டும்
சமநிலை இழந்து
திக்கற்று நின்றான்.
ஒரு வேளை இக்கூற்று

எல்லா மனிதர்களுக்கும்
பொருத்தமற்றதாக இருக்கலாம்.
ஆயின்,
என்னைப் பொறுத்த வரையில்
அது கண்டிப்பாக உண்மையானது.
ஆகவே,
"என்றென்றும் எனது வாழ்வின்
துணையாக வருவதற்கு
விரும்புகிறாயா?"
என்று என்னை
இன்று அன்பழகன் கேட்டபோது,
பத்து மணித்துளிகள் கழித்து,
"ஆம்" என நான் பதிலளித்தேன்.
சற்றுப் பொறுத்து,
அவருக்கு
சமிக்கைகளில் நம்பிக்கை உண்டா
எனக் கேட்டேன்.

## அன்பழகன்

"அன்பழகன்!
உமக்கு சமிக்கைகளில்
நம்பிக்கை உண்டா?"
என்று மலர்விழி
இன்று என்னிடம் கேட்டாள்.

இவ்வினாவினால்
வியப்படைந்து
திகைப்படைந்து
நான் எனது காதலியின்,
அதாவது,
கால் மணி நேரக் காதலியின்,
கண்களை உற்றுநோக்கியபோது,
தனது எண்ணங்களை
அவள் எனக்கு எடுத்துரைத்தாள்.
அவை,
முன்கூறிய மலை நிகழ்ச்சியின்
இரவிலிருந்து
அவளுடைய சிந்தையில்
உருண்டோடியவை.

அப்போது அவள் எனக்கு
எவ்வளவு அண்மையில் வந்து
என்னைத் தாண்டிச் சென்றிருந்தாள்!
அவளது கற்பனையாலும்
வெளிப்படுத்தப்படாத துன்பத்தாலும்
ஒரு வகையில் என்னை அவள்
சுற்றி வளைத்துக் கொண்டாள்.
இதுபற்றி அப்பொழுது நான்
அறிந்து கொள்ள விரும்பவில்லை.
இன்றோ
அதை நம் இருவரினதும்
பொதுநன்மையாகக் கருத
நான் உடன்படுகிறேன்.

மலர்விழி! மலர்விழி! மலர்விழி!
எனது முதிர்ச்சிப் பாதையின்
விசித்திரமான குவிமையம் போல்
மேலோட்டமான ஒளிக்கீற்றுக்களின்
பட்டகை அற்ற
உண்மை ஒளியின்
உயிர் உருவம் அவள்.
என்னால் இனிமேலும்
மேற் செல்ல முடியாது என்று
எனக்குத் தெரியும்.
இனிமேலும் நான்
தேடலில் ஈடுபட மாட்டேன் என்று
எனக்குத் தெரியும்.
மிகவும் எளிதாக
அவளை இழந்திருக்கலாம்
என்ற எண்ணம் என்னை
துடிதுடிக்க வைக்கிறது!
பல்லாண்டுகளாக
எனக்கு அருகாமையில்
அவள் நடந்து வந்துள்ளாள்.
அப்படி நடந்து
முதிர்ச்சியடைந்து வந்தவள்
அவள்தான் என்று
எனக்குத் தெரிந்திருக்கவில்லை.
எனக்கு இன்று மிகவும் சிறப்பான
நன்கொடையாக உள்ளதை,

அன்று நான்
ஏற்றுக்கொள்ளப் பயந்து ஒதுக்கினேன்.
பிரிந்து செல்ல வேண்டிய பாதைகள்
எங்களை நெருக்கமாக
கொண்டு வந்திருப்பதை
பல்லாண்டுகள் கழித்து
தெளிவாக
நான் உணர்ந்து கொள்கிறேன்.
அவ் ஆண்டுகள்
எங்களுக்கு
விலைமதிப்பற்றவையாக இருந்தன.
அடையாளங்களினதும்,
சமிக்கைகளினதும்
சிக்கலான நிலப்படத்தில்
நாம் செல்லும் திசையினை
அறிந்துகொள்வதற்குரிய நேரத்தை
அவை எமக்கு அளித்தன.
அது அப்படித்தான்
இருந்திருக்க வேண்டும்!
என்னுடைய நாடே
அவளுடைய நாடாகும் என்பதை
இன்று நான் உணர்கிறேன்.
ஒரு பாலத்தை அமைக்கத்தானே
நானும் கனவு கண்டேன்!

எமது பழைய நகரில்
மாலைவேளைகளில்
(ஒக்டோபரில் மாலைப்பொழுது
வேளைக்கு ஆரம்பமாகும்)
புதிய குடியிருப்புத் திட்டங்கள்
உருவாக்கப்படவுள்ள
இடங்களில் அமைந்த
பணிமனைகளில்
வேலையை முடித்துக்கொண்டு
ஆண்கள் செல்வர்.
வயது வந்த பெண்களும்
இளம் பெண்களும்
வீட்டுக்குப் போகும் வழியில்
கடைகளின் முன் தரித்துநின்று
கடைச் சாளரங்களுக்குள்
உற்றுநோக்குவர்.
பெண்கள் அணியும் காலணிகள்
நிறைவாகக் காட்சிக்கு வைத்திருந்த
பெரும் சாளரத்தின் முன்னால்
மலர்விழி
சற்றுத் தரித்து நின்ற பொழுதே
அவளை நான் சந்தித்தேன்.
சத்தமில்லாமலும் எதிர்பாராமலும்
அவளுக்கு அருகில்
நடந்து சென்று நின்றேன்.

பளிச்சிடும் ஒளியால் நிரப்பப்பட்டு
மறுபுறம் புலப்படும்
பெரிய கண்ணாடியின்
இருபக்கங்களிலும்
நாம் இருவரும்
சடுதியாக ஒன்றாக நின்றோம்.
நம் இருவரினதும் உருநிழல்கள்
இணைந்திருப்பதைக் கண்டோம்.
காரணம், சாளரத்துக்குப் பின்னால்
மிகப் பெரிய அகன்ற
பார்வைக்கண்ணாடி உண்டு.
அது,
காட்சிக்கு மாதிரிகளாக
வைக்கப்பட்டிருக்கும்
காலணிகளையும்
வீதியில் நடந்து செல்பவர்களையும்,
குறிப்பாக, தங்களை
அல்லது காலணிகளை
கண்ணாடியில் பார்ப்பதற்காக
தரித்து நிற்பவர்களையும்,
நிழலுருப்படுத்திக் காட்டும்.

சடுதியாக
பெரிய கண்ணாடியின்
இருமருங்கிலும்,
இங்கே ஒருபுறம்
உயிருடன் உண்மையாகவும்,

அங்கே எதிர்ப்புறம்
நிழலுருவப்படுத்தப்பட்டும்
நாம் நிற்பதைக் கண்ணுற்ற பொழுது,
மலர்விழியிடம்
நான் ஒரு கேள்வி கேட்டேன்:
"மலர்விழி!
நீ எதைப்பற்றிச் சிந்திக்கிறாய்?"
இதை ஏன் கேட்டேனோ
தெரியவில்லை.
ஒரு வேளை
நாம் பார்த்த காட்சியை
முழுமையாக்கும் நோக்குடன்
கேட்டிருக்கலாம்.
அல்லது,
இன்னும் சரியாகக் கூறின்
என் இதயத் தேவையின்
ஒரு பதிலுக்காகவும்
கேட்டிருக்கலாம்.
இதை நான்
காதோடு காதாய்
பேசுவது போலக் கேட்டேன்.
அப்படித்தானே
காதலிப்பவர் பேசுவது!

## மலர்விழி

அவ்வேளை
சமிக்கைகள் பற்றிய சிந்தனையில்
நான் ஈடுபட்டிருக்கவில்லை.
அன்பழகனைப்பற்றி முதலாக
உண்மையாக நினைக்கவில்லை.
மிதி உயரமான காலணிகளை
தேடிக் கொண்டிருந்தேன்.
விளையாட்டுக்கான பல காலணிகள்,
நடப்பதற்கு இலேசான பல காலணிகள்
அங்கு இருந்தன.
ஆனால்,
நான் மிதி உயரமான
காலணிகளைப் பார்க்க
கண்களைக் கூர்மையாக்கி
கடும் முயற்சி
செய்து கொண்டிருந்தேன்.

அன்பழகன் என்னைவிட
அதிகம் உயரமானவர்.
அதற்காக எனது உயரத்தை
நான் சற்று
கூட்டிக் கொள்ளவேண்டியிருந்தது.
இக்காரணத்தினாலேதான்
அன்பழகனையும் என்னையும் பற்றி

நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.
ஓயாது நம் இருவர் பற்றியும்
நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.
அவரும் கண்டிப்பாக
இப்படித்தான் சிந்தித்திருப்பார்.
ஆகவே அவர் எனது சிந்தனை பற்றி
மகிழ்ச்சியடையவேண்டும்
அதன்பின்
எமது திருமணம் தொடர்பான
பல்வேறு சிறிய சிறிய கருமங்கள் பற்றி
நாம் உரையாடத் தொடங்கினோம்.
எந்தக் கழுத்துப் பட்டையுடன்
அவரைக் காணும்போது
எனக்குப் பிடிக்கும் என்றும்,
அவருக்கு மிகவும் பொருத்தமான
கறுப்பு உடை எது
என்பது பற்றியும் சொன்னேன்.
இவை எல்லாவற்றையும்
அன்பழகன்
உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தார்
முகப் புகழ்ச்சியை ஏற்க விரும்பியன்று,
மாறாக, எப்போதும் தான் எனக்கு
கவர்ச்சியாய் காணப்படவேண்டும்
என்பதற்காக!
நகையகம் ஒன்றின்
சாளரத்தின் ஊடாக
உள்ளே அடர்த்திமிக்க

மென்பூம்பட்டுத் துணியால்
பதிக்கப்பட்ட சிறு பெட்டிகளில்
காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த
தங்க நகைகளை
நாம் இருவரும் பார்த்தோம்.
அவைகளுள்
திருமணக் கணையாழிகளும் அடங்கும்.
சற்றுநேரம் எதுவுமே பேசாமல்
இருவரும்
பார்த்துக்கொண்டு நின்றோம்.
அதன்பின்
அன்பழகன் எனது கையைப் பிடித்து
மலர்விழி, உள்ளே போவோம்,
எமது கணையாழிகளை
தெரிந்தெடுப்போம்
என்று சொன்னார்.

## அன்பழகன்

இருந்தும்,
நாம் உடனடியாக
உள்ளே செல்லவில்லை.
அவளிலும் என்னிலும்
ஒரே நேரத்தில் எழுந்த
எண்ணம் ஒன்று
எம்மைத் தடுத்து நிறுத்தியது.
இதை நாம் தெளிவாக உணர்ந்தோம்.

சாளரத்தில்
காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த
கணையாழிகள்
ஏதோ ஒரு
விசித்திரமான சக்தியுடன்
எம்மைக் கவர்ந்தன.
தற்போதைக்கு அவைகள்
விலை உயர்ந்த
உலோகத்தினாலான
கலை வேலைப்பாடமைந்த
பொருட்கள்தான்.
ஆனால் அவைகளில் ஒன்றை
நான் மலர்விழியின் விரலிலும்
மற்றையதை அவள்
என்னுடைய விரலிலும்
அணியுமட்டுமே
அவைகளுக்கு அந்நிலை.
அவ்வேளையிலிருந்து அவைகள்
எமது விதியை அடையாளம் காட்டும்!
நினைவில் எப்போதுமே
இருத்த வேண்டிய பாடத்தைப் போல்
அக் கணையாழிகள்
கடந்த காலத்தை இடைவிடாது
நினைவூட்டுபவையாகவும்
எதிர்காலத்தை
இடையறாது திறந்துகொண்டு
முடிந்த காலத்தை
எதிர்வரும் காலத்துடன்
இணைப்பவையாகவும் இருக்கும்.

அதே கண்ணோட்டத்தில்,
சங்கிலி ஒன்றில் உள்ள
இரண்டு இறுதி வளையங்கள் போல்
புலன்களுக்குத் தென்படாது
எம்மை இணைப்பதற்காகவும்
அவை எப்போதும் செயற்படும்.
ஆகவே
நாம் உடனடியாக
கடைக்குள் போகவில்லை.
அடையாளம் பேசியது.
நாம் இருவரும் அதை
உடனுக்குடனே
புரிந்து கொண்டோம்.
திருமணக் கணையாழிகளை
பார்த்துக்கொண்டு
உரையாடல்கள் எதுவும் இன்றி
நாம் மனக்கிளர்ச்சிக்கு இடமளித்தோம்.
நகையகத்தின் உள்ளே புகும் வேளையை
நாம் பிற்போட்டோம்!
நகையகத்தின் முன்
தாமதப்பட்டு நின்றதற்கு
அதுவேதான் காரணம்.
எனது தோளை
இன்னும் இறுக்கமாக
மலர்விழி பற்றியதை
உணர்ந்தேன்;
அதுவே
எங்களுடைய நிகழ் பொழுது

கடந்த காலத்தினதும்
எதிர்காலத்தினதும் சந்திப்பு.
சாதாரணமானதாகவும்
எளிமையானதுமாக இருப்பினும்,
உண்மை
நிகழ்ச்சிகளின் ஆழத்திலிருந்து
வருபவை போல் உள்ள
விசித்திரமான
கணப் பொழுதுகளின் ஊடாக
வளர்ந்துவந்து
நாம் இருவரும்
“நிகழ்பொழுதில்”
இவ்விடத்தில் உள்ளோம்.
நாம் இருவரும்
இங்கு ஒன்றாக உள்ளோம்.
இவ் இரண்டு
கணையாழிகளின் காரணமாக
மறைமுகமாக
நாம் இருவரும் ஓர் இருப்பாக
வளர்ந்து கொண்டு வருகின்றோம்.

எங்களுக்குப் பின்னால்
யாரோ ஒருவர்
சற்று உரத்துப் பேசினார்.

## யாரோ ஒருவர்

இதுதான் நகையகம்!
விதியைப் பற்றி
சிந்திக்கத் தூண்டும் அணிகலன்களை
தயாரிப்பது!
என்ன விசித்திரமான கைவினைப்பாடு!
எடுத்துக் காட்டாக,
காலத்தை அளந்தும்,
மனிதனுக்குப் பொருட்கள் அனைத்தினதும்
நிலையற்ற அழிவுறும் தன்மையை
எடுத்துக் கூறுவதுமான
கடிகாரங்களுக்கு
தங்க முலாம் பூசும் தொழில்!

## மலர்விழி

அந்த யாரோ ஒருவர்
பேசுவதை நிறுத்தினார்.
ஆயினும், அவர்
எமது எண்ணங்களின் விளிம்பில்
உலவிக்கொண்டிருந்தார்.
நாம் பேச்சின்றி
நின்று கொண்டிருந்தோம்.

ஆயின்,

சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது

கற்பனை!

வெள்ளை நிறத்திலான

திருமண ஆடையை அணிந்து,

அந்நிகழ்ச்சிக்குரிய

கறுப்பு உடைகளை அணிந்த

அன்பழகனுடன் சேர்ந்து

முழந்தாட்படியிட்டபடி

நான் என்னை

ஒரு கண்ணாடியில்

பார்ப்பது போல் கண்டேன்.

நாம் கோவிலுக்குள் சென்ற போது,

இயைபின்மைப் பொருத்தம்

எள்ளளவும் இல்லை என்ற முறையில்

எனது உயரம்

அவரது உயரத்தை ஒத்திருந்தது.

(அதனாலேதான்

இன்று நான் மற்றச் சாளரத்தில் கண்ட

மிதி உயர்வான காலணிகளை

விலைக்கு வாங்கியிருந்தேன்).

அப்போது,

மிக விசித்திரமானதும்,

எதிர்பாராததுமான நிகழ்ச்சி ஒன்று

இடம்பெற்றது:

நகையகத்திற்கு முன்னால்

நாம் இருவரும்

அப்படி நின்று கொண்டிருந்தபொழுது,

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்

நாம் ஒருவருக்கு ஒருவர்

எழுதிய கடிதங்களிலிருந்து

சில பகுதிகளை

நினைவு படுத்திக் கொண்டோம்.

மலர்விழி அன்பழகனுக்கு வரைந்த
கடிதத்திலிருந்து சில பகுதிகள்

அன்பழகா, நாம் ஆவணித் திங்கள் மேற்கொண்ட நீள்வழி நடையின் போது அவ்விசித்திரமான சமிக்கைகளை நாம் கேட்ட இரவை மீள்நோக்க விரும்புகிறேன்.

அங்கு சில குழப்ப நிலையும் கருத்து வேறுபாடும் நிலவியது உனக்கு நினைவிருக்கும். அடர்காட்டில் வழிமாறித் தடுமாறித் தத்தளிப்பவரைத் தேடி நாம் செல்ல வேண்டும் என்று ஒரு சிலர் நினைத்தனர். மாறாக, அது ஒரு மனிதனின் குரல் அன்று, இரவுப் பறவையின் ஒலியே என்ற கருத்தை வேறு

சிலர் வெளியிட்டனர். இவ்விரண்டாவது கருத்துடையவனாக நீ இருந்தாய். எளிதில் மறக்க முடியாத ஓர் இரவு அது. குறிப்பாக, அவ்விரவில்தான் நான் உண்மையில் உன் சுயவடிவத்தைக் கண்டேன் என எண்ணுகிறேன். அன்பழகா, உன்னில் உறங்கிக்கிடக்கும் முரன்பாடுகள் நேரடியாக எனது கண்களுக்குப் புலப்பட்டன என்று நம்புகிறேன். ஒருவன் இன்பமாக இருக்க விரும்புவதற்கும், அதை அடைவதற்கு அவனிடம் காணப்படும் ஆற்றல்களுக்கும் இடையில், நீண்ட இடைவெளி உண்டு என்பது தவிர்க்க முடியாதது. உன்னுடைய திட்டமிடல் பணிமனையிலிருந்து எல்லாவற்றிற்கும் கணக்குப் போடுவது போன்று உனது இன்பத்திற்கும் தேவையான விலையைக் கணக்குப் போட முனைகின்றாய். துணிவும், நம்பிக்கையும் உன்னிடத்தில் இல்லை: எதிலே? எவரில்? வாழ்வில், உனது சொந்த விதியில், மக்களில், கடவுளில்...

அன்பழகன் மலர்விழிக்கு எழுதிய
கடிதத்தின் ஒரு சில பகுதிகள்

ஆக, நீ துணிச்சல் உடையவள்! நம்பிக்கை உள்ளவள்! இருந்தும், எத்தனை தடவைகள் கண்கள் கலங்காது இருந்தும் உனது முகத்தில் கண்ணீர் வடிந்ததை நான் கண்டேன். இன்பத்தைத் துணிவுடன் நாடுகிறாய் என்று ஒருவேளை நீ நினைக்கிறாய் போலும்! ஆனால் உண்மையில் இது இன்னொரு வகையான அச்சம் தான்! அல்லது, குறைந்தது, முற்காப்புணர்வு!

## மலர்விழி

கற்பனை மென்மேலும் வேகத்துடன்
செயற்பட்டுக் கொண்டிருந்தது.

கடந்த காலத்திலிருந்து எதிர்காலம் வரையும்
மிகவும் அண்மித்துக்கொண்டிருந்தது போன்ற
படிமத்துடன் தொடர் நினைவுகள்
அலைமோதிக்கொண்டிருந்தன.
ஆகவேதான்,
அன்பழகனுக்கு அருகில்
ஒரே உயரத்தில் நான் என்னைக் காண்கிறேன்.
நாம் இருவரும்
நடையுடை நயம் உடையவர்களாகவும்,
முதிர்ச்சி பெற்றவர்களாகவும் உள்ளோம்.
நாம் ஒருவருக்கொருவர் எழுதிய
கடிதங்கள் பரிமாற்றம் செய்யப்பட்ட
அவ்வாண்டுகளிலேதான்
ஒருவகையில் முதிர்ச்சி அடைந்தோம்.
நாம் இருவரும் இணைந்து
நமது விதியைத் தெரிந்தெடுத்தபடி
நகையகத்திற்கு முன்னால்
இன்னும் நின்று கொண்டிருக்கிறோம்.
அதன் சாளரமோவெனில்
எமது எதிர்காலத்தின்
கண்ணாடியாக மாறியிருந்தது.
அது எமது
எதிர்காலத்தின் வடிவத்தை
நிழலுருப்படுத்திக் காட்டுகிறது.

# அன்பழகன்

திருமணக் கணையாழிகள்
சாளரத்தில் இருக்கவில்லை.
நகையக உரிமையாளர் நீண்டநேரம்
எங்களுடைய கண்களுக்குள்
உற்று நோக்கினார்.
இறுதி முறையாக
தங்கத்தின் தரத்தை
சோதனை செய்தபின்
ஆழ்ந்த கருத்துக்களை
காத்திரமாக முன்வைத்தார்.
அவரது சிந்தனைகள்
எனது நினைவில்
வியத்தகு முறையில்
வேரூன்றி நின்றன.
அவர் கூறினார்:
இத் தங்கக் கணையாழிகளின் எடை
உலோகத்தின் எடையல்ல.
அது மனிதனுடைய உண்மையான எடை!
உங்கள் ஒவ்வொருவரது தனிப்பட்ட எடை!
இருவரினதும் ஒன்றுசேர்ந்த எடை!
ஆ! மனிதனின் சொந்த எடை!
மனிதனுடைய சரியான எடை!
ஒரே வேளையில்
அதிக பாரமானதாகவும்
எட்டுவதற்கு இயலாததுமாக

அது இருக்க முடியுமா?
சொற்ப தூரப் பறத்தலுடன்
எப்போதும் பிணைந்து உள்ள
மைய ஈர்ப்பின் எடை அது!
பறப்பது சுருள் வட்ட வடிவமுடையது,
நீள் வட்ட வடிவமுடையது,
இதயத்தின் உருவமுடையது!
ஆ! என்னே
மனிதனின் உண்மையான எடை!
இப் பிளவு,
இச்சிக்கல்,
இவ் ஆழத்தின் எல்லை,
இதயத்தையும், எண்ணத்தையும்
பிரிப்பது கடினமாக உள்ளபோது
பற்றிக் கொண்டிருப்பது.
இவைகள் அனைத்திலும்
ஒரு சுதந்திரம்.
சுதந்திரமும்,
சில வேளைகளில் கொந்தளிப்பும்!
இச் சிக்கலின் பொறிக்குள்
மாட்டப்பட்டிருக்கும்
சுதந்திரத்தின் கொந்தளிப்பு!
இவை எல்லாவற்றிலும்
பூமியின் செங்கோண நிலப் பிளவிலிருந்து
ஊற்றெடுக்கும் நீரைப் போன்று
சுதந்திரத்திலிருந்து மலரும்
அன்பு உள்ளது.

இதுதான் மனிதன்!
அவன் வெட்டவெளிச்சமானவன் அல்லன்;
நிலைபேறானவன் அல்லன்;
எளியவன் அல்லன்;
உண்மையில் அவன் வறுமையானவன்.
இப்படி,
தனி ஒரு மனிதனைப் பற்றி இருப்பின்
அப்படியாயின்
இருவர் பற்றியது,
நான்கு,
நூறு,
பத்து இலட்சம் பேர்கள் பற்றியது
எப்படி இருக்கும்!
இவ்வனைத்தையும் பெருக்கிப்பார்.
(உயர்வான சிறப்பை
பலவீனத்தால் பெருக்கு)
அப்போது மனித குலத்தின் விளைபயன்
மனித உயிரின் விளைபயன்
தெரியவரும்.

இதுதான்
அவ்விசித்திரமான
நகையக உரிமையாளர்
எமது கணையாழிகளின் அளவை
எடுக்கும் போது கூறியது.
அதன் பின்பு
அக் கணையாழிகளை
பதனிடப்பட்ட
மென்மையான
வரைமான்தோல் துண்டினால் துடைத்துச்

சாளரத்தில் முன்பு வைக்கப்பட்டிருந்த
சிறிய பெட்டி ஒன்றினுள் திரும்பவும் வைத்து
ஈற்றில் அதை மிக மெல்லிய தாளில் சுற்றினார்.
எமது உள்ளங்களை
துருவிப் பார்க்க விரும்பியவர் போல
எமது கண்களை
உற்றுப் பார்த்தபடியே
இவற்றைச் செய்து முடித்தார்.
அவர் கூறியவை எல்லாம் சரியா?
அவரது எண்ணங்களை ஒத்தனவா
எமது எண்ணங்கள்?
வாழ்க்கைப்பாதையில்
இத்துணை தொலைவில் நின்று
எம் இருவரில் ஒருவரேனும்
இதைப்பற்றிச் சிந்திக்க முடியாதென்று
எண்ணுகிறேன்.
சிந்தனையில் தோய்ந்து கிடப்பது
என்பதிலும் பார்க்க
உணர்ச்சிக் கனிவுடையதுதானே
அன்பு!

## மலர்விழி

ஆகவே,
எதிர் காலத்தை
படம் பிடித்துக் காட்டும்
கண்ணாடியிற் பார்த்தது போல்

நாம்
சாளரத்தில் எதிர் நிழலிடப்பட்டு
நின்று கொண்டிருக்கிறோம்.
அன்பழகன்
கணையாழிகளில்
ஒன்றை எடுக்க, மற்றையதை
நான் எடுக்க, நாம்
ஒருவர் மற்றவருடைய
கரத்தைப் பற்றினோம்.
கடவுளே!
இது
எவ்வளவு எளிமையானது.

எமது திருமணத்துக்கு
அழைக்கப்பட்டவர்களின்
எண்ணங்கள்
எத்தகையனவாக
இருக்க முடியும்?
அவர்கள்
மௌனமாக இருக்கும் போது
என்ன நினைப்பார்கள்?
அவர்கள்
பேசுவதை
நிறுத்தும் போது எதை
நினைத்துக் கொண்டிருப்பார்கள்?

## பாடகர் குழாம்

மிகவும் அழகான சந்தர்ப்பம்.
அது
எத்தனையோ உறவுகளை
நினைவுக்கு
கொண்டு வருகிறது.
நாம் உள்பொருளையே
உற்றுநோக்கி
கொண்டிருக்கிறோம்.
ஒரு நிழற் கீறுடன்
வாழ்கிறான் மனிதன்.
அவன் ஒளிக்கீறுடனும்
வாழ்கிறான்.
ஒளி
நிழலாக மாறுகிறது,
நிழல்
ஒளியாக மாறுகிறது.
மலர்விழியும் அன்பழகனும்
புதியவர்கள்.
இவ்வேளை மட்டும் இருவர்,
ஆயினும் இன்னும்
ஒருவர் அல்ல,
இவ்வேளையிலிருந்து
இருவராக இருப்பினும்
ஒருவராகவே இருப்பர்.
அவள் துக்கமாய்
இருக்கின்றாள் போல்

தென்படுகிறது.
ஒருவேளை
பொறுப்புணர்ச்சிக் கனதியாலும்,
மனக்கிளர்ச்சியாலும்
பாதிக்கப்பட்டிருக்கிறாள் போலும்!
அன்பழகனது
மேற்சட்டையின் முன்புறத்தில்
வைரம் ஒன்று
மின்னியது.
மலர்விழியின் கூந்தலில்
ஒரு வெள்ளைப்பூ
வேறு ஒருவகையாக
மிளிர்ந்தது.

முந்திரிகைச் சாறும்
வெள்ளை ஒளிகளை வீசுகிறது.
முந்திரிகைச் சாறு
ஒரு பொருள்.
அது மற்றவனில் வாழட்டும்.
மனிதன் - அவனே அன்பு
மலர்விழியும் அன்பழகனும்
முந்திரிகைச் சாறு!
முந்திரிகைச் சாறு!
ஒருவர்
மற்றவருடைய வாழ்வில்
ஒருவருக்கொருவர்
ஒளிக்கதிர்களை வீசுகிறார்கள்.

(உங்களது மதுக்கிண்ணத்தை உயர்த்துங்கள்)

ஆ! எத்தனை வார்த்தைகளும்
உள்ளங்களும்.
ஆ! எத்தனை வார்த்தைகளும்
உள்ளங்களும்.
ஆ! எத்தனை வார்த்தைகளும்
உள்ளங்களும்.

நாங்கள் துறவிகள் மடத்தின் ஓரமாக
உங்களுடன் சேர்ந்து வருவோம்.
பின்பு,
பெரும் சாலையால் செல்வோம்.
சற்றுத் தூரம்!
இன்னும் சற்றுக் கூடிய தூரம்!
ஆர்வத்துடனும்
நெஞ்சார்ந்த புன்னகையுடனும்
இக்கணப்பொழுது வரையும்
இணைந்து ஒன்றாகச் செல்வோம்.
பின்பு வாகனங்கள் தென்படும்.
அதன்பின் ஒரு வீதி
எங்களது பாதையைத் தடுக்கும்.
நீ மகிழ்வூர்திக்குள் ஏறியதும்
தனியே இருக்கவேண்டும்.

நாம்

திரும்புவோம் விண்மீன்களிடம்.

திரும்புவோம் அன்பிற்கும்

உணர்ச்சிகளுக்கும்

ஆ! மனிதன் உணர்ச்சிகளுக்கு

எப்படித் தவிக்கின்றான்!

மக்கள் நெருங்கிய உறவு நிலைக்கு

எப்படித் துடிக்கின்றனர்!

மலர்விழியும் அன்பழகனும்!

மரங்கள், மரங்கள்

நேரான, நுண்ணிய

அடிமரங்கள்-

உயரத்தில் மறைக்கின்றன.

கண்களினின்று

மூன்று இலட்சம் மைல்

தொலைவில் உள்ள

தண்மதியை

கண்களிலிருந்து

மறைக்கின்றன.

இருந்தும் அவர்கள்

- மலர்விழியும்

அன்பழகனும் -

இருவரே.

கண்களின் ஆழங்களிலும்

இதயங்களின் ஆழங்களிலும்

விளையாடும் சிறு மேளமாக

விண்மதி மாறுகிறது.

அன்பு!

கண் இமைகளில்

துடிக்கும் அன்பு!

மனிதனில்

எண்ணமாகவும் சித்தமாகவும்

உருவம் பெறுகிறது:

அன்பழகனாகத் துடிக்கும்

மலர்விழியின் விருப்பம்!

மலர்விழியாகத் துடிக்கும்

அன்பழகனின் விருப்பம்!

விசித்திரம்தான்!

ஆயின்

இன்றியமையாதது.

மீண்டும் நாம்

ஒருவர்

மற்றவரிடமிருந்து

அகன்று செல்கின்றோம்.

ஏனெனில்,

மனிதன் மனிதனில்

என்றென்றும் நீடித்து

நிலைத்திருக்க முடியாது.

அவன் தன்னிறைவு

கொண்டவன் அன்று.

மலர்விழி!
நீ அன்பழகனில்
என்றென்றும் நிலைத்திருக்க
எதைச் செய்யலாம்?
அன்பழகன்!
நீ மலர்விழியில்
என்றென்றும் நீடித்திருக்க
எதைச் செய்யலாம்?
மனிதன் மனிதனில்
என்றென்றும்
நீடித்திருக்க முடியாது!
மனிதன் தன்னிறைவு
கொண்டவன் அன்று!
உடல்!
எண்ணம் அதை ஊடறுத்து
செல்லுகின்றது.
உடலில் அவ்வெண்ணம்
திருப்தியடைவதில்லை.
அன்பு அதை ஊடறுத்து
செல்லுகின்றது.

மலர்விழி!
அன்பழகன்!
உங்களுடைய உடல்களில்,
அவைகள் இருக்கு மட்டும்
எண்ணத்துக்கு
காப்பிடம் தேடுங்கள்!
அன்புக்கு
காப்பிடம் தேடுங்கள்!

## அன்பழகன்

நகைக்கடையின் முன் நாம் இன்னும் நின்று கொண்டிருந்தபோதும்... அங்கு நின்றுகொண்டிருந்தவர்களில் விதிவிலக்கின்றி ஒவ்வொருவரும் தாம் தேடுவதை நகையகத்தின் சாளரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களுக்குள் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் அக்கடை இப்பொழுது இல்லை என்பது தெளிவாக இருந்தும், அது மலர்விழியையும் என்னையும் நிழலுருப்படுத்தும் கண்ணாடியாக மாறியிருந்தது. அது மட்டுமன்று, அது ஒரு சாதாரண தட்டையான கண்ணாடியன்று. மாறாக அது ஒவ்வொரு பொருளினதும் உருவத்தை உள்வாங்கும் கண்ணாடி வில்லை. அதில் நாம் நிழலுருப்படுத்தப்பட்டு மட்டும் அன்று, அதனால் உள்வாங்கி ஈர்க்கப்பட்டும் இருந்தோம்.

கடையின் சாளரத்தின் உள்ளே மறைந்து இருக்கும் யாரோ ஒருவரால் நாம் உற்று நோக்கப்பட்டு அடையாளங்காணப்பட்டது போன்ற உணர்வு என்னுள் தோன்றியது.

## மலர்விழி

அதில் எமது திருமணநாளைக் காணக்கூடியதாக இருந்தது. நாம் இருவரும் ஞாயிறுதின விழாக்கோலம் பூண்டவர்கள்போல் ஆடையணிந்து நிற்க, எமக்குப் பின்னால் பலரும் நின்று கொண்டிருந்தனர்: அவர்கள் திருமண விழாவுக்கு வந்திருந்த விருந்தினர். முதலில், நான் எழுந்து நின்ற நிலையையும், அதன்

பின் நாம் கணையாழிகளை மாற்றிக்கொண்ட பொழுது அன்பழகன் பக்கத்தில் முழந்தாட்படியிட்டிருந்த நிலையையும், என்னைப் பல்வேறு கணப்பொழுதுகள் ஊடாகவும், பல்வேறு சூழ்நிலைகள் ஊடாகவும் சாளரம் உள்வாங்கியிருந்தது. .. அக்கண்ணாடியில் எமது நிழலுருவம் என்றென்றும் நிலைத்திருந்துள்ளது என்பதிலும், அக் கண்ணாடியிலிருந்து அதை அகற்றி விடவோ பிரித்தெடுத்துவிடவோ முடியாதென்பதிலும் நான் உறுதியாக இருக்கிறேன். கண்ணாடியில் நம் இருவரினது உருவங்களும் தொடக்கத்தில் இருந்தே, அதாவது நகையகத்தின் முன்பாக தரித்து நிற்பதற்கு அல்லது அதற்கு எவ்வளவோ முன்னதாகவே இருந்துள்ளது என்ற முடிவிற்கு சிறிது வேளைக்குப் பின் நாம் இருவரும் வந்தோம்.

## அன்பழகன்

நான் முன்கூறியது போல, நகையக உரிமையாளர் எங்களை ஒருவிதமாகப் பார்த்தார். அவரது பார்வை ஒரே வேளையில் கனிவும் ஊடுருவும் தன்மையும் கலந்ததாக இருந்தது. அவர் கணையாழிகளை தெரிவு செய்து கொண்டு அவைகளை எடைபோட்டுப் பார்த்தபோது எம்மைக் கூர்ந்து நோக்குவதுபோன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அதன்பின் அளவுகளைச் சரிபார்ப்பதற்கு எமது விரல்களில் கணையாழிகளை போட்டார். அவர் தம்து கண்களால் எமது உள்ளங்களைத் தேடிப்பார்த்து எமது கடந்த காலத்தை எடைபோடமுனைந்தார் என்ற உள்ளுணர்வு என்னுள் உதித்தது. அவரது பார்வைப் பரப்பில் எமது எதிர்காலமும் விழுகிறதா? அவரது கண்களின் வெளிப்பாட்டில் உறுதியுடனான அன்பு கலந்திருந்தது. எதிர்காலம் எமக்குப் புரியாததொன்றாக இருக்கும். அந்நிலையை நாம் கவலையின்றி இப்பொழுது ஏற்றுக் கொள்கிறோம். அன்பு இத்தகைய ஏக்கத்தை வெற்றி கொண்டுவிட்டது. எதிர்காலம் அன்பில் தங்கியுள்ளது.

## மலர்விழி

எதிர்காலம் அன்பில் தங்கியுள்ளது.

## அன்பழகன்


ஒரு கட்டத்தில் எனது கண்கள் இன்னும் ஒரு தடவை வயது முதிர்ந்த நகையக உரிமையாளருடைய கூர்ந்த பார்வையைச் சந்தித்தது. அப்பொழுது அவரது அப் பார்வை எமது உள்ளங்களின் துடிப்பை அறிவதற்கு மட்டும் அன்று, எமக்கு ஏதோ ஒன்றை உணர்த்துவதற்காகவுமாய் இருந்தது என்பதை உணர்ந்தேன். அவரது பார்வைத் தளத்தில் மட்டும் அன்று, அவரது வாழ்வின் தளத்திலும் நாம் அவரை எதிர்கொண்டோம். அவருக்கு நேர் எதிரே எமது முழு இருப்பும் நின்றது. முன்பொருகால மலைகளில் கிடைத்த சமிக்கைகளை முற்றிலும் புரிந்து கொள்ள முடியாதிருந்தது போல், இப்பொழுது அவருடைய கண்களிலிருந்து எழுந்து கொண்டிருந்தபளிச்சிட்டு எழுந்துகொண்டிருந்த சமிக்கைகளையும் எம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இருந்தும், அச் சமிக்கைகள் எமது உள் இதயங்கள் மட்டும் சென்றடைந்தன. எது எதுவாக இருப்பினும் ஏதோ ஒரு வகையில், அவைகளின் திசைநோக்கி நாம் சென்றோம். அவை எமது முழு வாழ்வினதும் கட்டுமானத்தை உள்ளடக்கி நின்றன.

## மலர்விழி

நாம் நகையகத்தின் முன்னால் நீண்ட நேரம் நின்றோம். நாம் நேரத்தையும் கவனிக்கவில்லை. ஐப்பசித் திங்களின் மாலைக் குளிரையும் உணரவில்லை. ஆயினும் ஒரு கட்டத்தில், எமக்குப் பின்னால் சென்ற ஒருவர் உரத்துக் கூறிய சொற்களால் நாம் தட்டி எழுப்பப்பட்டோம்:

# யாரோ ஒருவர்

நேரம் பிந்திவிட்டது. கடைகள் மூடப்பட்டுவிட்டன. முதியவரான நகையக உரிமையாளரின் பட்டறையில் மட்டும் ஏன் இன்னும் வெளிச்சம் எரிந்து கொண்டிருக்கின்றது? அவரும் அதைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப் செல்ல வேண்டும்.



காட்சி இரண்டு

**மணமகன்**

எழிலரசியும் மதிவாணனும்

## ஏழிலரசி

அண்மை நாட்களின் நிகழ்ச்சிகளை
மீண்டும் எண்ணிப் பார்க்கும் போது,
நான் ஒரு பதட்ட நிலையிற்றான்
இருந்திருக்க வேண்டும்;
நான் கசப்புணர்வுடன்
காட்சியளித்திருக்கவேண்டும்.
கசப்பு என்பது
உணவையும்,
பானத்தையும் சார்ந்த சுவை.
அது உள்ளார்ந்த சுவையுமாகும்.

ஏமாற்றத்தை
அல்லது எதிர்பார்ப்பு நிறைவேறா அதிர்ச்சியை
அனுபவிக்கும் போது,
கசப்புணர்வு
ஆன்மாவின் சுவையாகிறது.
நாம் சிந்திக்க, சொல்ல, செய்யக்கூடிய
ஒவ்வொன்றையும்
அச் சுவை ஊடுருவுகிறது.
ஏன், எமது புன்னகையை முதலாக
தன்மயமாக்கி விடுகிறது.

நான் உண்மையாகவே ஏமாற்றத்தையும்
எதிர்பார்ப்பு நிறைவேறா அதிர்ச்சியையும்
அனுபவித்தேனா?
அது,
இருவரினது வரலாற்றினால்
வரையறை செய்யப்பட்ட
வெறும் சாதாரண
நிகழ்ச்சிகளின் ஓட்டமாக மட்டும்
இருக்க முடியுமா?
என்னில் எழுந்த இந்த
முதலாவது மனத்தாங்கலை
மணிவண்ணனிடத்தில்
நான் உடனடியாக
மனம் திறந்து சொல்லிய போது,
மேற்கூறியபடிதான் அதை

அவர் விளக்க முயன்றார்.

மணிவண்ணன்

எதுவோ செவிமடுத்தார்

என்பது உண்மை.

ஆனால் நான் கூறியதை

நெஞ்சார உள்வாங்கினார் என்று

எனக்குப் படவில்லை.

அதனால் எனது மனத்தாங்கல்

பெரிதாக வளர்ந்தது.

எனது துயரத்தைப் பற்றிய

எதிர்வினைகள்

அவரில் காணப்படாதபடியால்

அவர்

என்னை இப்போது

அன்பு செய்யவில்லை என்று

நான் நினைத்திருக்க வேண்டும்.

இந்நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள

நான் தயாராய் இருக்கவில்லை.

எமக்குள் ஒரு பிளவு ஏற்படுவதை

தடுக்கவும் என்னால் முடியவில்லை.

(பிளவின் விளிம்புகள்

முதலில் இயக்கம் எதுவும் இன்றி இருந்தன.

ஆனால் எந்நேரத்திலும்
பெரிது பெரிதாக
விரிசல் அடைந்து போகலாம்.
எது எப்படியாயினும்,
அவைகள் ஒன்றை ஒன்று
மீண்டும் நெருங்கியதுபோல்
தென்படவில்லை).
அவ் உணர்வு,
மணிவண்ணன் என்னுள் இருப்பதை
நிறுத்திவிட்டது போன்றிருந்தது.
அவரில் நான் இருப்பதை
நிறுத்திவிட்டேனோ?
அல்லது,
நான் இப்போது
என்னில் மட்டும் இருக்கிறேன்
என்ற ஒரு வெறும் உணர்வோ?

முதலில்,
எனக்கு நானே அந்நியமாக இருந்ததை உணர்ந்தேன்.
எனது உள்ளாந்தரங்கத்தின் சுவர்களுக்கு
நான் பழக்கப்படாதவளைப் போலாகி விட்டது போல்
இருந்தது அவ்வுணர்வு.
ஏனெனில், முன்பு மணிவண்ணனே
அவற்றுள் முழுவதும் இருந்தமையினால்
அவரின்றி இப்பொழுது
அவை வெறுமையாய் இருந்தன போல் தோன்றின.
எனது உள்ளாந்தரங்கத்தின் சுவர்களுக்குள்

எனது சுயத்தின் உரிமையை இழக்கச் செய்யக்கூடிய
தனி ஒருவரை,
ஏதோ ஒரு வகையில்
அங்குள்ள எனது இடத்தைப் பறிக்கக்கூடிய ஒருவரை
வாழ விட்டது பயங்கரம்தானே?
புறத்தோற்றத்தில் எதுவுமே மாறவில்லை.
மணிவண்ணன்
ஒரேமாதிரி நடந்து கொள்வது போல் தென்பட்டது. . .

ஆனால் அவரால்
எனது ஆன்மாவில் உருவாகிய காயத்தை
குணமாக்க முடியவில்லை.
அது அவருக்கு வேதனையையும்
ஏற்படுத்தவில்லை.
அதை அவர் உணர்ந்திருக்கவும் இல்லை.
ஒரு வேளை அவர் அதை
உணர விரும்பியிருக்கவில்லை போலும்.
அவ் வேதனை தானாகவே குணமடையுமா?
அது தானாகவே குணமடைந்தாலும்
ஏதோ ஒரு வகையில்
அது எங்களைப் பிரிக்கவே செய்யும்.
அதற்கிடையில்,
குணப்படுத்தப் படவேண்டிய எதுவும்
தன்னில் இல்லை என்பதில்
உறுதியாயிருந்தார் மணிவண்ணன்.

எனது மனத்தாங்கலில் இருந்து
என்னை நான் மீட்டுக் கொள்வேன்
என்ற எண்ணத்துடன்
எனது மறைந்து கிடந்த
புண்ணுடன் வாழ்வதற்கு
என்னை விட்டுவிட்டார்
என்பதில் ஐயமில்லை.
தவிர, அவர் தமது உரிமைகள் பற்றி
நம்பிக்கை கொண்டிருந்தார்.
நானோவென்றால்,
அவ்வுரிமைகளை அவர் எப்போதும்
முயற்சி செய்து அடைய வேண்டுமென
விரும்பினேன்.
ஒரு முறை கிடைக்கபெற்ற ஒரு பொருள்
இனிமேல் இழக்கப்படமாட்டது
என்பதைப் போல்
நானும் கணிக்கப்பட விரும்பவில்லை.
இதில் எல்லாம்
ஒருவகையான சுயநலம் இருந்ததா?
மணிவண்ணனின் செயற்பாட்டை
என் மட்டில் நியாயப்படுத்த
நான் செய்யக்கூடியதை எல்லாம்
செய்யவில்லை.
ஏன்,
அன்பு என்பது
இருபக்க விட்டுக்கொடுப்புத்தானே?

அது,
இன்னுமொரு
மனித உயிர்மேல் வைத்துள்ள
பாசத்தினால் எழும்
ஒரு போராட்டத்திலிருந்து
ஓயாது தொடர்ந்து
பிறக்கின்றதாகவல்லவா
இருக்க வேண்டும்?
ஆகவே,
நான் மணிவண்ணனின் அன்புக்காகப்
போராடினேன்.
ஆனால் அவர்
இந்தப் போராட்டத்தின் பொருளை
உணரவில்லை என்றால்
எந்நேரமும்
நான் பின்வாங்கத் தயாராகவிருந்தேன்.
இருந்தும், முடிவாக, நான் மன்னிப்பதா?
அல்லது அம்முறிவு நிரந்தரமானதா?
சுயநலத்துக்கும்,
சுயநலமற்ற பண்புக்கும் இடையில் உள்ள
எல்லைக்கோடு
மிகவும் கடினமானது.
நான் ஒரு தாயாக இருந்தேன்.
ஒவ்வொரு இரவும்
அடுத்த அறையில்

எமது குழந்தைகள்
உறங்குவதற்குச் செல்வார்கள்:
அவர்களில் மூத்தவன்
இளங்கோ!
மற்றவர்கள்
தாரணி, கருணாகரன்!
பாலர் படுக்கை அறையில்
அமைதி நிலவியது.
நான் ஆழ்துயருடன் அனுபவித்த
எங்களது அன்பின் விரிசல்
பிள்ளைகளின் ஆன்மாவுக்குள்
இன்னும் புகவில்லை.

## தற்செயலாக உரையாடலிற் பங்குகொண்டு பேசும் ஒருவர்

அந்தப் பெண்ணை,
நான் இரண்டாவது தடவையாக இங்கு பார்த்தேன்.
அவள் முன்பு கூறப்பட்ட வயது முதிர்ந்தவரின்
நகையகத்தின் முன் சென்றுகொண்டிருந்தாள்.
அதன் கதவுப்பலகணிகளின்
நழுவடைப்புச் சட்டங்கள்
தரை மட்டும் இழுக்கப்பட்டிருந்தன.
கதவு சாவியால் பூட்டப்பட்டிருந்தது.
நகையக உரிமையாளர்
மாலை ஏழு மணிக்கு
தனது வேலையை முடித்துக் கொண்டு

வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார்.
நாள் முழுக்க வேலை செய்யும் அவர்
தனது கைவினைப்பாட்டுத் தொழில்
ஒரு மனிதனுடைய வாழ்வை
எவ்வளவு ஆழமாக ஊடுருவுகிறது
என்பதை உணராதிருக்கலாம்.
ஒரு தடவை அவருடன் அதைப்பற்றி
உரையாடினேன்.
நகையகக் கதவு திறந்திருந்தது.
நகையக உரிமையாளர்
வாயிற்படியில் நின்று கொண்டு
குறிப்பிட்ட எந்நோக்கமும் இல்லாதவரைப் போல்
வீதியால் செல்வோரை
பார்த்துக் கொண்டு நின்றார்.
கதிரவன் ஒளிவீசிக் கொண்டிருந்தது.
அதனால்,
கண்களைக் கூசச் செய்யுமளவுக்கு
வீதி முழுவதும் ஒளிமயமாக இருந்தது.
கொழுந்துவிட்டெரியும் சூரிய ஒளியின் விளைவாக
ஆண்களும், பெண்களும்
இருட்டு நிற மூக்குக் கண்ணாடிகளை
அணிந்துகொண்டனர்.
அவைகளினூடாக,
கிணற்றுக்குள் ஆழ்ந்து போவது போல்
இருளில் மூழ்குகின்ற கண்களின் நிறத்தை
பார்க்க முடியாது.
இருந்தும்,

அத்தகைய கண்ணாடிகளுக்குப் பின்னால்
(ஒரு விதமான மென்னிறம் தோயப்பட்டிருப்பினும்)
எல்லாற்றையும் கண் கூசாமல் பார்க்கலாம்.

நகையகம் இப்போது மூடப்பட்டு விட்டது
வீதியால் செல்லுபவர்களின் முகங்கள்
அந்திமாலையின் அரை இருளில் மறைந்தன.

## எழிலரசி

நான் இந்த இடத்தைக் கடந்து
அடிக்கடி சென்றிருக்கிறேன்.
ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து
வீடு திரும்பும் போதே அப்படிச் செல்வேன்.
(வேலைக்கு
குறுக்குப் பாதையாற் செல்வேன்).
இந் நகையகத்தைப் பற்றி
முன்பு அதிக அக்கறை காட்டவில்லை.
ஆனால், எமது அன்பில் ஏற்பட்ட விரிசல்
உறுதியான பின்,
மனித அன்பினதும்
"தாம்பத்திய விசுவாசத்தினதும்"
சின்னங்களாக விளங்கும்
திருமணத் தங்கக் கணையாழிகளை
நான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.
முன்பொருகால்,
அன்பு

மறுக்கமுடியாததொன்றாக,
இதயத்தின்
எல்லா நரம்பிசைக் கருவிக் கம்பிகளிலும்
மீட்டும் பண்ணாக விளங்கிய காலகட்டத்தில்
கணையாழி என்னும் அடையாளம்
கவர்ச்சியுள்ளதாக இருந்தது என்பது
என் நினைவுக்கு வருகிறது.
பிற்பாடு,
நரம்பிசைக் கருவிக் கம்பிகள்
படிப்படியாக ஒலியிழந்து போயின.
அதைப்பற்றி நம் இருவரில் எவரும்
எதையும் செய்ய முடியாதிருந்தது.
மணிவண்ணனினது தவறு அது
என நான் எண்ணினேன்,
என்னில் எக்குற்றத்தையும் நான் காணவில்லை.
ஒருவர் மற்றவருள் இருந்த இருப்பு
தேய்ந்து தேய்ந்து போனதால்.
வாழ்க்கை
மென்மேலும் அவ்விருவரினதும்
கடினமான கூட்டிருப்பாக மாறியது.
கடமைகளின் மொத்தத் தொகையில் மட்டும்
மாற்றம் இருக்கவில்லை.
வழக்கமானதும்,
மாறி மாறி வருவதுமான அத்தொகை
ஆர்வத்தின் கலப்பற்ற சுவையினின்று
வெகுதூரம் அகற்றப்பட்டிருந்தது.
ஆக, நூலளவு உறவுதான்
இருவரையும் இணைத்தது.

அப்போது,
மணிவண்ணனும் நானும்,
எமது விரல்களில் அணிந்திருந்த
திருமணக் கணையாழிகளைப் பற்றி
எண்ணிப்பார்த்தேன்.
ஒரு நாள்,
வேலையிலிருந்து திரும்பும் வழியில்,
நகையகப்பக்கம் சென்ற போது,
எனது கணையாழிகளை
விற்றுவிட எண்ணினேன்.
(அப்படிச்செய்திருந்தாலும் மணிவண்ணன் அதை
கவனித்திருக்க மாட்டார்.
அவரைப் பொறுத்தமட்டில்
எனது இருப்பு இல்பொருள் ஆகிவிட்டது.
அவரது வாழ்க்கையில்
நானும் கரிசனை எடுக்காதபடியால்,
அவர் எனக்கு
நம்பிக்கைத் துரோகம் செய்தாரோ என்பதையும்
அறியேன்.
அவர் என் மட்டில்
ஏனோதானோ என்ற மனப்பான்மையை
கொண்டிருந்தார்.
வேலை முடிந்தபின்
அவர் சீட்டு விளையாடப் போவார்
எனக் கருதுகிறேன்.
அதன்பின்
மது அருந்திவிட்டு

வீட்டுக்கு காலதாமதமாகி வருவார்.

வந்து, எதுவுமே பேசமாட்டார்;

பேசினாலும், முக்கியமற்ற ஏதாவது பற்றிப் பேசுவார்.

அதற்கு நானும் வழமையாக

மௌனத்தால் பதில் அளிப்பேன்).

ஆகவே இம் முறை

நகையகத்திற்குள்ளே செல்வதென்று

நான் தீர்மானித்தேன்.

நகையக உரிமையாளர்

தமது விரல்களில் கணையாழியை வைத்து

அதன் வேலைப்பாட்டைக் கூர்ந்து துருவிப்பார்த்து

அதிக நேரம் எடைபோட்டபின்

எனது கண்களுக்குள் உற்று நோக்கினார்.

கணையாழியின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டிருந்த

எமது திருமணத் திகதியை சற்று நேரம் பார்த்தார்.

அவர் மீண்டும் எனது கண்களை ஊடுருவிப் பார்த்தபின்,

கணையாழியை நிறுப்பதற்காக நகைத்தராசில் வைத்தார்.

பின்பு,

"இந்தக் கணையாழியில் எவ்வித நிறையுமில்லை.

பூஜ்யத்திலிருந்து ஊசி சற்றும் அரக்கவில்லை.

ஒரு கீழாயிரச் சீரெடை முதலாக

என்னால் காட்ட முடியவில்லை.

உமது கணவர்
இன்னும் உயிரோடுதான் இருக்க வேண்டும்.
ஏனென்றால்,
உங்கள் இருவருடைய கணையாழிகளும்
தனித்தனியே நிறுத்துப் பார்க்கும் பொழுது
எடையற்றவையாக இருக்கும்.
இரண்டும் சேர்ந்தால் மட்டும்
அவைகளின் எடை பதிவு செய்யப்படும்.
எனது நகைத் தராசுக்கு
ஒரு தனியியல்புக் கூறு உண்டு:
அது உலோகத்தை எடை போடாது.
மனிதனின் முழு இருப்பையும்
விதியையும் எடை போடும்.''
என்று கூறினார்.
வெட்கத்துடன் கணையாழியை
திருப்பிப்பெற்றுக் கொண்டு,
மறுபேச்சின்றி கடையை விட்டு அகன்றேன்.
நகையக உரிமையாளரோ தமது பார்வையால்
என்னைப் பின்தொடர்ந்தார் என்று நான் நினைக்கிறேன்.

அன்றிலிருந்து,
வேறு வழியாலே வீடு செல்லத் தொடங்கினேன்.
அதன் பின், மீண்டும் இன்று. . .
அந் நகையகம் பூட்டப்பட்டிருந்ததைக் கண்டேன்.

## தற்செயலாக உரையாடலிற் பங்கு கொண்டு பேசும் ஒருவர்

நகையகத்திற்கு அண்மையில் பார்த்த பெண்ணை
நான் தற்செயலாகச் சந்திக்கவில்லை,
அதைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.
இருந்தும், தற்செயலாகவே அவளுடன்
உரையாடத் தொடங்கினேன் எனக் கருதுகிறேன்.
அதன் விளைவாக
அவள் தனது வாழ்க்கைபற்றி
எனக்கு எதுவுமே ஒளியாமல் எடுத்துரைத்தாள்.
தனக்கு இனிமேல் தேவையற்றது என
எண்ணிய கணையாழியை
நகையகத்தின் வயோதிப உரிமையாளர்
விலைக்கு வாங்க விரும்பவில்லை
என்று இறுதியில் முறையீடு செய்தாள்.

அந்த உரையாடலின் போது,
மனித அன்பின் முழு வில்வட்டத்தையும்,
அன்பின் பாதாள விளிம்புகளையும்
நான் உணரக்கூடியதாக இருந்தது.
யாராவது ஒருவர் இவ் விளிம்பிலிருந்து
தவறிக் கீழே விழுந்தால்,
அவர் திரும்பி வருவது
மிகவும் கடினமாக இருக்கும்!
அத்தோடு,

தான் செல்ல வேண்டிய பாதையைவிட்டு
திசையற்று
வேறெங்கோ தனியே செல்லவும் நேரிடும்.
எழிலரசியின் சொற்களிலிருந்து,
மணிவண்ணன் பற்றி
நான் அறிந்து கொண்டேன்.

நான் எதுவோ நீதிபதி போலும்,
மணிவண்ணனுக்கு அளிக்கப்படும் தீர்ப்பை
நடைமுறைப்படுத்துபவர் போலும்,
என்னைக் கணித்து
அவை எனக்குக் கூறப்பட்டன.
ஆயின்
அவளின் வார்த்தைகளை உறுதிப்படுத்த
நகையக உரிமையாளரோ,
அல்லது வேறு எவருமோ
அங்கு இருக்கவில்லை.

## எழிலரசி

எள்ளளவும் முன்பின் அறிமுகமில்லாத ஒருவருடன்
இத்தகைய உரையாடலைத் தொடங்கியதைப் பற்றி
நான் என்னிலேயே ஆச்சரியப்பட்டேன்.
எனது சொல்லோட்டத்தில் குறுக்கிடாது
நான் கூறியதை
அவர் உன்னிப்பாக
கேட்டுக் கொண்டிருப்பதைப் பயன்படுத்தி

என்னைப்பற்றியும்

மணிவண்ணனைப் பற்றியும்

எடுத்துக் கூறினேன்.

உண்மையில்,

அது எனது உள்ளத்தில்

மிகவும் விரிவாக ஆயத்தமாக்கப்பட்டிருந்த

தனிமொழிபோல் அமைந்தது.

மணிவண்ணனுக்கு எதிரான

முறைப்பாடுகளும், குற்றச்சாட்டுக்களும்

ஒன்றன் பின் ஒன்றாக முன்வைக்கப்பட்டன.

எனது தீர்ப்புக்களின் உண்மைத் தன்மை பற்றி

நான் உறுதியாக இருந்தேன்.

ஆனால், அன்பின் உள்ளார்ந்த பிளவு பற்றியும்,

விரிசல் பற்றியும்,

நோவை ஏற்படுத்தும் புண்பற்றியும்

ஒரு பெண்ணைப் போலவே பேசினேன்.

அப் பெரியவர்

நான் கூறியதைக் கருத்தூன்றிக் கேட்டார்.

அவரது குடும்பப் பெயரோ

அல்லது அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார் என்றோ

எனக்குத் தெரியாது.

அவரும் என்னுடைய பெயரைக் கேட்கவில்லை.

இருந்தும், ஒரு கட்டத்தில்

“எழிலரசி” என்று விழித்து
(பிழையின்றியே எனது பெயரைக் குறிப்பிட்டார்!)
“சரியாக என்னைப் போலவேதான் நீயும் உள்ளாய்.
நீயும் மணிவண்ணனும்,
நீங்கள் இருவரும் என்னைப் போலவே உள்ளீர்கள்.
எனது பெயர் மதிவாணன்” என்றார்.

அவரது இருப்பிடத்தின் சரியான முகவரியை
கேட்க விரும்பினேன்.
(என்றோ ஒரு நாள் அவருக்குச் சில வார்த்தைகளை
வரையலாம் என எண்ணினேன்).
அதன் பின்,
நாம் இருவரும் வீதியின் கீழ்ப்புறம் நோக்கி
சற்று நேரம் நடந்தோம்.
நான் மதிவாணனுடன் இருந்தபோது
மன நிறைவுடன் இருந்தேன்.
ஓர் ஆணுக்குரியதும்
முதிர்ச்சியானதுமான அவரது தோற்றம்
என்னை ஈர்த்தது.
அவரில், சிந்தனை மேலோங்கி நிற்க
துன்பத்தின் சிறு சாயலும் படர்ந்திருந்தது.
(மணிவண்ணனையும் பார்க்க
எவ்வளவு வேறுபட்டவர் அவர்!).

சற்றுப் பொறுத்து

நாம் அதே இடத்திற்கு வந்து தரித்து நின்ற போது,

சடுதியாக மதிவாணன் கூறினார்:

இதோ மீண்டும் அப் பெரியவரின் நகையகம்!

விரைவில் மணமகன் இவ்விடத்தால் செல்வார்.

## மதிவாணன்

அதன்பின்

அந்தப் பெண்ணுக்கு (எழிலரசிக்கு)

நான் கூறினேன்:

இன்னும் சிறிது நேரத்தில்

மணமகன் வருவார்.

அவளது ஆன்மாவில்

இறந்து போன அன்பை

நினைத்துக் கொண்டே

நான் இதைச் சொன்னேன்.

மணமகன்

எத்தனையோ

வேறுபட்ட மக்களைச் சந்தித்து

எவ்வளவோ

வீதிகளைக் கடந்து செல்கிறார்.

அப்படிச் செல்லும் போது
அவர்களில் படிந்திருக்கும்
அன்பைத் தொட்டுச் செல்கிறார்.
அது கூடாதது என்றால்,
அதனால் அவர் வருத்தப்படுகிறார்.
அன்பில்லாதிருக்கும் போது
அன்பு கூடாதது.

அந்தப் பெண்ணிடம்
இதனையும் கேட்டது
எனக்கு நினைவுக்கு வருகிறது,
உன்னுடைய கணையாழியை
ஏன் இங்கு விற்க விரும்புகிறாய்?
இச் சைகை மூலம்
நீ உடைத்தெறிய விரும்புவது
உனது வாழ்வையா?
ஒருவன் தனது வாழ்வை
அடிக்கடி விற்பதில்லையா?

தனது ஒவ்வொரு சைகையாலும்
தன் வாழ்வு முழுவதையும்
தகர்ப்பதில்லையா?
ஆனால், அதனால் என்ன?
நாட்கணக்காக, மாதக்கணக்காக,
ஏன் ஆண்டுக்கணக்காக முதலாக

அலைந்து திரிந்தும்,

அதைவிட்டுப் போய்விடக்கூடாது.

திரும்பி வரவேண்டும்!

பழைய இடத்தில்

தன்னைக் காணவேண்டும்!

வாழ்க்கை என்பது

எதிர்பாரா நிகழ்ச்சிகளை நோக்கிய

துணிச்சற் பயணம்.

அதே வேளை

அதற்கு நியதி, கொள்கை மாறாத்தன்மை

என்பன உள்ளன.

அதனாலேதான்

சிந்தனையையும் கற்பனையையும்

அவை போகும் போக்கிற்கு

விட்டுவிடக்கூடாது.

அப்படியென்றால்,

சிந்தனை

எதனுடன் கூட்டாக இருக்க வேண்டும்,

என எழிலரசி கேட்டாள்.

அது

மெய்மையுடன்

கூட்டாக இருக்க வேண்டும் என்பது

தெட்டத் தெளிவு.

# எழிலரசி

ஒருவர் ஒன்றைப்பற்றி
உறுதியாக உணருவது தானே மெய்மை?
நமது உரையாடல் எதிர்பாராத் திருப்பத்தை எடுத்தது.
அதனால் அது வேறு எங்கு எங்கு
எம்மை இட்டுச் செல்லும் என்று
எனக்குச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை.
இது எனது உணர்ச்சிகளின் மென்[illegible]னதும்
அவரது அறிவுத் திறனினதும்
பலனே என்பது புலன்.

மணிவண்ணன் எனது விழிப்புணர்விலிருந்து
சிறிது காலம் அகன்றுவிட்டார்.
இருந்தும்,
அவரில் உறைந்திருந்த எனது பிரதிபிம்பத்தை
அவமானப்படுத்தியதையிட்டு
அவரை மன்னிக்க முடியாதென்பதை
அவ்வேளை உணர்ந்தேன்.
எனது இருப்பு அவரில் ஏதோ ஒரு வகையில்
இருந்திருக்கத்தானே வேண்டும்.
எது எதுவாயிருப்பினும்,
நான் அவரது மனைவிதானே!

நான் கூர்வுணர்வுடையவளாயும்
உணர்ச்சிக்கு ஆட்பட்டவளாயும் இருந்தேன்.
ஐம்புலன்களின் வழிப்பட்டது தானே அன்பு?

இருவரை இணைத்து அவர்கள் இருவரையும்
தமது உணர்ச்சி உலகில் உலவச் செய்யும்
சூழ்நிலை தானே அன்பு!
இதுவேதான் முழு உண்மை!
இருந்தும்,
மதிவாணன் இக் கருத்துடன்
முழுமையாக உடன்பட்டிருக்கவில்லை.
அவரது கருத்துப்படி,
இருவரது இருப்பின் இணைப்பாக்கமே அன்பு,
இவ்விருப்பு ஒரு கட்டத்தில் ஒருங்கு குவிந்து
அவர்கள் இருவரையும்
ஒரு வகையில் ஒருவர் போல் ஆக்குகிறது.

மணமகன் இவ் வீதிவழியே
இன்னும் சிறிது நேரத்தில் வருவார்
என அவர் மீண்டும் கூறினார்.
இரண்டாவது தடவையாகக் கேட்ட இச்செய்தி
என்னைக் கவர்ந்தது மட்டுமன்றி
என்னுள் ஓர் ஆவலையும்
சடுதியாக எழுப்பியது.
மணிவண்ணனிலும் வேறுபட்ட,
–ஆமாம் வேறுபட்ட–
குறைகளற்ற நிறைவான,
திடமான நல்லவர் ஒருவருக்கான ஓர் ஆவல்!
இந்தச் சடுதியான ஆவல் உணர்ச்சியுடன்
நான் வேறொருத்தியாகவும்,

இருந்ததிலும் பார்க்க இளமையாகவும்
மாறிவிட்ட உணர்வு என்னில் ஏற்பட்டது.
எனக்கு அக்கம் பக்கத்தில் சென்ற ஆண்களை
உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு,
நான் ஓடத் தொடங்கியிருக்க வேண்டும்.

. . . அவர்களுள் முதலாம் ஆளைக் கடந்து சென்ற போது அவன் நான் சென்ற திசையில் முதலாகப் பார்வையைச் செலுத்தவில்லை. ஏதோ ஓர் எண்ணத்தில் மூழ்கி, அவன் நடந்து சென்றான். தனது வியாபாரத்தைப்பற்றி எண்ணியிருக்கக் கூடும். ஒரு வேளை ஒரு கூட்டுவாணிக நிலையத்தின் மேலாளராக அல்லது பெருந்தொழில்நிறுவனம் ஒன்றின் தலைமைக் கணக்காளனாக அவன் இருந்திருக்கலாம். தலையை கூடத் திருப்பாமல் அவன் "மன்னிக்கவும்," என்று கூறினான்.

மன்னிக்கவும்.

## எழிலரசி

அவனை நான் தடுத்து நிறுத்த முயற்சிக்கவில்லை. இருந்தும், அவனது கவனத்தை ஈர்க்கவே விரும்பினேன். ஒவ்வொரு ஆணையும் என்னைப் பார்க்கவைக்க முயற்சி செய்வதற்கு நான் எவ்வளவு தயாராய் இருந்தேன்! அது எப்படி என்று எனக்குத் தெரியாது. அப்பேராவலின் ஒரு சாதாரண பிரதிபலிப்பாகத்தான் அது இருந்திருக்க வேண்டும். ஆயினும், அந்த உரிமையை யாரும் என்னிடமிருந்து பறித்தெடுக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தேன்.

இதுதான் மனித அன்பைப்பற்றிச் சிந்திக்க என்னைத் தூண்டுவது. மனித வாழ்வின் மேற்தளத்தில் வலுவுடையதாகப் பொறிக்கப்பட்டிருப்பது இதுபோல் வேறொன்றுமில்லை. அதேவேளை இதைவிட அறியப்படாததும் மறைபொருளானதுமான வேறெதுவும் இல்லை. மேற்தளத்தில் காணப்படுவதற்கும் அன்பின் மறைபொருளிற்கும் இடையிலான வேறுபாடுதான் இந்நாடகத்தின் ஊற்றாக இழையும் வழுவாமல் அமைகிறது. அதுவே மனித இருப்பின் மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்று. அன்பின் மேற்தளம் தனக்கே உரிய நீரோட்டத்தை உடையது: வேகமாக ஓடும், விட்டுவிட்டு ஓடும், மாறி மாறி ஓடும் இந் நீரோட்டம் கவர்ச்சி நிறைந்த நிலைமைகளையும், அடிக்கடி வண்ணவடிவ மாறுதலுடைய அலைகளையும் உடையது. அது எத்தகைய திகைப்பூட்டலைச் செய்கிறதென்றால், மக்களை – ஆண்களையும் பெண்களையும்– இழுத்துச் செல்கிறது. அவர்கள் அன்பின் முழு மறைபொருட்தன்மையையும் தாம் பெற்றுவிட்டதான எண்ணத்தினால் இழுத்துச் செல்லப்படுகின்றனர். ஆனால், உண்மையாக அவர்கள் அன்பின் மேற்பரப்பை முதலாகத் தொடவில்லை. தமது இருப்பின் எல்லைகளை எட்டிப்பிடித்து விட்டோம் என்றும், அதனுடைய எல்லா மறைபொருட்களையும் அதனிடமிருந்து பறித்து எடுத்து விட்டோமென்றும், அதனால் வேறு ஏதும் இனிப் பெறுவதற்கு இல்லை என்றும் எண்ணி சிறிது காலம் இன்புற்றிருக்கிறார்கள். அது அப்படித்தான்: அக்களிபேருவகையின் மறுபுறத்தில் எதுவும் இல்லை, ஒன்றும் மிச்சமாக விடப்படவில்லை. ஆயின், எதுவுமே இல்லையென்பது தவறு! அப்படியிருக்க முடியாது. நான் சொல்வதைக் கேள், அப்படியிருக்க முடியாது. மனிதன் முழுமையும் தொடர்ச்சியும் உடைய ஒரு பிரிவிலாத் தொடர்பியலான பொருண்மை! ஆகவேதான் எதுவுமே மிச்சமாக இல்லை என்பது தவறு.

## எழிலரசி

நான் வழியிற் சந்தித்த இரண்டாம் பேர்வழியின் எதிர்வினை வேறுபட்டிருந்தது. அவனுடைய முகத்தை நான் உற்றுப் பார்த்தபோது, அவன் எனது பார்வையைக் கவனித்து, தான் போவதை நிறுத்திவிட்டு நின்றான். நான் பார்த்ததற்குப் பதில் போல என்னைப் பார்த்தான். என்னை நோக்கி இரண்டு காலடிகள் எடுத்துவைத்தான். “உன்னை நான் எங்கோ முன்பு பார்த்திருக்க வேண்டும். . .” என்று கூறினான்.

. . . உன்னை நான் எங்கோ முன்பு பார்த்திருக்க வேண்டும். . .

## எழிலரசி

அவனது தோளில் தொற்றிக்கொள்ளும் அளவுக்கு நான் தயாராகி விட்டேன். பொழுது சாயும் அவ்வேளை எவ்வளவு இதமாக இருந்தது. ஐப்பசித் திங்களின் துருநிறத்து உதிர் இலைகளை ஊடுருவி நின்ற ஒளிகள்தான் எத்தனை! இரவில் இலைகளின் துரு நிறத்தைப் பார்க்க முடியாது என்பது தெளிவு. ஆண் ஒருவனின் தோளைப் பற்றிக் கொண்டு தவிட்டு நிறக் கொட்டையுடைய வதங்கிய மரவகைகள் உள்ள சாலை வழியாக நடந்து செல்ல எனக்கு ஆவலாக இருந்தது. அவன் கேட்டான்: அதோ தெரியும் அக் களியாட்ட விடுதிக்கு போவோமா?... சற்று நேர மெல்லிசையைச் சுவைப்பது உமக்கு நல்லது...

அதோ தெரியும் அக் களியாட்ட விடுதிக்கு போவோமா?... சற்று நேர
மெல்லிசையைச் சுவைப்பது உமக்கு நல்லது...

அதன் பிற்பாடு ?. அவன் பதிலளிக்கவில்லை. பிற்பாடு என்ற அந்நிலையைப்பற்றி எனக்குப் பீதி பிடித்தது போல் தோன்றியது. அவனுக்கு ஒரு மனைவி இருக்க வேண்டும். அவளைப் பற்றி அவ்வேளை அவன் எதுவுமே சொல்ல மாட்டான். கட்டுப்பாடற்ற பெண் என்பது எதைக் குறிக்கலாம் என்பதை சடுதியாக விளங்கிக் கொண்டேன். அவனின் தோள்களைப் பற்றிக் கொள்ள விடாது என்னை எதுவோ தடுத்தது. அவனும் அவ்வளவு வற்புறுத்தவில்லை. அவ்வேளை கட்டுப்பாடற்ற பெண் என்பதன் பொருளை நான் இன்னும் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

நான் எத்தனை காலடிகள் எடுத்து வைத்தேன் என்றோ, எந்தத் திசை நோக்கி நடந்தேன் என்றோ எனக்குத் தெரியாது. நகரத்தின் பழம் பகுதியைச் சுற்றியுள்ள சாலையிலிருந்து புனிதர்களின் சிலைகள் இடைக்குழிகளுள் வைக்கப்பட்டுள்ள கோவிலை நோக்கி நடந்திருப்பேன். எனக்கு ஒன்று நினைவுவருகிறது: பின்புற மாடக் குழியொன்றில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் சிலை உண்டு. அதற்கு முன்னால் இரவில் ஒரு விளக்கு எரியும். ஒளிக் கூண்டின் பல வண்ணக் கண்ணாடியால் மங்கலாக்கப்பட்ட அதன் வெளிச்சத்தை என்னால் காணக்கூடியதாக இருந்தது போல் பட்டது.

இருந்தும், நான் ஒன்றைப் பற்றியே எண்ணிக் கொண்டு வீதி வழியே போகும் ஒவ்வொரு ஆணையும் எதுவோ முன்னுக்குச் சென்று பார்ப்பது போல் பார்த்து நடந்து சென்றேன். ஒருவன் எவ்வளவு சீக்கிரமாக எனக்கு அண்மையில் நடந்து சென்றான் என்றால், எனது வலது தோளில் தொங்கிக் கொண்டிருந்த

குடையின் கைப்பிடியில் சிக்கிய தனது சிறு கைப்பையின் நுனியை இழுத்துப் பிடித்தான். இன்னொருவன் தனது தொப்பியைக் கழற்றி, எனது முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, மீண்டும் தொப்பியை விரைவாக அணிந்தான். இல்லை. எனக்கு அவளைத் தெரியாது என்பதைப் போன்ற வார்த்தைகளை அவன் முணுமுணுத்தது போல் என் காதிற்பட்டது. அவன் என்னை விட்டு அகன்றான்.

இல்லை. எனக்கு அவளைத் தெரியாது.

## எழிலரசி

வீதியின் நடைபாதைத்தள ஓரத்தில் இப்போது நிற்கின்றேன். தள விளிம்புக்கற்கள் வரிசையில் நிற்கின்றேன். சிறுமியாக இருந்தபோது தள விளிம்புக் கற்கள் வரிசையில் நடந்து திரிந்ததுபோல் இப்போதும் நடக்கின்றேன். முன்பு, தள விளிம்புக்கற்கள் வரிசையில் முழு வீதி ஓரமாக ஓடிச் செல்வேன்; எனது கால் தடக்குப்பட்டு வீதியில் விழவிடேன். இது எனது நண்பிகளுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு. "நான் மணிக்கூட்டு வீதியாலும் பூக்கடை வீதியாலும் ஓடி, ஒரே ஒரு தடவை மாத்திரம் விழுந்தேன்". "நான் ஒரு முறையும் விழவில்லை. யார் யாரைவிடக் கெட்டிக்காரி என்று பார்த்தீர்களா?" என எமது திறமைகளைப் பறைசாற்றுவோம்.

இப்போது மீண்டும் தள விளிம்புக் கற்கள் வரிசையில் நடக்கின்றேன். ஆனால் ஓடவில்லை. எனது கண்கள் காய்ந்துள்ளன. ஆயின் அவைகள் ஒளி வீசுகின்றன என்று எனக்குத் தெரியும். அங்கு விலை உயர்ந்த மகிழ்வூர்தி ஒன்று தெரிகின்றது. அதன் சாளரக் கண்ணாடி சற்றுக் கீழே இறக்கப்பட்டுள்ளது. அம் மகிழ்வூர்தியுள் சாரதியின் இருக்கையில் ஒருவர். நான் தரித்துநின்றேன்.

## மதிவாணன்

அன்பு என்பது துணிச்சலும் வீரமும் நிறைந்த பயணம் அன்று. அது முழு மனிதனுடைய சுவையைக் கொண்டுள்ளது. அவனது எடை அதற்கு உண்டு. அவனது முழு விதியின் எடையும் அதற்கு உள்ளது. அது ஒரு தனிக் கணமாக இருக்க முடியாது. மனிதனுடைய முடிவற்றதன்மை அதன் ஊடாகச் செல்கின்றது.

அதனாற்றான் அது இறைவனின் பரிமாணங்களிற் காணப்படுகின்றது. இறைவன் ஒருவரேதான் ஆதியும் அந்தமும் அற்றவர்!

மனிதன் காலத்திற்குள் நின்று வெளியே உற்றுப் பார்க்கிறான். மறப்பதற்காக, மறப்பதற்காக! ஒரு கணப் பொழுதிற்காக மட்டும். இப்போதைக்கு மட்டும்! தொடக்கமும் முடிவும் அற்ற தன்மையிலிருந்து தன்னை துண்டிப்பதற்கு! ஒரு கணப்பொழுதில் எல்லாவற்றையும் உள்வாங்கி, அவை அனைத்தையும் உடனே இழப்பது! என்னே, அந்த அடுத்த கணத்தின் சாபம்! அதற்குப் பின்வரும் எல்லாக் கணங்களினதும் சாபம்! தொடரும் இக்கணங்களினூடாக கழிந்து சென்ற அந்த ஒரு கணத்திற்குப் போவதற்கு நீ ஒரு வழியைக் கண்டுபிடிக்க முயல்வாய். கழிந்து சென்ற அக் கணத்தை மீண்டும் ஒரு முறை பெறுவதற்கும் அதன்மூலம் எல்லாவற்றையும் பெறுவதற்கும் முயல்வாய்.

## எழிலரசி

நான் நின்றேன். மகிழ்வூர்தியிலும், அதன் சாளரங்களிலும், அந்த மனிதனிலும் எனது பார்வை சென்றது. மணிவண்ணன் அடிக்கடி கூறியது எனக்கு

நினைவுக்கு வந்தது: "அன்பே, எப்போ ஒருநாள் நான் மகிழ்வூர்தி ஒன்றை விலைக்கு வாங்குவேன். அழகும் நாகரிகமும் வாய்ந்த நாம் இருவரும் அதை முன்பின் தெரியாத இடத்துக்கு ஓட்டிச் செல்வோம்.". அவன் என்னைப் பார்த்தான். நானும் அவனை அண்மித்துச் சென்றேன். மகிழ்வூர்தியின் சாளரத்தை இன்னும் சற்றுக் கீழே இறக்கினான். அவன் உணர்ச்சி கலந்த அடிக்குரலில் கேட்டான்: "நீ என்னோடு வரமாட்டாயா?"

நீ என்னோடு வரமாட்டாயா?

## எழிலரசி

தனக்குப் பக்கத்திலிருந்த இருக்கையைச் சுட்டிக்காட்டினான். சிறிது நேரத்தில், மகிழ்வூர்தியின் இயந்திரத்தை இயக்கி அதை ஓட்டத்தொடங்குவான். நாம் நின்ற இடத்தை விட்டு வேறு இடத்துக்குச் செல்வோம். தெரியாத ஓரிடத்துக்கு மகிழ்வூர்தியை ஓட்டிச்செல்வோம். மகிழ்வூர்தியின் உந்துகல இயக்காழியில் அவனது கைகள். பாதை காட்டும் படத்தின் வாரிழையை அவிழ்க்கும்போது அவனது தோள்மேல் மெதுவாக சாயலாம். அதன்பின் மேலேயிருந்து ஒளிகள். . . நான் மீண்டும் தேவைப்படும் ஒருத்தியாவேன். அவன் அவ்வார்த்தைகளை இன்னும் ஒரு தடவை திரும்பக் கூறினான்.

நீ என்னோடு வரமாட்டாயா?

## எழிலரசி

நான் அதை விரும்புகிறேன், நான் அதை மிகவும் விரும்புவதாக எண்ணுகிறேன். மகிழ்வூர்திக் கதவின் கைப்பிடியில் எனது கையை வைத்து விட்டேன் என நினைக்கிறேன். அதை நான் அழுத்தமாக அமுக்க வேண்டியதுதான்! சடுதியாக

ஒருவரின் கை எனது கைமேல்பட்டதை உணர்ந்தேன். நான் திரும்பி மேலேபார்த்தேன். எனக்கு எதிரே மதிவாணன் நின்றார். அவரது களைப்படைந்த முகத்தை நான் கண்டேன். அது அவர் உணர்ச்சி வசப்பட்டிருந்ததைக் காட்டிக் கொடுத்தது. மதிவாணன் எனது கண்களுக்குள் நேராக ஊடுருவிப் பார்த்தார். அவர் எதையும் சொல்லவில்லை. எனது கைக்கு மேல் அவரது கை வைக்கப்பட்டிருந்தது. அதன் பின் அவர் கூறினார்: வேண்டாம்.

## மதிவாணன்

வேண்டாம்

## எழிலரசி

மகிழ்வூர்தி எங்களை விட்டகன்றதை உணர்ந்தேன். ஒரு கணப் பொழுதில் அது பறந்து விட்டது. மதிவாணன் எனது கைமேல் வைத்திருந்த தமது கையை அகற்றினார். நீங்கள் மீண்டும் வந்தது வியப்பைத் தருகின்றது. நீங்கள் ஒரேயடியாகச் சென்றுவிட்டீர்கள் என எண்ணினேன். இவ்வளவு காலமும் எங்கிருந்தீர்கள் என்று நான் கூறியிருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

## மதிவாணன்

உனக்கு வீதியைக் காட்டுவதற்காகத் திரும்பி வந்தேன். விசித்திரமாய் இருக்கின்றது. கடைகள், செவ்வொளி விளக்குகள், கட்டடங்கள் நிறைந்துள்ளபடியினால் அன்று, மக்கள்தான் இவ் விசித்திரத்திற்குக் காரணம். அதோ பார்! வீதியின் அடுத்த பக்கத்தில் சில இளம் பெண்கள் போகின்றார்கள். அவர்கள் நடக்கிறார்கள். சிரிக்கிறார்கள். தமக்குள் உரத்த சத்தமாகப் பேசுகிறார்கள். அவர்கள் எங்கு சென்றுகொண்டிருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமென நான் நினைக்கவில்லை.

அவர்களின் விளக்குகள் அணைந்துவிட்டன. கொஞ்ச எண்ணெய் வாங்குவதற்காக போய்க் கொண்டிருக்கின்றனர். விளக்குகளில் எண்ணெய் நிறைய ஊற்றியதும், அவைகள் மீண்டும் எரியத் தொடங்கும்.

## எழிலரசி

ஆமாம். . .

## மதிவாணன்

அவர்கள்தான் விவேகமுள்ள கன்னியர். அவர்களின் தொகையை எண்ணு! அவர்கள் ஐவராக இருக்க வேண்டும். அவர்கள் போய்விட்டார்கள். அவர்கள் ஏன் கீழைத்தேச நீளாடைகளை அணியவில்லையென்று நீ வியக்கிறாய். அவர்கள் எங்களது நாட்டு மரபு, சூழலுக்கு ஏற்ப உடையணிந்துள்ளனர். கண்ணாடிக் கூண்டு விளக்குகளை ஏந்தியுள்ளனர். அவர்கள் எங்கு அவ்விளக்குகளை எடுத்துச் செல்கிறார்கள் என்று மக்கள் வியப்படைகிறார்கள். ஏன், ஒருவேளை யாருமே வியப்படையவில்லை! இக்காலத்தில் மக்கள் அநேகமாக எதனாலும் வியப்படைவதில்லைத்தானே!

இப்போது மறுபுறத்தில் உற்றுப்பார். அவர்கள் தான் விவேகமற்ற கன்னியர். அவர்கள் தூங்குகிறார்கள். அவர்களது விளக்குகள் சுவர்ப்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒருத்தி நடைபாதைத் தளத்தைத் தாண்டி புரண்டு சாக்கடைக்குள் விழுந்து விட்டாள்.

அவர்கள் அந்தக் குழிகளுக்குள் தூங்கிக் கொண்டிருப்பது போல் உனக்குக் தென்படலாம். உண்மையில் அவர்களும் வீதியால் நடந்து செல்கின்றனர். அவர்கள்

உறக்கத்தில் நடக்கிறார்கள்; மயக்கத்தில் நடக்கிறார்கள். அவர்களிடத்தில் செயலடங்கியிருக்கிற வெளி உண்டு. அதே வெளி இப்போது உன்னிலும் இருப்பதை நீ உணர்வாய் ஏனென்றால் நீயும் உறங்கத் தொடங்கிவிட்டாய். உன்னை எழுப்புவதற்கே நான் வந்தேன். சரியான நேரத்தில் வந்துள்ளேன் என எண்ணுகிறேன்.

## எழிலரசி

என்னை ஏன் நீங்கள் எழுப்பினீர்கள்? ஏன்?

## மதிவாணன்

இவ்வீதியின் கீழ்ப்புறமாக மணமகன் நடந்து வரவுள்ளார். அதனாலேதான் உன்னை எழுப்பினேன். விவேகமுள்ள கன்னியர் தங்கள் விளக்குகளுடன் அவரை எதிர் கொள்ள விரும்புவார்கள்! விவேகமற்ற கன்னியரோ உறங்கிவிட்டார்கள். விளக்குகளையும் இழந்துவிட்டார்கள். அவர்கள் உரிய நேரத்தில் துயில்விட்டெழமாட்டார்கள் என்று நான் உனக்கு அடித்துக்கூறுகிறேன். அவர்கள் அப்படித் துயில்விட்டு எழுந்தாலும் தங்களது விளக்குகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒளியேற்றுவார்கள் எனக் கூறுவதற்கில்லை.

## எழிலரசி

உண்மையில், வீதியின் குறுக்கே விளக்குகள் உருண்டோடிவிட்டன. துயில்கொள்ளும் ஒருவர் சடுதியாக எழுப்பப்பட்டால், அவர் எழும்பிய பின்னும் சற்று நேரம் தூக்கத்தில் இருப்பார். ஆனால் மணமகன் விரைவில் இவ் வழியால் செல்வார். அவர் கண்டிப்பாக ஓர் இளைஞனாக இருப்பார். அவர் காத்து நிற்கமாட்டார்.

# மதிவாணன்

ஆம், அவர் ஓயாது காத்துக் கொண்டிருக்கிறார். இடைவிடாது அவர் எதிர்பார்ப்பில் வாழ்கிறார். மனிதன் ஏதாவது ஒருவகை அன்பு இன்றி வாழ முடியாது. ஒருவகையில் அவன் அனுபவிக்கும் பல்வகைப்பட்ட பாசங்களின் ஒரு தூரப்பக்கத்தில் மேற்கூறியதும் உள்ளது. எடுத்துக்காட்டாக, உன்னைப் பார். அன்பின்றி நீ வாழ முடியாது. நீ இவ்வீதியின் கீழ்ப்புறம் நடந்து சென்று மற்றவர்களிடத்தில் உன்மேல் நாட்டத்தை தூண்டச் செய்ய முனைந்தாய் என்பதை நான் தூரத்திலிருந்தே அவதானித்தேன். உனது ஆன்மாவை ஒரு வகையில் என்னால் கேட்க முடிந்தது. நீ பெற்றுக்கொள்ளாத ஓர் அன்புக்காக மனக்கசப்புடன் ஓலமிட்டுக் கொண்டிருந்தாய். உன்னைக் கையில் எடுத்து அரவணைக்கும் ஒருவரை நீ தேடிக்கொண்டிருந்தாய்.

எழிலரசி! எமது வாழ்வை நிரப்பிக் கொண்டிருக்கும் இத்தகைய பாசங்களின் மறுபுறத்தில் உண்மையான மேலான அன்பு உண்டு என நான் எவ்வாறு உனக்கு நிரூபிக்கலாம். மணமகன் இவ் வீதியால் வந்து எல்லா வீதிகளாலும் செல்லப்போகின்றார். நீதான் மணமகள் என்று நான் எவ்வாறு உனக்கு எண்பிக்கலாம். சிறு காடு ஒன்றின் பச்சைப் புல் வெளியில் நீரூற்றைக் கண்டு பிடிக்க, அக்காட்டினது குத்துச் செடிகளதும் அதன் மண்ணினதும் அடுக்கைக் குத்தி ஊடுருவுவது போல், உனது ஆன்மாவின் ஓர் அடுக்கைக் குத்தி ஊடுருவ வேணடும். அப்போது நீ அவர் பேசுவதைக் கேட்பாய். அன்பே, நீ எவ்வளவு ஆழமாக என்னுடையவளாக இருக்கிறாய் என்றும் நீ எவ்வளவு தூரம் எனது அன்புக்கும் துன்பத்துக்கும் உரியவளாய் இருக்கிறாய் என்றும் உனக்குத் தெரியாது. ஏனெனில், அன்பு செய்வது என்பது இறப்பின் மூலம் வாழ்வைக் கொடுப்பதே! அன்பு செய்வது என்பது ஆன்மாவின் அடி ஆழங்களுக்குள் வாழ்வின் நீரூற்றைப் பீறிட்டு ஒழுகச் செய்வது. புறத்தே எரிந்தாலும் அல்லது புற அனற் கொழுந்தின்றி உட்கனன்று எரிந்தாலும், எரிந்து சாம்பலாகிவிடாத பொருள்தான் ஆன்மா. ஆம்! சுவாலையும் ஊற்றும். ஊற்றை நீ உணரவில்லை, ஆனால். நெருப்பினால் எரிகிறாய். உண்மைதானே?

## எழிலரசி

எனக்குத் தெரியாது. நீங்கள் எனது ஆன்மாவுடன் உரையாடினீர்கள் என்று மட்டும் எனக்குத் தெரியும். அஞ்ச வேண்டாம். அது என்னுடைய உடலுடன் சேர்ந்துள்ளது. எனது உடலின்றி எவ்வாறு அதை நான் அணைக்கலாம் அல்லது, எனதாக்கிக்கொள்ளலாம்?

நான் விவேகமற்ற கன்னி. நான் விவேகமற்ற கன்னியருள் ஒருத்தி. நீங்கள் என்னை ஏன் எழுப்பினீர்கள்?

## மதிவாணன்

மணமகன் வந்துகொண்டிருக்கின்றார் இதுவே அவரது வருகையின் சரியான நேரம். அதோ பார்! புதிதாக ஒளியேற்றப்பட்ட தமது விளக்குகளைக் கையில் ஏந்திக்கொண்டு இப்பொழுதுதான் விவேகமுள்ள கன்னியர் சென்றுள்ளனர். அவர்களது விளக்கின் ஒளி சுடர்மிக்கது, ஏனெனில் அவர்கள் விளக்கின் கண்ணாடியைத் துடைத்துள்ளனர். அவர்கள் மகிழ்ச்சியுடன் நடக்கிறார்கள். ஏதோ நடனம் புரிந்து செல்வதைப் போல நகர்ந்து செல்கின்றார்கள்.

## எழிலரசி

மீண்டும் அதோ! அந்தப் பெண்கள். அவர்களுடைய முகங்களில் கவனிக்கும்போக்கு சிறிதும் இல்லை. அவர்கள் உண்மையில் தூயவர்களா? உயர்குலப் பண்புடையவர்களா? அல்லது, வாழ்க்கையில் அவர்கள் என்னைவிட அதிகம் சாதித்துவிட்டார்களா?

விவேகமற்ற பெண்ணே! தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டும் தொடர்ந்து உறங்கிக்கொண்டிருக்கும் விவேகமற்ற பெண்ணே...

அதன் பின் நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன். இலேசான மேலாடை தரித்த ஒரு மனிதன் நடந்து கொண்டிருந்தான். அவன் தொப்பி அணிந்திருக்கவில்லை. முதலில் அவனின் முகத்தை நான் பார்க்கவில்லை. ஏனெனில் தலை குனிந்த வண்ணம் சிந்தனையில் மூழ்கியபடி நடந்து கொண்டிருந்தான். திடீர்த் தூண்டுதலால் உந்தப்பட்டு அவன் போன திசை நோக்கி நான் நடக்கத் தொடங்கினேன். அவன் தன் தலையை உயர்த்தி முகத்தைக் காட்டிபோது, நான் ஓவென்று கத்தாத குறைதான். அம்மனிதனில் மணிவண்ணனின் முகத்தைத் தெளிவாகப் பார்ப்பதுபோல் எனக்குப் பட்டது. உடனடியாக நான் மதிவாணன் நின்ற இடத்தை நோக்கிப் பின்வாங்கினேன். அவரது கையை நான் அழுத்தமாகப் பற்றினேன். மதிவாணன் கூறினார்:

## மதிவாணன்

நீ ஏன் திரும்பி வந்தாய் என்று எனக்குத் தெரியும். உன்னால் அவனுடைய முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

## எழிலரசி

நான் வெறுக்கும் முகத்தைப் பார்த்தேன்! நான் அன்பு செய்ய வேண்டிய முகத்தைப் பார்த்தேன்! இப்படி ஏன் என்னை நீங்கள் சோதிக்க வேண்டும்?

## மதிவாணன்

வாழ்க்கையின், இருப்பின் இக்கரையில் அன்பினால் பிணைக்கப்பட்டவர்களுடைய முகங்களின் ஒப்புடைமையைத்தான் நாம் ஒவ்வொருவரும் மணமகனின் முகத்தில் பார்க்கிறோம். அவர்கள் எல்லோரும் அவரில் உள்ளார்கள்.

## எழிலரசி

எனக்குப் பயமாக உள்ளது.

## மதிவாணன்

நீ அன்பிற்குப் பயப்படுகிறாய். நீ அன்புக்கு உண்மையாகவே பயப்படுகிறாயா?

## எழிலரசி

ஆம். நான் பயப்படுகிறேன். நீங்கள் ஏன் என்னைத் துன்பப்படுத்துகின்றீர்கள்?. அந்த மனிதனில் மணிவண்ணனின் முகம் காணப்பட்டது. அம்முகத்திற்கு நான் அஞ்சுகின்றேன்.

## பாடகர் குழாம், மணிவண்ணன்

ஒளிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன
வார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.
சிந்தனைகளுக்கோ அன்றே நாடகத்திற்கோ
இடைநிறுத்தமே இல்லை.
மக்கள் ஒரே விதமாக உள்ளனர்
விதி அவர்களைப் பிரிக்கின்றது.
அவர்கள் இணைந்து ஒற்றுமை இன்றி இருக்க
விதி அவர்களை மாற்றுகிறது.

நடைபாதைத் தளங்களில் விளக்குகள்

மங்கலாக எரிகின்றன.

எண்ணெய் எரிந்து முடிந்துவிட்டதா?

ஒளி ஊட்டப்பட்டது மழை நீரினால்

எண்ணெயால் அன்று

வீதியும் நடைபாதைத் தளமும்

கொட்டும் மழையினால் ஈரமாகியுள்ளன.

விவேகமற்ற கன்னியரே !

ஆ!விவேகமற்ற கன்னியரே!

தண்ணீரிலிருந்து யாரும்

தீப்பொறியை மூட்ட முடியாது.

(மனித காலடிகள் ஈரத்திலிருந்து

பாதணிகளால் பாதுகாக்கப்படுகின்றன)

மாயையும் புனைவும் அகலட்டும்.

இன்னும் யாரும் இப்பக்கத்தால்

செல்லவில்லை.

வெளிச்சத்தை யாரும் எடுத்து

அப்புறமாய்க் கொண்டு செல்லவில்லை.

அப்படியே எல்லாம் பழைய நிலையில் உள்ளன.

பசும்புற்தரை மழையினால்

ஊட்டம் பெறுகிறது.

-மரங்கள் இன்னும் வெடித்து உதிரவில்லை

எழிலரசியின் ஈரமான தலைமுடியும்,

மணிவண்ணனின் தோளும் மேலாடையும்...

இது நடந்து முடிந்துவிட்டது.

அது திரும்பவும் நடக்க

யாரும் அனுமதிப்பதில்லை.

ஈரத் தலை முடி,

ஏனெனில் அது இளவேனிற் காலம்

அல்லது இலையுதிர் காலம்.

அழவேண்டாம்.

உனக்குச் சுதந்திரம் இல்லை,

நீ அதில் நின்று வேறுபடவில்லை

மழை மட்டும்தான் செங்குத்தாக பெய்கிறது

எண்ணெயைத் திரிகள் பருகுகின்றன,

தீயைத் தண்ணீர் பருகுகின்றது,

கல் தண்ணீரைப் பருகுவதில்லை

-பருகுவதில்லை - பருகுவதில்லை-

தண்ணீர் தீயைப் பருகிவிட்டது.

விளக்குகள் அணைந்துவிட்டன.

இரண்டு விளக்குகள் அணைந்துவிட்டன.

ஒன்று தனது சுடரை

மற்றதுக்குக் கொடுக்கவில்லை

ஒன்று தனது எண்ணெயை மற்றதற்கு கொடுக்கவில்லை.

அதனது திரியையும் கொடுக்கவில்லை.

அதனது திரியையும் கொடுக்கவில்லை

திரியையும் கொடுக்கவில்லை

-இரண்டு விளக்குகளும்-

மழையும் -

பொழுது சாய்கின்றது

அவர் ஒளியைக் கொண்டுவந்தார்.

அவர் அதைக் கொண்டு வந்து,

அதை எடுத்துச் சென்றுவிட்டார்.

உன்னைப் போல், என்னைப் போல்,

அவனைப் போல், அவளைப் போல்

அவர் மாற விரும்பினார்.

ஆனால் அவர் போய் விட்டார்.

இப்பொழுது என்ன நேரமென்று

யாருக்குத் தெரியும்?

அது நான் தான்

அது நானே தான்

மணிவண்ணனின் தோள் பலவீனமானது.

எழிலரசியின் தலைமுடி உலர்ந்துவிட்டது.

அவளது கண்கள் . . .

## எழிலரசி

எனது தியானங்களிலும் மனக்காட்சிகளிலுமிருந்து
நான் என்னைத் தட்டி எழுப்பிய போது,
நான் அதே இடத்தில் நின்றுகொண்டிருந்தேன்.
முன்கூறப்பட்ட உரிமையாளரின் நகையகம்
முன்பு போலவே பூட்டப்பட்டிருந்தது.
அவரது கண்களின் வெளிப்பாடு
அவரது சொற்களில் தங்கியிருக்காது
பின்வரும் பணிப்புரையைக் கொடுத்தது என்று
எனக்கு நினைவுக்கு வருகிறது:
"நீ எனது கண்பார்வையின் தளத்துக்குக் கீழே
ஒரு போதும் இருக்கக்கூடாது.
நீ அதற்குக் கீழே கொஞ்சமும் விழக்கூடாது,
ஏனெனில் உனது வாழ்வின் எடை
எனது தராசில் காட்டப்பட வேண்டும்."

அதன் பின்
மறைந்து கிடந்த நம்பிக்கையோடு
சடுதியாக வாக்களிக்கப்பட்ட மணமகனை நோக்கி
நான் ஓடிய போது
மணிவண்ணனின் முகத்தைக் கண்டேன்,
எனக்காக அவர் அப்படியொரு முகத்தைக் காட்ட வேண்டுமா?
ஏன்? ஏன்?



காட்சி மூன்று

# பிள்ளைகள்

## தாமரைச்செல்வியும் அருட்செல்வனும்

## மலர்விழி

அருட்செல்வன் தாமரைச்செல்வியைப்பற்றி
எடுத்துக்கூறிய அன்று
புதிய வீதிகளையும் சுற்று வழிகளையும்
காணவேண்டும் என்ற திட்டமிட்ட
நோக்கமுடையவளைப்போல்
முன்பு எப்போதையும் விட
மிகவும் ஆறுதலாக வீட்டுக்குத் திரும்பினேன்.
எனது மகனின் வார்த்தைகளைப்பற்றி
ஆழச்சிந்தித்து எனது உள்ளத்தில்
அவைகளுக்குரிய சூழலை
தேடிப் பிடிக்க வேண்டிய தேவை
எனக்கிருந்தது என்பது தெளிவு.

அவளைப்பற்றி
முன்பே நான் அறிந்திருந்தேன்.
அருட்செல்வனின்
உடன் மாணவ மாணவிகளில்
அவளும் ஒருத்தி.
அவளில் அருட்செல்வன்
ஈடுபாடு கொண்டிருந்தான்
என்பதையும் நான் அறிந்திருந்தேன்.
ஒரு சில தடவைகள் நான்
அவளைப் பார்த்துமிருக்கின்றேன்.
அவள் மென்மையானவள்,
ஒதுங்கும் நாணமுடையவள்.
தன்னுட்தானே
அடைபட்டுக்கிடக்கும்
பண்புடைய அவளது
உண்மையான தகமை
எவ்வளவுக்கு அகமுகமாய்
ஈர்க்கப்படுகின்றது என்றால்,
அது மற்ற மக்களை
சென்று அடைவதில்லை
என்ற மனப்பதிவு என்னில் உண்டானது.
அது உண்மையான விழுமியமா?

இப்படியாக
எனக்குத் தெரியாத வீதிகளால் சென்று
தாமரைச் செல்வி பற்றி எண்ணினேன்.
ஆயின் அருட்செல்வனே மீண்டும் மீண்டும்

மனக்கண்முன் வந்துகொண்டிருந்தான்.
எனது சொந்த இருப்பு
எவ்வளவு எனக்கு நெருக்கமாக உள்ளதோ
அதேபோல் அவனைப்பற்றி எண்ணுவதும்
என்னுடன் ஒன்று கலந்து விட்டது.
அது எத்தனை பாதைகளை
எனது உள்ளத்தின் விழிப்பு நிலைத்தளத்தில்
குடைந்துள்ளது என்றால்,
எங்கேயாவது ஒரு எண்ணம் உதித்தால்,
அது அப்பாதைகளில் ஏதாவது ஒன்றை
சந்தித்தே ஆக வேண்டும்.
இப்பொழுது
நான் நகையகத்திற்கு முன்னால்
நிற்கிறேன் (என எண்ணுகிறேன்).
சடுதியாக,
முன்பு ஒருகால் எங்களுடைய
–அன்பழகனினதும் என்னுடையதும் –
விதியை பிரதிபலித்துக் காட்டிய
கண்ணாடி போன்ற ஒன்றைக்
காணக் கூடியதாக உள்ளது.
வாசற்படியில் நாங்கள் நீண்ட நேரம் நின்றோம்.
ஐப்பசித் திங்களது நாளொன்றின்
பொழுது சாயும் வேளை!
நமக்கு முன்பாக திருமணக் கணையாழிகள்
சாளரத்தில் வைக்கப்பட்டிருந்தன.
சற்றுப் பின்னர் எமது கைகளின் விரல்களில்
அவைகளைக் கண்டோம்.

அவ் விசித்திரமான கண்ணாடியில்
எமது அண்மிய எதிர்காலம் தென்பட்டது.
அக்காட்சியின் மதில் ஊடாக
நல் வாழ்த்துக் கூறும்
மக்கள் கூட்டம் நுழைந்தது.
அவர்களின் உரையாடல்களை கேட்டோம்.
அதற்கும் மேலாக
அவர்களது எண்ணங்களை
நாம் அறிந்தோம்.
நாம் இருவரும்,
–அன்பழகனும் நானும் –
இரு தங்கக் கணையாழிகளின் ஊடாக
ஓிருப்பில் ஒன்றாக மாறினோம்.
அந்தக் கட்டம்வரை மட்டும் உள்ளவற்றை
நாம் கண்ணாடியில்
புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.
மிகுதியை அறிய முடியாதிருந்தது.

அருட்செல்வன்
என்னில் கருவாகியிருந்தான்.
ஆயினும், இன்னும் பிறக்கவில்லை.
அன்பழகனின் பின்னைய விதி,
எமது ஒன்றிப்பின் வரலாறு,
அப்போது அறியமுடியாததாக இருந்த
அனைத்தும்
இப்போது மனித உருவம் தரித்து விட்டது.

அருட்செல்வனுக்கு
இரண்டு வயது நடந்தபோது
அன்பழகன் போர் முனைக்குச் சென்றார்.
அவர் எம்மைப் பிரிந்து செல்லச் சற்றுமுன்
-கதவு தாழிடப்படுமுன்-
குழந்தையைத் தூக்கி
நீண்ட நேரம் இறுகத் தழுவினார்.
அதுவேதான் இறுதிக் காட்சி!
அருட் செல்வனுக்கு
அவனது தந்தையைத் தெரியாது.
நம் இருவரினதும் ஒன்றிப்பின் உறவு
அக் குழந்தையில்தான் தங்கியிருந்தது.
மேலதிகமாக வேறு எதுவும் இல்லை.
அருட்செல்வன் வளர்ந்தான்.
அன்பழகன் என்னில் இறக்கவில்லை.
எந்தப் போர் முனையிலும்
அவர் இறக்கவில்லை.
அவர் திரும்பி வர வேண்டியிருக்கவுமில்லை,
ஏனெனில் ஒருவகையில்
அவர் இங்கேதான் உள்ளார்.

நம்பிக்கையின் விளிம்புகளில் நின்று
அதை நாளாந்தம் ஊடுருவும் அச்சம்
எவ்வளவு பயங்கரமானது என்பது பற்றி,
எனது கணவனே,
உமக்குத் தெரியாது.
பயமில்லாத நம்பிக்கையுமில்லை,

நம்பிக்கையில்லாத பயமுமில்லை.
அருட்செல்வன் வளர்ந்தான்.
அவன் வளரவளர
அவனில்
உம்மையே நான் கண்டேன்.
மிகவும் விசித்திரமான
உமது ஆட்தன்மையின்
எல்லையை விட்டு
நான் செல்லவில்லை.
உமக்கே
என்னை நான் கையளித்திருந்தேன்.
உம்மிலிருந்து எவ்வாறு அகல்வதென்று
எனக்குத் தெரியவில்லை.
நீங்கள் என்னிடம் வருவதில்லை,
அதற்கு முயற்சிகூடப் பண்ணுவதில்லை.
கண்ணாடியின் தூரப் பக்கம் ஒன்றில்
நகையக வினைஞர் கணையாழிகளை
பொருத்தியது தெரிந்தது
கண்ணாடியின் தூரப் பக்கம் ஒன்றில் தான்
எமது விதியும் பிளவுபடுத்தப்பட்டது.
ஆயினும் எமது ஒன்றிப்பு
குலையாதிருந்தது.

ஒருகால் நீங்கள் உம்முடைய அன்னைக்கு
"மலர்விழி" என்று கூறியது போல்
அருட்செல்வன்
தாமரைச் செல்வி பற்றி,

–அந்த விசித்திரமான
நாணம் மிக்க பெண்ணை–
இன்று என்னிடம் சொன்னான்.
வார்த்தை பொழியப்பட்டு விட்டது.

ஆக, எமது விசித்திரமான
கதையின் தொடர்ச்சியை
எண்ணிக்கொண்டு,
மீண்டும் இன்று
நகையகத்தின் முன் நின்றேன்.
எமது புதிய இருப்பின் சமதளப் பரப்பு நிலை
வயது போன அம்மனிதனின் கண்களில்
தெரிந்தது.
எமது உள்ளங்களோ நிமிர்தளம்.
(நிமிர்தளமும் சமதளப்பரப்பும் சந்தித்தன).

அதன்பின்பு
அவர்கள் இருவரையும் ஒன்றாகக் கண்டேன்.
இருவரும் நிறைந்த மகிழ்ச்சியுடன்
அவ்விடத்திலிருந்து அகன்று கொண்டிருந்தனர்.
தாமரைச்செல்வி தனது புன்னகையின் மூலமாக
அடக்கமான ஒரு கண்டுபிடிப்பை
வெளிக்காட்டினாள்:
அருட்செல்வன் அவளைப் பற்றி
நன்கு அறிந்துகொண்டான்.
அவர்களது எண்ணம்
அவர்கள் ஒவ்வொருவருடைய

அகத்தையும் முகத்தையும் நிரப்பி
மலர வைத்தது.
(என்னைச் சந்திக்க வரும் உங்களுக்காக
நானே தாமரைச் செல்வியாய் நிற்பதாக
ஒரு கணம் நினைத்தேன்).
அவர்கள் என்னைக்கூட பார்க்காமல்
என்னைத் தாண்டி சென்றிருக்கலாம்.
என்னைக் காணாமலும் சென்றிருக்கலாம்.
எப்படியிருப்பினும்
அவர்களது முழு உரையாடலும்
எனக்குத் தெரிந்ததொன்றாக
என்னுள் அடங்கி இருக்கவேண்டும்.

(அருட்செல்வனினதும் தாமரைச்செல்வியினதும்
உரையாடல் இத்தகையது)

## அருட்செல்வன்

நான் எனது அம்மாவின் பிள்ளை.
உன்னிலும் நான் அவளையே காண்கிறேன்!

தந்தையைப் பற்றி எனக்கு நினைவில்லை.
ஆக,
ஒரு ஆண்மகன் எப்படி இருக்க வேண்டும்
என்பதுபற்றி எனக்குப் புரியாது.
எனது வாழ்வைப் புதிதாகத் தொடங்குகிறேன்.
ஏற்கனவே அடையாளங்கண்டு

பின்பற்றக் கூடிய மாதிரிகள் எனக்கு இல்லை.
போர் முனையில் எங்கோ மடிந்த போது
அம்மாவில் அப்பா வாழ்ந்துவந்தார்.

என்னை அதன் பின் ஒருபோதும்
அவர் சந்திக்க வரவில்லை,
என்னோடு அவர் நாள்தோறும் இருக்கவில்லை.
அப்பாவின் கருத்து வடிவத்தை
அம்மா எனக்குள் படியச் செய்தாள்.
இப்படி, பெண் என்ற வகையில்
அம்மாவுடைய விதியைப்பற்றியும்,
எனது இருப்பினால் உருவம் பெறுபவரும்
அவளுடன் இல்லாதவருமான அப்பாவினால் எழுந்த
தனிமையைப் பற்றியும்,
நீ கற்பனை பண்ணுவதற்கும் மேலாக
நான் சிந்தித்துக் கொண்டு வளர்ந்தேன்.
ஆனால் இத்தகைய விதி உன்னை சந்திப்பதை
நான் விரும்பவில்லை.
இப்போது நமக்குள் நிரம்பி வழியும் ஒன்றிப்பை
நமது எதிர்காலத்துக்கும் நான் விழைகின்றேன்.
உன்னிடத்தில் அம்மாவின் சாயல்
அவ்வளவிற்கு உள்ளதா,
நான் அம்மாவைக் கைவிட்டு
உன்னில் அவளைக் காண்பதற்கு?
இந்த வாழ்வு முற்றிலும் புதிது,
மக்களும் புதியவர்கள்:
நீ என்னை அண்மித்து வந்தமையால்
மேம்படுத்தப்பட்டும்,

வரையப்பட்டும் உள்ள
எனது இருப்பை
சொல்ல முடியா முழுமையில் பார்ப்பதற்கு
என்னை வலியுறுத்தி இட்டுச்சென்றதற்காக
தாமரைச்செல்வி,
குறிப்பாக, உனக்கு நன்றி.

## தாமரைச் செல்வி

இருந்தும்
என்னைப்பற்றி எனக்குப் பயமாய் உள்ளது.
உமக்காகவும் பயப்படுகின்றேன்.
அதற்கு முன்,
நீண்ட காலமாக உம்மில் நான் அச்சப்பட்டேன்
எனக்காகவும் அச்சப்பட்டேன்.
உம்முடைய தந்தை
(போர் முனைக்கு) சென்று இறந்தார்.
இருந்தும்
(கணவன் மனைவி உறவின்) ஒன்றிப்பு
நிலைத்திருந்தது.
அவர்களின் அன்பு
உனக்குக் கையளிக்கப்பட்டது.
நீயே அதைப் பறைசாற்றி நிற்பவன்.
என்னுடைய பெற்றோர்களோ
இரு அந்நியர்போல்
வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்,
வாஞ்சையுடன் கனவு காணும்

(திருமண) ஒன்றிப்பு, அங்கு இல்லை.
இருவருக்கான வாழ்வை ஏற்றும்
அதைக் கொடுத்தும் காட்டும் ஒன்றிப்பு
அங்கு இல்லை.
என் அன்பே!
அது ஒரு பிழையாக இருக்காதா?
அது ஒரு முடிவுக்கு வாராதா?
வீட்டில் அந்நியன் போன்று உள்ள
என்னுடைய தந்தை செய்ததைப்போல்
நீயும் என்னை விட்டு விலகி விட மாட்டாயா?
முன்பின் தெரியாதவளைப்போன்று
மாறிய அம்மாவைப்போல்
நானும் உன்னை விட்டு விலகி விடுவேனா?
ஒரு மனிதனுடைய வாழ்வின் இறுதிவரை
மனித அன்பு நிலைத்து நிற்குமா?
ஆம், இப்போது காதல் உணர்ச்சி
என்னை ஊடுருவிப் பரவியுள்ளது.
எதிர் காலத்தைப்பற்றிய உணர்ச்சியும்
என்னை ஊருடுவி நிற்கிறது.
அதன் பெயர் அச்சம்.

எனது கரங்களை நீ பற்றினாய்.
(அப்படித்தான் அன்பு தொடங்கியது)
எனக்குத் தெரியும்.
குளிரால் உறைந்து
வெப்ப நிலைக்கு மீள முடியா
ஆபத்துக்குள்ளாகியிருந்த

என் இரு கைகளையும்
இரண்டாவது சோடிக் கைகள் போல்
உன்னுடைய கையில் எடுத்தாய்.
அவைகள் தான் எனது கைகள்.
அருட்செல்வன், நினைத்துப் பார்!
அக்காட்டின் விளிம்பில்
பனிநடைக் கட்டைகளைத்தரித்து
பனித்தரைமேல் நடந்த அவ்வேளை
கதிரவன் விரைவாக
மறைந்து கொண்டிருந்தான்.
நாம் பாதையைத் தவறவிட்டு நின்றோம்.
நான் உன்னைப் பற்றியும் பயந்திருந்தேன்.
என்னை ஆட்கொள்ளக் கூடியதும்
அதன்பின் என்னைவிட்டு
விலகிச் செல்லக் கூடியதுமான
உனது பலத்தையிட்டு நான் பயந்தேன். . .
(அது எதிர்காலத்திற்கான உணர்ச்சி)
இப்போது,
உன்னில் நம்பிக்கையை அடைந்த பின்,
என்னைப்பற்றி நான் அதிகம் பயப்படுகின்றேன்.
அருட்செல்வன்! உன்னுடைய தந்தை,
சென்றவர் ஒருபோதும் திரும்பவில்லை
எனக் கூறினாய்.
ஆயினும் என்னுடைய தந்தையைப் போலும்,
என்னுடைய அம்மாவைப் போலும் அன்றி,
அவர் எப்பொழுதும்
உங்களுடன் இணைந்திருந்துள்ளார்.

ஆகவே அன்றிலிருந்து
உன் அப்பாவைப் போல் நீ சென்றாலும்,
நீயும் தங்கியிருப்பாய் என்று
எனக்குள் ஒரு முறை நான் நினைத்தேன்
இப்போது எல்லாமே மாற்றம் அடைந்து விட்டது.
உன்னைப்பற்றி நான்
ஏக்கம் கொள்ள ஆரம்பித்தேன்.

## அருட்செல்வன்

அன்பு எமது விதியுடன்
பின்னிப் பிணைகின்றது என்ற உண்மையை
நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
அன்பை விதி பிளவுபடுத்தாவிடின்,
மக்கள் வெற்றியை அடைகின்றார்கள்.
அதைத்தவிரவும்,
அதற்கு மேலும்,
வேறு எதுவுமில்லை.
இவைதான் மனிதனுடைய எல்லைகள்.

இரவில் சில வேளைகளில்
நான் விழிப்பதுண்டு.
உடனே எனது மனத்தின் விழிப்பு நிலை
உன்னுடன் தான் உள்ளது.
குளிரால் உறைந்து கொண்டிருக்கும்
உன்னுடைய கரங்களை எடுத்து,
எனது கரங்களால் வெப்பமடையச் செய்தால்—

நம் இருவரையும் உள்ளடக்கி அணைக்கும்
ஒரு புதிய இருப்பின் தரிசனம்,
ஓர் ஒன்றிப்பு
உருவாகுமா என
நான் என்னைக் கேட்டதுண்டு.
இருப்பினும் அது பிற்பாடு இறக்கமாட்டாதா?
விடியும்வரை தூக்கம் கொள்ள முடியாதபடியால்
எங்கேயாவது ஓடி ஒளிந்து விடலாமாவென்று
தூண்டப்பட்டு
மணிக்கணக்காக இப்படிப் போராடுகின்றேன்.
ஆனால் நான் எங்கும் போகமுடியாது.
தாமரைச்செல்வி! இவ்வேளையிலிருந்து
நாம் இருவரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்.
என் அப்பா அம்மாவை விட்டு
தொடக்க காலத்திலேயே அகன்றதுபோல்
நான் உன்னைப் பிரிய நேரிடினும்
இப்பொழுதிலிருந்து
நாம் இருவரும்
ஒன்றாகச் செல்ல வேண்டும்.
அவைகள் அனைத்தையும் மறந்து
நமது விதியை
நாம் துரும்பிலிருந்து உருவாக்கவேண்டும்.
அன்பு என்பது
கடவுளால் நமக்குத்தரப்படும்
நிலையான சவால்!
விதிக்கு

நாம் சவால்விடவேண்டும் என்பதற்காகவே
கடவுள் அப்படிச் செய்கின்றார்
என நான் நினைக்கின்றேன்.

## தாமரைச் செல்வி

இப்போதிலிருந்து
நாம் ஒன்றாகச் செல்லவேண்டும்.
என்னுடைய அம்மா அப்பாவுக்கு
அந்நியமாக இருந்ததுபோல்,
அருட்செல்வன்,
உன்மட்டில் நான் இருக்க நேரிடினும்
நாம் ஒன்றாகச் செல்ல வேண்டும்.
இக்காரணத்தையிட்டே
நீண்ட காலமாக
நான் அன்பில் அச்சம் கொண்டிருந்தேன்.
இன்று, மனிதனுக்கு சவால் விடுக்கும்
அவ்வன்பைப்பற்றி
நான் இன்னும் அச்சப்படுகிறேன்.
நீ திருமணம் செய்ய இருக்கும் பெண்,
கடுமையானவள்.
மட்டுமீறிய கூருணர்வுடையவள்.
வெளித் தொடர்புகளைத் துண்டித்துவிட்டு
தனக்குள் தானே இலகுவாக உட்புகுந்து
தனது நான் என்னும் முனைப்பால்
தொடர்ச்சியாக உருவாக்கப்படும் வட்டத்தை
மிகவும் சிரமத்துடனேயே உடைத்து

வெளியேறுபவள்
ஒரு வேளை
நீ திருமணம் செய்யவிருக்கும் பெண்
நீ கொடுக்கக் கூடியதற்கு மேலதிகமாக
உள்வாங்குபவள்.
மிகக் குறைந்த அளவிலேயே
தன்னிடமிருந்து கொடுப்பவள்.
என்னுடைய அம்மா
இத்தனைக்காகவும்
என்னை ஒரு தடவைக்குமேல்
கடிந்துள்ளாள்.
இது முற்றிலும் உண்மை.
அவளையும் விட,
இப்போது எனது குறைகளை
தெளிவாகவும் கூர்மையாகவும்
நான் உணர்கின்றேன்.

## அருட்செல்வன்

நான் உனக்கு அப்பாலே செல்ல முடியாது.
ஒருவருடைய சுலபமான குணத்திற்காக
ஒருவர் மற்றவரை அன்பு செய்வதில்லை.
அடிப்படையில், ஒருவர் மற்றவரை
எதற்காக அன்பு செய்ய வேண்டும்?
தாமரைச்செல்வி!
உன்னை நான் ஏன் அன்பு செய்கிறேன்?

என்னைப் பதிலளிக்கும்படி கூறாதே!
என்னால் சொல்ல முடியாது.
அன்பு செய்யப்படும் பொருளை
தான் முந்திக் கடந்து செல்வதே அன்பு;
அல்லது,
அன்பு எவ்வளவு அண்மையில்
அன்பு செய்யப்படும் பொருளை
அணுகுகிறது என்றால்,
அது கிட்டத்தட்டப் பார்வையிலிருந்து
மறைந்து விடுகிறது.
ஆகவே,
மனிதன் வேறுபட்டுச் சிந்திக்க வேண்டும்.
உணர்ச்சியற்ற சிந்தனைகளை
விட்டுவிட வேண்டும்.
அந்த உணர்ச்சியான சிந்தனையில்
ஒரு கேள்வி இன்றியமையாதது:
அது படைப்பாற்றல் உடையதா?
ஒருவன் அதற்கு பதில் கூற முடியாது.
ஏனென்றால்,
அவன் அன்பு செய்யப்படும் பொருளுக்கு
மிக அருகில் உள்ளான்.
உணர்ச்சி வேக அலைகள் ஓய்ந்த பின்,
எஞ்சியிருப்பதுதான் முக்கியமானது.
தாமரைச்செல்வி!
இத்தனையும் உண்மை.
எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிப்பது

எது என உனக்குத் தெரியுமா?
எவ்வளவு தூரம் நம்மில்
உண்மை ஊறியுள்ளது என்றால்,
சாதாரணமான நிகழ்வுகளை
இத்தகைய உணர்ச்சிப்பெருக்கின்
இதயத்திலிருந்து
மிகச் சுலபமாக
நாம் ஏதோ ஒரு விதத்தில்
படித்துவிடுகின்றோம்.

## மலர்விழி

அன்பழகா!
நாம் அவர்களது விதியைப் பொறுத்த அளவில்
எவ்வளவு பாரதூரமான சுமையை
கொடுக்கின்றோமென்பதை
அந்த மாலைவேளை
என்னால் புரிந்துகொள்ளாதிருக்க முடியவில்லை.
தாமரைச் செல்வி பெற்றோரிடமிருந்து
பெற்றுக் கொண்ட மரபுரிமைப் பண்பை பார்ப்போம்:
அந்த அன்பின் பிளவு
அவளில் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது என்றால்,
அவளது சொந்த அன்பும்
ஒரு பிளவிலிருந்தே பிறக்கின்றது.
அருட்செல்வன்
அதைச் சீர்படுத்த முனைகின்றான்.

அவனில் என்மேல் உமக்குள்ள அன்பு
நிலைத்துவிட்டது.
அதனுடன் உம்முடைய பிரிவும் கூட.
உடன் இல்லாத ஒருவருக்கான
அன்பின் அச்சம்!
ஆனால் இது எம்முடைய தவறு அன்று.

அவர்கள் தமது புதிய இல்லங்களை,
அவர்களது ஆன்மாக்களின் இருப்பிடங்களை,
அடைவதற்கு
நாம் நுழைவாயிலாக அமைந்துள்ளோம்.
அவ்வாயிலை அவர்கள்
முயற்சியின்றிக் கடக்க முடியாது.
கடைசி, அவர்கள் தடக்கி விழாதுவிடில்
அதுவே போதுமானது.
நாம் அவர்களில் மிக நீண்ட காலம் வாழ்கிறோம்.
அவர்கள் எமது பார்வையின் கீழ் வளருகின்றபோது,
துருவிச் செல்ல முடியாத நிலத்தைப்போன்று
அணுக முடியாதவர்கள் போன்று காணப்படுகின்றனர்.
ஆனால் அவர்கள் ஏற்கனவே
எம்மை உள்வாங்கிவிட்டனர்.
அவர்கள் தொடர்புகள் அனைத்தையும்
அறுத்தவர்கள்போல் வெளியே தோன்றினாலும்,
அவர்களின் உள்ளே நமது இருப்பு உள்ளது.
அவர்களது வாழ்க்கை எமது சொந்தப் படைப்பை,
எமது சொந்த துன்பத்தை
ஏதோ ஒரு வகையில் புடமிட்டுப்பார்க்கிறது.

இது எவ்வளவு பயங்கரமான எண்ணம்?
(அப்படியில்லையெனின்
இறந்த காலத்தில் அன்பைப்பற்றி
எப்படிப் பேசமுடியும்? )

அவர்கள் இன்று நிற்பது போல,
நாமும் ஒரு முறை இதே
இடத்தில்தான் நின்றோம்.
அந்த விசித்திரமான நகையகத்தின்
சாளரத்தினூடாக நாம் உற்றுப் பார்த்தோம்.
ஒரு சில உண்மைகள்
மறைந்து போவதில்லை;
அவை இடைவிடாது
மக்களை நோக்கித் திரும்புகின்றன.
அவ் உண்மை,
ஒருசில ஆண்டுகளுக்கு முன்
எமது வாழ்க்கையில் வடிவம் தரித்தது போல்,
இன்று அவர்களில்
அது வடிவம் தரிக்கின்றது.
நான் அவர்களிடம் சென்று,
மாலை வணக்கம் தாமரைச்செல்வி,
மாலை வணக்கம் அருட்செல்வன்
என்று சொல்ல வேண்டும்.
அன்பழகன்!
நீங்கள் ஒரு முறை எனக்கு அருகில்
உம்மைக் காட்டிக்கொள்ளாது
பக்குவமாக நின்றீர்கள் என்பது

எனக்கு நினைவு வருகிறது:
உம்முடைய முகத்தை முதலில்
சாளரக் கண்ணாடியில் பார்த்தேன்-
அதன் பிற்பாடுதான், நீங்கள் நின்றதை உணர்ந்தேன்.
அன்பழகன்! எதுவும் கழிந்து விடவில்லை-
அவர்களிடம் சென்று இதை நான் சொல்ல வேண்டும்:
எனது குழந்தைகளே,
எதுவும் இல்லாது போய்விடவில்லை.
மனிதன் தனது இருப்பு எங்கிருந்து வளருகிறதோ,
அதற்கு அவன் மீளத் திரும்பவேண்டும்.
அன்பினால் அது வளரவேண்டுமென்று
எவ்வளவு உறுதியாக அவன் விரும்புகின்றான்.
இன்றிரவு தன் வயதில் அன்று இருந்ததைவிட
இன்னும் இருபத்தேழு ஆண்டுகள்
முதிர்ச்சி அடைந்துள்ள
அதே பழைய நகையகப் பெரியவர்
உங்களுடைய உள்ளங்களின் துடிப்பை
அறிவதற்கும்
அக் கணையாழிகளின் மூலம்
இருப்பின் புதிய தளம் ஒன்றை
வரையறை செய்வதற்கும்
அதே விதமாக உங்களைப் பார்த்தார் என்று
எனக்குத் தெரியும்.
எவ்வளவோ தொகையான,
பெரும் தொகையான மக்களின்
வாழ்வுகளால் நிரப்பப்பட்ட
முதிய நகையகப் பெரியவரின் வாழ்க்கை

சின்னஞ்சிறு துண்டுகளாக மாறி விட்டதா?
அன்பழகன்
தனது கணையாழியை எடுத்துச்சென்று
அதனுடன் இறந்து விட்டார்.
நான் இன்னும் அதை அணிந்திருக்கின்றேன்.

## அருட்செல்வன்

நாம் கணையாழிகளை
கையில் எடுத்த போது,
உன்னுடைய கைகள்
நடுங்குவதை உணர்ந்தேன்.
அம்மா முன்பு கூறியிருந்த
அவ் வயது முதிர்ந்தவருடைய முகத்தை
உன்னிப்பாகக் கவனிக்க
நாம் மறந்து போனோம்.
அவருடைய கண்கள்
மிகவும் பொருள் பொதிந்தவை
என்று கருதப்படுகின்றன.
அவருடைய கண்களில்
நாம் எதையும் உணரமுடியாதது
எமது குற்றமல்ல.
அவர் அதிகம் பேசவில்லை.
பேசியபோதும்
நாம் ஏற்கனவே அறிந்தவைபற்றியே
கூறினார்.

அம்மா!

அவருடைய சொற்கள்

எவ்வித சுவடுகளையும்

பதிக்கவில்லை என்பதைப்பற்றி

ஆச்சரியப்படவேண்டாம்.

(அவைகள் நமக்குத் தெரிந்தவைதானே.

அவைகளில் எதையும்

அரியனவென்று

நாங்கள் உணரவில்லை).

தாமரைச்செல்வியின்

நடுநடுங்கும் கைகள்

இன்னும் அதிகமாக எனக்கு

ஒரு சிலவற்றை எடுத்துக்கூறின.

அவள் உணர்ச்சி வசப்பட்டதையும்

அதைப்பற்றிய,

என் சொந்த அனுபவத்தைப் பற்றியும்

நான் ஆழ்ந்து

சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

அதை நான்

முற்றாகப் பகிர்ந்து கொண்டேன்.

எமது அனுபவத்தின் அடித்தளத்தில்

நம் இருவரையும் நான் பார்த்தேன்.

அவளை

அதிகமாக அன்பு செய்கின்றேன்

என எண்ணுகின்றேன்.

## தாமரைச்செல்வி

நாம் இருவரும்
ஒருவர் ஒருவரை
அன்பு செய்கின்றோம்.
நாம் நம்மை
எவ்வாறு பிரித்துக் கொள்ளமுடியும்?
அவர் எம்மை வியப்பில் ஆழ்த்த
எதையும் செய்யவில்லை.
சாதாரண கைவினைஞன்
செய்வது போல்
முதலில் அவர்
எமது விரல்களின் சுற்றளவையும்,
அதன்பின்
கணையாழிகளின் சுற்றளவையும்
சும்மா அளந்தார்.
அச் செயலில்
எக் கலைப்பண்பும் இருக்கவில்லை.
அவர் எம்மை
எம் வாழ்வுபற்றி சிந்திப்பதற்கும்
எதையும் உருப்படியாக
செய்யவில்லை.
எமது உணர்ச்சிகளில் தான்
அழகின் முழுமையும்

தங்கிநின்றது.

அவர் எதையும்
விரிவாக்கவோ
சுருக்கவோ இல்லை.
நான் எனது அன்பிலேயே
மூழ்கிப்போய் இருந்தேன்,
வேறொன்றிலும் அன்று
எனத் தோன்றுகிறது.

## மலர்விழி

இருந்தும்,
இது என்னை அச்சத்துக்குள்ளாக்கியது. . .
வயது முதிர்ந்த நகையகப் பெரியவர்
தமது கண்களினதும்
வார்த்தைகளினதும் சக்தியினால்
எதையும் இப்போது சாதிப்பதில்லையா?
அன்றேல்,
அவரது பார்வையிலும்
மொழியிலும் மறைந்திருந்த
அந்த சக்தியை
அவ்விருவராலும்
உணரமுடியாது போனதா?
அவர்கள் இருவரும்
நம்மிலும் வேறுபட்டவர்களா?

நான் அவர்களைப் பார்த்து
"மாலை வணக்கம்" என்று கூறினேன்.
அதன்பின் சிறிது நேரத்தில்

எம் உரையாடல்
திருமணத்தைப்பற்றியதாக எழுந்தது.
தாமரைச் செல்வி
தமது பெற்றோரைப்பற்றி
உடனடியாகவே குறிப்பிட்டாள்.
அவர்கள் உள்ளத்தாலும்
அங்கு இல்லை.
அவர்களுக்கு வெளியிலேயே,
ஏன்,
அவர்கள் நிலையை
பொருட்படுத்தாது கூட,
தாமரைச்செல்வியின் அன்பு வளர்ந்தது.
அப்படித்தான் அவள் நினைத்தாள்.
ஆனால்,
அது அவளிடத்தில்
அவர்கள் விட்டுச்சென்ற
தளத்திலிருந்தே வளர்ந்தது
என்று எனக்குத் தெரியும்.
தாமரைச்செல்வி
பெற்றோர்களின் அந்தப் பிளவு பற்றி
வெட்கப்படவில்லை.
அப்பிளவு,
அவளது பெற்றோர்களின் ஆன்மாக்களில்
தானாகவே குணமடைந்து வந்தது.
இருந்தும் அது அவளில் தனது
எதிரொலியை எழுப்பியிருந்தது.

பிள்ளைகளே!
நீங்கள் எதைக் கட்டி எழுப்புகிறீர்கள்?
உலகிலுள்ள ஒவ்வொரு திருமணத்தையும்
வயது முதிர்ந்த
நகையகப் பெரியவரது செய்தியுடைய
செங்கோட்டு ஊடச்சு
ஊடறுத்து நிற்கின்றது.
அச்செய்திக்கு அப்பால்
உங்களுடைய உணர்ச்சிகள்
எவ்வகையான ஒட்டிணைவாற்றலை
கொண்டிருக்கப் போகின்றன?

## தாமரைச்செல்வி

நான் எனது பெற்றோரை
எண்ணிப்பார்க்கிறேன்,
எனது பெற்றோரை
எண்ணிப்பார்க்கிறேன்!
அருட்செல்வன்!
உண்மையாக நான்
எமது திருமண நாளைப் பற்றி
கற்பனை பண்ணுவதனால்,
அதை அடிக்கடி
ஒத்திகை பார்க்கின்றேன்.
அது நாடக அரங்கில்
ஒத்திகைகள் பார்ப்பது போல்
இருக்க வேண்டும்:

அவ்வரங்கு
எனது கற்பனையினாலானது.
அவ்வரங்கு
எனது எண்ணத்தினாலுமானது.
எனது தந்தை,
ஒரு தந்தையின் பாத்திரத்தையும்
கணவனின் பாத்திரத்தையும் நடிக்க,
அம்மா,
அப்பாவின் பாத்திரத்துக்கு
உடன்பாடு தெரிவித்து
தனது பாத்திரத்தை
அதற்குரியதாக
சரிப்படுத்திக் கொள்வாள்.
அவர்களுடைய முகங்களைப் பார்த்து
எனக்குச் சலித்துப் போய்விடும்...
ஆ! நாம் நம்முடைய
சொந்த வாழ்க்கையை வாழ
எப்போது முடிவாக ஆரம்பிக்கலாம்?
நீ என் தந்தையைப்போல் அன்று
என நான் எப்போது
முடிவாக நம்பலாம்?
எப்போது நீ
எல்லா வகையான பின்னணி
இயைபுகளிலிருந்தும் விடுபட்டு
வெறும் அருட்செல்வனாக
இருக்கப்போகிறாய்.

நான் உன்னுடையவளாக இருக்க
எவ்வளவு துடிக்கிறேன்.
என் பாதையின் குறுக்கே
எப்போதும்
ஒரேயொரு தடைதான் உள்ளது:
நான் நானாக இருப்பது.

## அருட்செல்வன்

அன்பு நிறைந்த அம்மா,
தாமரைச் செல்வியில்
நான் கொண்ட அன்பின் கதை
விசித்திரமானது.
அவளுக்காகவும்
அவளது பெற்றோருக்காகவும்
நான் அவளை
என்பக்கம் ஈர்க்கவேண்டியிருந்தது.
(அவளது பெற்றோருக்கு
என்னைப்பிடிப்பதில்லை.
இப்போது ஒருவேளை
அந்நிலை சிறிது மாறியிருக்கலாம்...)
இருந்தும்,
அவளுடன் சேர்ந்து நானும்
நமது திருமணத்தில்
அவர்கள் பங்கெடுப்பதைப்பற்றி
கற்பனை செய்ய முனைந்தேன்.

எப்படியிருந்தாலும்,
அது நீ நினைப்பதிலும் பார்க்க
வேறுபட்டது,
வேறுபட்டே இருக்கும்!
மக்கள் தமது வதனங்களில்
முகமூடிகளை
அணிந்தவர்களாக மட்டுமல்லாது,
ஆழங்களை உடையவர்களாகவும்
இருக்கின்றனர்.
தாமரைச்செல்வி,
உன்னுடைய அம்மாவின்
ஆழங்களைப்பற்றியும்,
அப்பா திருவளனின்
ஆழங்களைப்பற்றியும்
உனக்கு என்ன தெரியும்?
எமது திருமண நாள் வரும்போது
நீ அவர்கள் இருவர் நடுவிலிருந்தும்
தோன்றுவாய்.
முன்பு ஒருமுறை
அவர்கள் இருவரும்
ஒரு சிறுமியின் கைகளைப் பிடித்து
கூட்டி வந்தார்கள்.
அதற்கும் முன்பதாக
நீ ஒரு பச்சைக் குழந்தை.
உன்னுடைய அப்பா
வேலையிலிருந்து வந்து
உன் அம்மா திருமகளிடம்

நீ

-தாமரைச்செல்வி-

எடை கூடியிருக்கிறாயா,
உனக்குப் பசி வருகின்றதா,
என்றெல்லாம் கேட்டார்.
நீ நன்கு உறங்குவது பற்றியும்,
உன்னுடைய
நெறுநெறெனும் பேச்சு ஒலி பற்றியும்
உன்னுடைய
சிறிய உடலில் கூடிக்கொண்டே செல்லும்
ஒவ்வொரு வீசும் கல்லெடை பற்றியும்
மகிழ்ச்சியடைந்தார்.
அப்படிக் கேட்டுக்கேட்டு
தானே குழந்தையாக மாறினார்.
தடம் எதையும் பதிக்காமல்
அத்தனையும் நடந்திருக்க முடியாது.
ஆகவே,
எமது திருமணநாள் வரும்போது
நான் அங்கு வந்து உன்னை,
துன்பத்தை எதிர்நோக்க
முதிர்ச்சிபெற்ற மனிதப்பிறவியை,
அன்பின் புதிய துன்பத்துக்கு,
அவர்களிடமிருந்து
பிரித்தெடுத்துச் செல்வேன்.
நாம் எல்லோருமே
உணர்ச்சிமிக்க மகிழ்ச்சியிலிருப்போம்.
மனித மொழியில்

இன்பம் என்று
அழைக்கப்பட வேண்டியதன் எல்லையில்
நாம் எல்லோரும் நிற்போம்.

## மலர்விழி

அருட்செல்வன்,
எனதுமகன்,
தாமரைச்செல்வியை
முறையாகக் கவனிக்கின்றான்.
தான் ஒருபோதும் அறிந்திருக்காத
தன் தந்தையின் இடத்திலும்,
தாமரைச்செல்வி
தான் இழந்துவிட்டதாக எண்ணிய
அவளது தந்தையின் இடத்திலும்,
தான் தாமரைச்செல்வி மட்டில்
இருக்க வேண்டும் என்ற
விருப்பத்தையுடையவனாக
இருந்தது போன்று
தோன்றியது அவனது பக்குவம்.
(தாமரைச்செல்வி,
ஒரு விசித்திரமான செயற்பாங்கு:
எங்களின் உள்வட்டத்தில் வாழும் ஒருவர்
நாம் அவரைப் பற்றிக்கொள்ளாமையினாற்றான்
எங்களிடமிருந்து பிரிந்து செல்கின்றார்.
இதைவிட இன்னும் மேலான விசித்திரம்,
உண்மையாக வாழ்வில் இல்லாத ஒருவரை
நமக்குள் உள்ளுணர்வினால் உருவாக்குவது.

அப்படித்தான் அருட்செல்வன்,
அன்பழகனாகிய உன்னை உருவாக்கினான்.
அவ்வாறே தாமரைச்செல்வியின்
பெற்றோராகிய திருவளனையும் திருமகளையும்
அவளில் இன்னும் உருவாக்க விரும்புகிறான்).

## மலர்விழி

அவர்களது திருமண நாள் வந்ததும்,
தாமரைச்செல்வியின் பெற்றோர்கள் இருவரும்
அங்கு நின்றார்கள்.
வெண்ணிற ஆடையுடன் அவர்கள் நடுவில்
தாமரைச்செல்வியும் நின்றாள்.
அருட்செல்வன் எனக்குப் பக்கத்தில் நடந்துவர,
அவனுடைய தகப்பனுடைய இடத்தை
மதிவாணன் எடுத்திருந்தார்.

அன்பழகனை இறுதியாகக் கண்டவர் மதிவாணனே.
இருவரும் ஒரே படைப்பிரிவில் பணி செய்தார்கள்.
மதிவாணன் போர்முனையிலிருந்து திரும்பியதும்,
என்னை உடனே சந்தித்து,
அன்பழகன் கூறியதை என்னிடம் எடுத்துரைத்தார்.
ஒரு வேளை,
அன்பழகன்
அருமையாக
அன்பு செய்தவர்கள் மட்டில்
ஒருவகை உள்ளார்ந்த பற்றையும்

மதிவாணன் வைத்திருந்திருக்கலாம்.

காரணம்,

மதிவாணன் அருட்செல்வனை வாஞ்சையுடன்

அன்பு செய்யத் தொடங்கினார்.

பையனும் அவரில் பாசம் வைத்திருந்தான்.

அவர்கள் இருவரும்

உணர்ச்சிவசப்பட்ட

உரையாடலில் ஈடுபட்டு இருப்பதை

அடிக்கடி பார்த்தேன்.

மதிவாணன்

நேரம் இல்லையென்று

தயக்கம் காட்டவில்லை.

பையனின் தந்தையின்

வெற்றிடத்தை நிரப்பினார்.

நான் சிறிது குழம்பியிருந்தேன்.

அவரது அக்கறை

என்மட்டில் இருந்ததோ என்றும்

காலப்போக்கில்

என் கரங்களைப் பற்றக் கேட்பாரோ என்றும்

நான் குழம்பியிருந்தேன்.

ஆனால்,

ஒருநாள் அவர் கூறினார்:

"ஒவ்வொரு மனிதனின்

எதிர்கால விதியையும் ஏற்றுக்கொள்ள

நான் இங்குள்ளேன் என எண்ணுகின்றேன்.

ஏனெனில் மனிதனின் முன்னைய விதியும்

என்னில்தான் வேர்கள் கொண்டிருந்தது”
இச் சொற்களை
நான் முற்றாக புரிந்து கொள்ளவில்லை.
ஆயின்,
அதற்குப்பின்,
நான் பரபரப்படையாமல்
அமைதி பெற்றிருந்தேன்
என்று எனக்குத் தெரியும்.
இப்பொழுது
நாம் விழாக்கோலம் பூண்டிருந்தோம்.
தாமரைச்செல்வி
மிகவும் அழகாகக் காட்சியளித்தாள்.
அருட்செல்வன்
சற்று வெளிறிப் போயிருந்தான்.
மெதுவாக இருவரும்
ஒருவரை ஒருவர் நோக்கி நடந்தனர்.
அதன்பின் அருட்செல்வன்
அவளது தோளைப் பற்றி
அவளை ஏற்று
இருவரும் நேராக நடந்தனர்.
(அவர்கள் சற்று
திரும்பிப் பார்த்த பொழுது
நகையகப் பெரியவரின் தொழிலகம்
அவர்களுக்கு
வலது புறத்தில் தெரிந்தது.
இளம் மணமக்கள்
கணையாழிகளை

ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டபின்
கைகளை இறுகப் பற்றிக் கொண்டு
அவ்விடத்தை விட்டு அகன்றனர்.
நாம் அவர்களோடு செல்லாது
பின்னால் தரித்து நின்றோம்).

முன்பு ஒரு முறை,
எமது எதிர்காலத்தை
மறைபொருள் தொடங்கும்
ஒரு கட்டம் வரை
அந் நகையகத்தின் சாளரம்,
விசித்திரமான ஒரு கண்ணாடி போல்
மாறியிருந்து உள்வாங்கியதாக
எனக்கு நினைவு வருகிறது.
மறைபொருள்? அறியாத புதிரா?
நமக்கு அது போதுமானதாயிருந்தது.
அச்சத்திலும் பார்க்க
அன்பு பலம் கூடியதாக
அன்று விளங்கியது
இன்றோ அவர்கள்
முன் நோக்கிச்சென்றனர்.
அவ்விசித்திரமான சாளரத்தின் கண்ணாடியில்
காணப்பட்ட தமது உருநிழற்படிவை முதலாக
அவர்கள் பார்க்கவில்லை.
எதிர்காலம் எப்படி அமையுமோ என்றும்

அரட்டிக்கொள்ளவில்லை.
அம்மறைபொருள், அறியாப்புதிர்,
அவர்களை உடனே ஆட்கொள்ளுமா?
அவர்கள் நடந்து சென்றபோது
அருட்செல்வன்
அவளின் தோள்களை இறுகப்பிடித்தான்.
அவளது பெற்றோர்பற்றிய
அவளின் நினைவுகளை
மீள் உருக்கிவார்க்க விரும்பினான்.

அவர்கள் இங்கு தங்கினார்கள்.
நானும் மதிவாணனுடன் நின்றேன்.
என் அருட்செல்வனுடைய உள்ளுணர்வுகளை
நான் அலசிப்பார்க்க வேண்டியதாக இருந்ததா?

## எழிலரசி

மதிவாணன்!
நான் உங்களை இங்கு சந்திப்பேன் என்று
ஒருபொழுதுமே நினைக்கவில்லை.
இப்பொழுதுமுதலாக
எனது உதட்டில் வரும் இப்பெயர்
பழக்கப்படாதது போல்
சிலவேளை ஒலிக்கலாம்.
உங்களுக்கு நினைவிருக்கிறதா?

இதே இடத்தில் எதிர்பாராத விதமாக
என்னுடன் உரையாடல் ஒன்றினை
தொடங்கினீர்கள்.
நீங்கள் என்னிடம் கூறினீர்கள்:
"மணமகன் இவ்வீதியின்
கீழ்ப்புறமாகச் செல்வார்".
மற்றவர்கள்
கண்ணாடிக்கூடு விளக்குகளை
காவிக்கொண்டு
அவரைச் சந்திக்க நடந்துகொண்டிருக்க
உறங்கிக் கொண்டிருந்த பெண்கள் மத்தியில்
நான் சிறிதுவேளை
சுற்றித்திரிந்து காத்திருந்தேன்.
அவர்களுடன் நான் சென்றேன்.
அவர் வந்தபோது,
அவருடைய முகத்தை
மிகக்கிட்ட உற்றுப்பார்த்தேன்.
அது மணிவண்ணனின் முகம்.
அங்கிருந்து உடனடியாக
ஓடிவிட விரும்பினேன்.

அந்நிகழ்ச்சியின் விளைவால்
குழம்பிய நான்,
இப்பொழுதாவது மீண்டும்
அமைதி பெற்று விட்டேனா?
இயைவுக்கேட்டின் உணர்வுத்திறம்
தடம் ஏதுமின்றி அழிவதில்லை.

இவ்விரு முகங்களையும்
அக்கம் பக்கமாக கொண்டுவர
என்னால் முடியவில்லை.
கொண்டுவரவும் முடியாது.
அவைகளை நான்
இனம் காணமுடியாது.

நிலத்திலிருந்து
தண்ணீர் எவ்வாறு
இரண்டாவது முறையாக
ஊற்றெடுக்க முடியாதோ,
அதேபோல் அம் மனிதன்மேல் எழுந்த
இளம்பெண்ணின்
பழைய அன்பு வற்றிவிட்டது.
அப்படியிருந்தும்
அவரில் நம்பிக்கை வைப்பதற்கு
நான் முயற்சித்தேன்.
அத்துடன்
என்னுடைய சொந்த வாழ்வையும்
என் வாழ்வு உட்பட அனைத்தையும்
நெறிப்படுத்தும் ஒழுங்கில்
நம்பிக்கை வைக்க முயற்சித்தேன்.
தவிர,
அவரை இகழ்வதை நிறுத்தி விட்டேன்.
அவரால் பாழடிக்கப்பட்ட
எனது வாழ்க்கை காரணமாக எழுந்த
அப் பயங்கர வர்ம உணர்வு

குடிகொள்வதை நிறுத்தினேன்.
என்னிடமும் இருந்த தவறைப்பற்றியும்
எண்ணத் தொடங்கினேன்.
அது இருந்தது என்பது உண்மை.
இப்போது நான் உரையாடல்களை
திடீரென்று முறிப்பதில்லை.
அவரைத் தாக்குவதற்கு
மௌனமாக இருக்கவில்லை.
அவர் மாறினாரா?
அது பற்றி எனக்குத் தெரியாது.
ஆனால்,
அவர் எனக்கு
சுமையாக இருப்பது குறைந்தது.
அதேபோல்,
சகித்துக்கொள்ளும் தன்மையை
என்னைப் பொறுத்தமட்டிலும்
அவர் பெற்றிருக்க வேண்டும்.
முன்பு நாம் ஒருவர் ஒருவரை விட்டு
தூர விலகிச் சென்ற வேகம் போல்
இப்போது இல்லாதது
உண்மையாக இருக்கலாம்.
இப்போது முன்பு இருந்தவாறே
எல்லாம் மாற்றமின்றி இருக்கின்றன.
நாம் இருவரும்
ஒவ்வொருவர் ஊடாக வாழ்கின்றோமா?
நான் அப்படிக் கருதவில்லை.
பெரும்பாலும்

நம் பிள்ளைகள் ஊடாகவே
வாழ்கின்றோம்.
தாமரைச்செல்வி —
அவளைப் பொறுத்த அளவில்தான்
மிகவும் கடினமாக இருக்கின்றது.
அவளில்தான் நாம்
அதிகமானவற்றை தியாகம் செய்தோம்.
இப்போது அவள் எம்மை
பிரிந்து போகின்றாள்.
குறித்த காலத்துக்கு முன்
பிரிந்து போகின்றாள்
என்பது எனது கருத்து.
தனது பெற்றோரின்
குற்ற உணர்வின் உறுதியையும்
தன்னுடன் காவிச் செல்கிறாள்.
(இதைப் பொறுத்தவரை,
அவள் எமக்கு பெரும்பிழையை
இழைக்கின்றாள் என
நான் நினைக்கின்றேன்.)

மணிவண்ணணின் முகத்தை
மணவாளன்
கொண்டிருக்க வேண்டியதன் நியதி
இப்போது எனக்கு விளங்குகின்றது.
நான் விவேகமற்ற கன்னியர்களில்
ஒருத்தியாக மாறினேன்.

விளக்கில் எண்ணெய்
போதியளவு வைத்திருக்காத
ஒருத்தியாக,
முறையாக எரியாத விளக்குடைய
ஒருத்தியாக மாறினேன்.
இந்நிலையால்
எனது ஆன்மாவின்
ஒவ்வொரு தசைநாரையும்
வலுவிழக்கச் செய்துவிட்டேன்.

## மதிவாணண்

அன்று மாலைவேளை நான் எழிலரசியை மீண்டும் கண்டேன். மணமகனுடனான அவளது சந்திப்பின் நினைவு இன்னமும் அவளிடத்தில் பசுமையாய் நிலைத்திருந்தது. ஒன்றை மற்றது நிறைவு செய்யும் அன்பின் பாதையில் எழிலரசி புகுந்துவிட்டாள். முன்பைவிட வெவ்வேறு அளவுகளில் கொடுத்தும் எடுத்தும் அன்பின் குறைவிடங்களை நிரப்பியும் நிற்கும் பண்புடையவளாக இருக்கவேண்டி இருந்தது. அந்த இரவில் பல்லாண்டுகளின் முன் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அக்காலத்தில் அனைத்துமே அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. மணமகனுடனான சந்திப்பு ஒன்றின் மூலமாக மட்டும் புதிய அன்பை ஆரம்பிக்க முடியும். முதன்முதலில் அதைப்பற்றிய துன்ப உணர்ச்சிகளை மட்டும்தான் எழிலரசி அனுபவித்தாள். காலப் போக்கில் படிப்படியான ஓர் அமைதி ஏற்பட்டது. புதிதான, இன்னும் தொட்டறியமுடியாத, அனுபவம் ஒன்று வளர்ந்து கெண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, அது அன்பின் “சுவையைக்” கொண்டிருக்கவில்லை.

ஒரு நாள் அவர்களால் அப் புதிய அனுபவத்தின் சுவையை நுகர்ந்து மகிழக் கற்றுக் கொள்ளமுடியும்... எது எதுவாக இருப்பினும் மணிவண்ணனையும் விட, எழிலரசி அவ்வனுபவத்திற்கு மிக அண்மையில் இருந்தாள்.

அதற்கான காரணம் கடந்த காலத்திலேயே உள்ளது. தவறு அங்குதான் நிலைகொண்டுள்ளது. எல்லையற்ற பரிமாணங்கள் அதற்கு இல்லையென்றாலும், அன்பு செய்பவர்களை அவ்வன்பு வரம்பற்ற ஒன்றைப் போல் இழுத்துச் செல்கின்றது என்பது உண்மை. ஆனால், மாயையின்கண் செயற்பட்டுக் கொண்டு, அவ்வன்பை எல்லையற்ற பரிமாணமுள்ள பேரன்புடன் அவர்கள் தொடர்புபடுத்த முயல்வதில்லை. இத்தகைய தேவையைப்பற்றி அவர்கள் சிந்திப்பதுகூட இல்லை. காரணம், உணர்ச்சிகளின் சக்தியையும் விட பணிவற்ற தன்மையினால் அவர்களின் கண்கள் மறைக்கப்பட்டுள்ளன. அன்பின் உண்மையான உள்ளியல்பு எத்தகையது என்பதுபற்றி அறியவும் அதனுடன் உறவைப் பேணவும் அடக்கம் என்பது இல்லை. அன்பின் உண்மையான இயல்பை எவ்வளவுக்குப் பெரிதாக உணர்கின்றார்களோ, அவ்வளவுக்கு சிறியதாகவே ஆபத்து இருக்கும். அன்றேல் பேராபத்து விளையும்: உண்மை நிலையின் அழுத்தத்தை அன்பு எதிர்த்து நிற்கமுடியாது.

அவ்விரவில், பல்லாண்டுகளுக்கு முன் நடந்ததற்கு எழிலரசிக்காகவும், மணிவண்ணனுக்காகவும் நான் மிக நொந்து வருத்தப்பட்டேன். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவர்கள் வளரத் தொடங்கிவிட்டார்கள். (நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகளினால் தாமரைச்செல்வி பலமான பாதிப்புக்கு உள்ளானாள்). நான் திரும்பி வரமாட்டேன் எனக்கூறி தனது புதிய போர்முனைப் புறக்காவலரணுக்கு என்னிடம் விடைபெற்று அன்பழகன் சென்றபோது அவருக்காக என்னில் எழுந்த வருத்தத்திலும் பார்க்க, இவர்களுக்காக நான் ஆழமாக வருந்தினேன். அந்தச் செய்தியை விதவையான மனைவிக்கும் அனாதையான மகனுக்கும் எடுத்துச் செல்வது எனது கடமையாயிற்று. சாவில் அன்பழகனின் இடத்தை எடுக்கமுடியாத நான், அருட்செல்வனுக்கு அவனின் தந்தையின் இடத்தை பிடிக்க முயற்சித்தேன்.

மனித இருப்பின் கால அளவு அன்பு செய்வதற்கும், அன்பு செய்யப்படுவதற்கும் மிகக்குறுகியதாக ஒரு சிலவேளைகளில் காணப்படுகிறது. வேறுசில வேளைகளில், இக்கூற்றின் மறுபுறமும் உண்மைபோல் தென்படுகிறது. இருப்பைப் பொறுத்த அளவில், மனித அன்பு மிகக் குறுகியதாகவும், ஏன், அற்பமானதாகவும்கூடக் காணப்படுகிறது. எது எப்படியிருப்பினும், இருப்பு, அன்பு என்னும் இரண்டையும் ஒவ்வொருவரும் தம்மகத்தே பயன்படுத்தும் வாய்ப்பைக் கொண்டுள்ளனர். அதிலிருந்து ஒரு நியாயமான அமைப்பை எப்படிக் கட்டுவது என்பதிற்தான் சிக்கல் உள்ளது.

ஆயின், இத்தகைய அமைப்புக்கு அகமுக நோக்கு இருக்கக்கூடாது. அது எவ்வளவுக்கு திறந்த பக்குவத்துடன் இருக்க வேண்டுமென்றால், ஒரு புறத்தில் அது மற்றவர்களை அணைக்க வேண்டும். மறுபுறத்தில், வரம்பிகந்த இருப்பையும், அன்பையும், அது எப்போதும் ஏதோ ஒரு வகையில் பிரதிபலிக்க வேண்டும்.

மலர்விழி!

அன்பழகன்!

எழிலரசி!

மணிவண்ணன்!

அதுவேதான் உங்கள் வாழ்க்கை கொண்டுள்ள இறுதியான விளக்கம்!

தாமரைச்செல்வி!

அருட்செல்வன்!

அது உங்களுக்கும் பொருந்தும்!

## மலர்விழி

மதிவாணன் எங்களின் பெயரை
ஒவ்வொன்றாக் கூறினார்.
தமது பெயரை அதற்குள் சேர்க்கவில்லை.
அவர்
நம் எல்லோருக்கும்
எதுவோ
அடிப்படைப்
பொது உடன்பாட்டு
கூறுபோல விளங்கினார்.
அதேவேளை,
குரல்தர வல்லுனர் போலும்
நீதிபதி போலும் அமைந்தார்.
அவரது சிந்தனைகளுக்கும்
பகுத்தாய்வுப் பார்வைக்கும்
அவரது இதயத்துக்கும்
ஒரு வகையில் நாம் எம்மை
அமைதியாக
கையளித்துவிட்டோம்.
இவை அனைத்தும்
இருந்தன, நகர்ந்தன,
அல்லது இன்னும் ஓர்
அமைப்பை நோக்கி
மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன.
இளம் வயதினரிடமிருந்து
எண்ணத்தையும் உள்ளத்தையும்
பிரித்து எடுப்பது கடினமானது:

தாமரைச்செல்வியும் அருட்செல்வனும்
வரம்பிகந்த இருப்பையும் அன்பையும்
ஏதோ ஒரு வகையில் பிரதிபலிக்கின்றனர்.
எவ்வாறு?
இவ்வினா இட்டுச்செல்லும் முடிவுவரை
யாரும் கேள்வி கேட்கக்கூடாது.
(நான் அன்பழகனுடன் சேர்ந்து
அண்மிய எதிர்காலத்தைப்பற்றி
பார்த்த கண்ணாடி
அங்கு இருக்கவும் இல்லை).
ஆம்! நகையகத்தின் பெரியவர்
தமது தொழிலகத்தைத் தாளிட்டுவிட்டார்.
வாலிப வயதுள்ள அவ்விருவரும்
அகன்று சென்றுவிட்டார்கள்.
அவர்கள் எதை
பிரதிபலிக்கின்றார்கள் என்றாவது
அவர்களுக்குத் தெரியுமா?
யாராவது அவர்களை
பின் தொடர வேண்டுமா?
ஆனால், எப்படியோ, அவர்களுக்கும்
சொந்த எண்ணங்கள் உள்ளன.
அவர்கள் இங்கு திரும்பி வருவார்கள்.
கட்டாயமாகத் திரும்பிவருவார்கள்.
சிறிதுகாலம்
ஆழ்ந்து சிந்திப்பதற்காகவே

போய்விட்டார்கள்:

ஒன்றை உருவாக்குவதும்,
வரம்பற்ற இருப்பையும்
அன்பையும் பிரதிபலிப்பதும்
எல்லாவற்றையும்விட
அற்புதமாக இருக்கவேண்டுமே!
ஆனால்,
அதைப்பற்றிய அறியாமையில்
ஒவ்வொருவரும்
வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.


## மணிவண்ணன்

மதிவாணனும், அருட்செல்வனின் தாயான மலர்விழியும் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர் என்று எனக்கும் தெரியவில்லைப்போலிருந்தது. அதற்கு சற்றுமுன், தனது வாழ்க்கையின் பல்லாண்டுகால பிற்பகுதிபற்றி எழிலரசி மதிவாணனிடம் முழுமையாக ஒளிவுமறைவின்றி கூறிக்கொண்டிருந்ததுபோல் தோன்றியது. எனது "முகத்தைக் கொண்டதுபோல்" தோன்றிய மணமகனைப்பற்றிப் பேசிமுடிந்ததும், தாமரைச்செல்வி பற்றி உடனடியாக உரையாடினாள். ஒன்றேயொன்றுதான் எனக்கு மிகவும் தெளிவாக விளங்கியது: எந்தவிலை கொடுத்தாயினும், தாமரைச்செல்வி எங்களைப்பிரிந்து செல்லவிரும்புகிறாள். ஏன்? எதற்காக?

"வரம்பில்லா இருப்பையும் அன்பையும் பிரதிபலிப்பது" என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால், தாமரைச்செல்வி எங்களைப்பிரிந்து செல்ல இப்படி உறுதியாக நிற்கின்றாள் என்றால், அது எதனாலே என்பது எவ்வித ஐயத்துக்கும் இடமற்ற வகையில் எனக்குத் தெரியும். நாங்கள் இருவரும், அதாவது எழிலரசியும் நானும், வரம்பிதந்த இருப்பையும் அன்பையும் தவறாகவே பிரதிபலிக்கின்றோம். இதை நான் நன்றாகப் புரிந்துகொண்டேன். ஏதோ ஒரு வகையில் அது என்னை வருத்துமடையச் செய்கின்றது.

அவ்வேளை, பல்லாண்டுகளுக்குப்பின் முதன் முறையாக எனது ஆன்மாவைத் திறந்து எழிலரசியிடம் வெளிப்படுத்தக்கூடிய ஒன்றை சொல்ல வேண்டிய தேவையை உணர்ந்தேன். (இது என்னில் நானே குற்றத்தைச் சுமத்தும் முயற்சியாக இருந்தது. ஏன், அக்குற்றத்தை இரு கூறாகப் பிரித்து நம் இருவர்மேலும் சுமத்தும் ஒருமுயற்சிதான் என்றாலும் மிகப் பொருந்தும்.) எது எதுவாக இருப்பினும், நான் அவளிடம் சென்று அவளது தோளில் எனது கைகளைப் போட்டேன். (மிக நீண்ட காலமாகச் இப்படி நான் செய்ததில்லை.) இவ்வார்த்தைகளையும் நான் கொட்டினேன்:

"இத்தனை ஆண்டுகளாய் இரு குழந்தைகளைப் போல் நாம் இருக்கவேண்டும் என்பதை உணராதிருந்தது எவ்வளவு வருந்தத்தக்கது.
மலர்விழி! மலர்விழி! அதனால் நாம் எதனை எதனையெல்லாமோ இழந்துவிட்டோம்".



# நிறைவு



# நகையகம்

வெளியீடு - திருமறைக் கலாமன்றம்